தர்மசக்கரம்



துந்துபி ௵ ஐப்பசி ௴ சக்கரம் 31 ஆரம் 10

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

திருப்பராய்த்துறை, எலமனூர் ஸ்டேஷன், திருச்சி ஜில்லா.

தர்ம சக்கரம்

மாத சஞ்சிகை

சக்கரம் 31 | துந்துபி ஹூ ஐப்பசி மீ | ஆரம் 10

பொருளடக்கம்

சந்தா விவரம்

டிபாஸிட் சந்தா: ரூ. 150 அனுப்பி இங்கு டிபாஸிட் செய்துவிட்டால் டிபாஸிட் இங்கு இருக்கும்வரையில் மாதந்தோறும் தர்ம சக்கரம் பத்திரிகை தங்களுக்குவந்து கொண்டிருக்கும். ஆண்டுதோறும் சந்தா செலுத்திப் புதுப்பிக்கவேண்டியதில்லே. பத்திரிகை வேண்டாம் என்று கருதும்பொழுது டிபாஸிட்செய்த ரூபாய் நூற்றைம் பதையும் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். இந்தத் திட்டம் உள்நாட்டுக்கு மட்டும் உரியது.

ஆண்டு சந்தா: ரூ. 15 செலுத்தியதுமுதல் அல்லது அடுத்த மாதம்முதல் பன்னிரண்டு மாதங்களுக்கு ஒவ்வொரு தமிழ் மாதமும் முதல் தேதியில் கிடைக்கும் படி பத்திரிகை அனுப்பப்படுகிறது.

சகாய சந்தா: மாத வருவாய் ரூ. 200 அல்லது ஆண்டு வருவாய் ரூ. 2400க்கும் குறைவாக உள்ளவர்கள் ஆண்டு சந்தா பதினேந்து செலுத்த இயலாது இருந்தால் ரூபாய் பத்து அனுப்பலாம். பாக்கி ரூபாய் ஐந்தைப் பாண்டிச்சேரி S. விஸ்வநாதன் 'தர்ம சக்கர உதவிநிதி' யினின்று ஈடுசெய்து கொள்கிறோம். தெய்விக விஷயமாத லால் ரூ. 15 செலுத்த இயலுகிறவர்கள் இந்தச் சலுகையைப் பயன்படுத்த வேண்டாம்.

தமிழ் நாட்டிலும் பாண்டிச்சேரியிலும் உள்ள அரசாங்கப் பொது நூலகங்கள் அனேத்துக்கும் தர்ம சக்கரம் அன்பர்களின் உதவியால் தொடர்ந்து அனுப்பப்பெறு கிறது. நூலக நிர்வாகியிடம் கேட்டுப்பெற்றுப் படித்துப்பயனடையக்கோருகிறோம்.

உள்நாடு வருட சந்தா ரூ. 15-00 வெளிநாடு வருட சந்தா ரூ. 35-00

அந்தர்யோக விவரங்கள்

சேலத்தில்—அக்டோபர் 18, 19, 20 திங்கள், செவ்வாய், புதன் மூன்று நாட்கள் சக்திபூஜை அந்தர்யோகம்.

இடம்: ஸ்ரீ ஸாரதா ஸமிதி

நடத்துபவர்; ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்

விவரம்: புரட்டாசி மாத தர்மசக்கரம் அட்டை 4ஆம்பக்கத்தில் வெளிவந்துள்ளது

திருப்பராய்த்துறையில்—அக்டோபர் 24, 25, 26, ஞாயிறு, திங்கள், செவ்வாய் மூன்று நாட்கள் சக்தி பூஜை அந்தர்யோகம்.

இடம் : ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

நடத்துபவர் : ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்

விவரம் : புரட்டாசி மாத தர்மசக்கரம் அட்டை 2ஆம்பக்கத்தில் வெளிவந்துள்ளது

சென்னை புரசவாக்கத்தில் 7—11—82 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸர். M. C. T. முத்தையா செட்டியார் பெண்கள் உயர்நிலைப்பள்ளி

நேரம்: காலை 10-00 மணி முதல் மாலை 4-30 மணி வரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

திருநெல்வேலி ஜில்லா—அம்பாசமுத்திரத்தில் 7—11—82 ஞாயிற்றுக்கிழமை

இடம்: அருள்மிகு அகஸ்தியர் கோவில்

நேரம்: காலை 9-30 மணி முதல் மாலை 4-30 மணி வரை

நடத்துபவர் : ஸ்ரீமத் சுவாமி திவ்யானந்தர்

प्रज्ञानं ब्रह्म

தர்ம சக்கரம்

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்(கு) அல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

சக்கரம் 31 | துந்துபி ௵ ஐப்பசி ௴ | ஆரம் 10

பிரார்த்தனை

नमस्तस्मै नमस्तस्मै नमस्तस्मै महात्मने ।
नामरूपं न यस्यैको योऽस्तित्वेनोपलभ्यते ॥

— विष्णु पुराणम्

நமஸ்தஸ்மை நமஸ்தஸ்மை நமஸ்தஸ்மை மஹாத்மனே ।
நாமரூபம் ந யஸ்யைகோ யோऽஸ்தித்வேனோபலப்யதே ॥

— விஷ்ணு புராணம்

நாமமும் வடிவமும் அற்ற மெய்ப்பொருளாகிய மஹாத்மனுக்குத் திரும்பத் திரும்ப வணக்கங்கள் உரியனவாகுக.

மாசற்ற அன்பர்நெஞ்சே மாருத பெட்டகமாத்
தேசுற்ற மாமணிநின் தேசினையுங் காண்பேனே.

— தாயுமானவர்

அருள் விருந்து

அமைதியும் அடக்கமும் ஒன்றேயாம்.

தூய அவா அதிவிரைவில் நிறைவேறப் பெறுகிறது.

உள்ளத்தினுள்ளே மனச்சாட்சியாய் இலங்குபவன் ஈசன்.

தக்க மனநிலைக்கேற்ப மந்த்ர ஜபம் நன்கு பயன்படுகிறது.

தன்னிலும் கீழோரைத் தன்மயமாகக் கருதுவது ஆத்ம சாதனம்.

மனத் தூய்மையினின்று அமைதியும் ஆனந்தமும் உண்டாகின்றன.

நலனைப் பிறர்க்கு வழங்குதற்கேற்ப மனிதன் தானே நலமடைகின்றான்.

உண்மையை நாடுவதும் அதற்கொப்ப வாழ்வதும் சமயத்தின் நோக்கமாம்.

மனிதனிடத்துள்ள மேன்மையை அவனுக்கு ஞாபகமூட்டுவது சிறந்த பணிவிடையாம்.

பெரும் பயன் அளிக்கவல்லது வாழ்வு. அதை அறிந்து நடப்பது சமய அனுஷ்டானம்.

தியாகமும் பிரம்மச்சரியமும் மனிதன் அடைய விரும்புகின்ற மேன்மைக்கு உற்ற உபாயங்களாம்.

இளைஞர்களுக்கு முதியோர்களுடைய மனபரிபாகம் வேண்டும். முதியோர்களுக்கு இளைஞர்களுடைய ஊக்கம் வேண்டும்.

கல் முதல் கடவுள் தன்மை ஈறாக எல்லாவிதமான பாங்குகளுடனும் இலங்குவது மானுட இனம். இதுவே மானுடப் பிறவியின் சிறப்பு.

துயரத்தின் மூலம் மனிதன் ஆத்ம பரிபாகம் அடைகிறான். உண்மையை அறிந்துகொள்வதற்கேற்ப மனிதனுக்கு உறுதிப்பாடு வருகிறது.

கிழிந்துபோன சட்டையை முன்னிட்டு மானுடன் ஒருவன் தன் தரத்தில் தாழ்ந்தவனாவதில்லை. அங்ஙனம் அங்கஹீனத்தை முன்னிட்டு ஆத்ம சொரூபம் பாதிக்கப்படுவதில்லை.

புலி தன்னை வந்து தாக்குவதாக மனிதன் கனவு காண்கிறான். அது அவனுடைய மனதின் சிருஷ்டி. நனவில் மனிதன்படுகிற துயரமும் தனக்குத்தானே பண்ணிக்கொள்ளுகிற சிருஷ்டியாம்.

பரமஹம்சர் புகட்டிய

பெருநெறி விளக்கம்

பரமஹம்சதேவர்: ''படைத்தல், காத்தல், துடைத்தல் ஆகிய கிருத்தியங்களில் ஈடுபட்டிருக்கின்றபொழுது பரம்பொருளுக்குப் பராசக்தி என்று பெயர் வந்தமைகிறது. பரவஸ்துவை ஞானிகள் பிரம்மம் எனப் பகருகின்றனர். அதே பொருளைப் பக்தர்கள் காளிகாதேவி எனக்கூறுகின்றனர்.

''பிரம்மம் வேறு, சக்தி வேறு எனப்பாகுபடுத்தலாகாது. தீயும் அதனுடைய தகிக்கும் பாங்கும் ஒன்றேயாம். அதே விதத்தில் தோன்ரு நிலையில் உள்ள பிரம்மமும் தோற்றத்துக்கு வந்துள்ள சக்தியும் ஒன்றேயாம். தீயைப்பற்றி நினைக்கின்றவன் அதனுடைய சுடும் தன்மையையும் நினைத்தாக வேண்டும். காளிகாதேவியின் உபாசனையின் வாயிலாகவே ஆத்மசாதகன் ஒருவன் பரபிரம்மத்தை அனுபூதியில் அறிய வருகிருன். இனி, பரபிரம்மத்தை அனுபூதியில் அறிகிறவன் அதே பொருள் அன்னையின் சொரூபமாக இலங்கிக்கொண்டிருக்கிறது என்னும் உண்மையை அறிய வருகிருன். பரபிரம்மமும் அப்பரபிரம்மத்துக்கு அன்னியமல்லாத பராசக்தியும் தத்துவத்தில் ஒன்றேயாம். பரபிரம்மத்தைக் காளிகாதேவியாக வைத்து நான் உபாசிக்கிறேன்.''

அன்று இரவு சம்பாஷணையில் இங்ஙனம் நேரம் அதிகம் கடந்துபோயிற்று. ஹரிபாதரிடம் தமக்கு வாட்கை வண்டி யொன்று அமர்த்திக்கொண்டு வரும்படி கிரீஷ்சந்திர கோஷர் வேண்டினுர். ஏனென்ருல் அவருடைய நாட்கக்கொட்ட்கைக்கு அவர் போக வேண்டியிருந்தது. ஹரிபாதர் அதன் பொருட்டு அறையினின்று புறப்பட்டார். அப்பொழுது புன்னகை பூத்த முகவிலாசத்துடன் பரமஹம்சதேவர் பகர்ந்ததாவது: ''வாட்கைவண்டியா, எனக்கும் ஒன்று தேவை என்பதை மறந்துவிட்வேண்டாம்.'' இதைக்கேட்டு எல்லாரும் கொல்லென்று நகைத்தார்கள்.

புன்முறுவலே வடிவெடுத்திருந்த ஹரிபாதர் பகர்ந்ததாவது: '' ஆம் ஐயனே, நான் வெளியே போவது முக்கியமாகத் தங்கள் தேவையை நிறைவேற்றுதல் பொருட்டேயாம். அது விஷயத்தில் பராமுகமாக இருக்க எனக்குச் சாத்தியப்படுமா?''

கிரீஷ்சந்திரகோஷர்: ''ஐயனே, நான் இப்பொழுது ஒரு நெருக்கடியில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறேன். முதலில் தங்களைத் தக்ஷிணேசுவர ஆலயத்துக்கு அனுப்பி வைத்துவிட்டுப் பிறகு நான் நாட்கக்கொட்டகைக்குப் போவது முறை. அதற்கு நேர் மாருகக் கிருபை கூர்ந்து இந்த இல்லத்துக்கு எழுந்தருளியுள்ள தங்களை, இங்கே விட்டு வைத்துவிட்டு நான் நாட்கக்கொட்டகைக்கு முந்துவது முறையா?''

பரமஹம்சதேவர்:''இல்லை, இல்லை. நீ செய்வதில் பிழை ஏதுமில்லை. நீ நாட்கக்கொட்டகைக்கும் போயாக வேண்டும்; என்னையும் அனுப்பி வைத்தாகவேண்டும். எனவே இந்த இரண்டு செயல்களும் சேர்ந்தே நடைபெறுவன ஆகுக. ஜனக மஹாராஜா உலக வியவஹாரங்களையும் நன்கு கவனித்தார்; பரநாட்டத்தில் தீவிரமாகவும் நிலைத்திருந்தார். பிரபஞ்ச வாழ்வு என்னும் சௌபாக்யத்தைப் பரிபூரணமாக அனுபவித்தவரும் அவரேயாம்.'' இதைக் கேட்டு எல்லாரும் மகிழ்வுடன் நகைத்தார்கள்.

''ஆத்ம சாதகன் ஒருவன் கட்வுளை அணுக அணுக அவரைப்பற்றி விவாதம் பண்ணுவது குறைகிறது. பரம்பொருளை அடைந்தான பிறகு அவரைப் பற்றிப் பேசுவதும், விவாதம் பண்ணுவதும் தாமாக நின்று விடுகின்றன. பேச்சற்ற அந்நிலை சமாதி எனப்படுகிறது. அது தூங்காத தூக்கம். பரம்பொருளோடு யாண்டும் இணங்கியிருப்பது அந்நிலையாம்.''

ஹரி ஓம், ஹரி ஓம், ஹரி ஓம் என்று பகர்ந்து கொண்டு பரமஹம்சதேவர் நரேந்திரனுடைய மேனியைத் தட்விக்கொடுத்தார். கருணுகர முகங்கொண்டு அவனுடைய

மோவாய்க்கட்டையைத் தீண்டினார். இங்ஙனம்செய்துகொண்டிருக்கையில் அவருடைய மனது அதிவிரைவில் உள்முகமாக நாடி அதீதத்தின்கண் சென்றது. அவருடைய திருக்கரம் நரேந்திரனுடைய பாதத்தின் மீது கிடந்தது. அந்நிலையிலிருந்த வண்ணம் நரேந்திரனுடைய மேனியை மீண்டும் ஒரு தடவை தடவிக்கொடுத்தார். அவருடைய மனத்தகத்து இப்பொழுது இன்னொரு வித பாவம் வடிவெடுத்தது. கைகூப்பிக்கொண்டு நரேந்திரனிடம் அவர் பகர்ந்ததாவது: ''பாட்டல் ஒன்றுபாடுவாயாக. அதைக்கேட்டதும் என் மனம் சாதாரண நிலைக்கு வந்து விடும். அப்படியில்லாவிட்டால் என் சுயப் பிரயத்தனம் கொண்டு எழுந்து நிற்பதே எனக்குச் சாத்தியப்படாது.'' மற்றும் ஒரு முறை அவர் மனது அதீதத்தில் மூழ்கியது. வார்த்த விக்ரஹம் போன்று அவர் அசைவற்று இருந்தார். அதன் பிறகு பாரமார்த்திகப் பேரன்பு அவருடைய உள்ளத்தில் ஊற்றெடுத்தது. அப்பேரன்பை அவர் இங்ஙனம் விளக்கினார்: ''ஓ ராதையே, உன்னுடைய பாதங்களை எங்கே நாட்டுகிறாய் என்பதைப் பற்றி எச்சரிக்கையாயிரு. இல்லாவிடில் பரவசத்தின் விளைவாக நீ யமுனை நதியில் விழ நேரிடும். ஹா! கண்ணன்பால் அவள் வைத்துள்ள பேரன்புதான் எத்தகையது!'' ஸ்ரீமதி ராதையின் தோழிகளாகிய கோபிமார்கள் இங்ஙனம் அவளிடம் மொழிந்தார்கள். இக்கருத்தை இப்பொழுது பரமஹம்சதேவர் தம்முடையதாக்கிக் கொண்டு திருவாய் மலர்ந்தருளினார்.

இத்தகைய ஆனந்தப் பரவச நிலையிலிருந்துகொண்டு பரமஹம்சதேவர் பாடிய தாவது:

''தோழியே, தயவு கூர்ந்து பகருவாயாக. என் பிராணநாதன் கண்ணன் வசித்திருக்கும் பிருந்தாவனச்சோலை எங்கே இருக்கிறது? அவனிடம் கமழ்கின்ற நறுமணம் நெடுந்தூரத்திற்கு அப்பாலிருக்கும் இவ்விடத்தை எட்டுகிறது. நானோ களைத்துப் போயிருக்கிறேன். மேற்கொண்டு ஓர் அடி கூட எடுத்துவைக்க எனக்கு இயலாது.''

இப்பொழுது பரமஹம்ச தேவருடைய மனது அறவே புறவுலகை விட்டு அதீதத்தில் மூழ்கியது. அறையில் அமர்ந்திருந்தவர்களைப் பற்றிய எண்ணம் அறவே அவருடைய மனதை விட்டு அகன்றோடிப் போயிற்று. நரேந்திரனையும் அவர் மறக்கலாயினர். தம் மேனியைப் பற்றிய உணர்ச்சியும் அப்பொழுது அவருக்கு இல்லை. பரபோதத்தில் முற்றிலும் அவர் லயமாயிருந்தார். பாரமார்த்திகப் பேரன்பு என்னும் மதுபானம் பண்ணியவராக அவர் திடீரென்று ஓலமிட்டவராக எழுந்து நின்றார். மீண்டும் அமரும்பொழுது அவர் மொழிந்ததாவது: ''பேரொளி ஒன்று அணுகி வருவதை நான் தரிசிக்கிறேன். ஆனால் அது எங்கிருந்து வருகிறது? என்று எனக்கு விளங்கவில்லை.''

இப்பொழுது நரேந்திரன் பாட்டல் ஒன்று பாடினான். அதில் அடங்கியிருந்த கருத்தாவது: ''இறைவா, உன்னுடைய முகவிலாசத்தின் காட்சியைக் கொடுத்தருளி என் உள்ளத்தை வாட்டிய துயரம் அனைத்தையும் நீ துடைத்துத் தள்ளிவிட்டாய். உன்னுடைய சௌந்தரியத்தின் மஹிமை என் உள்ளத்தை முற்றிலும் கவர்நது கொண்டது. உன் தரிசனம் அடையப்பெற்று ஏழு உலகத்தவரும் தாம் ஓயாது படும் துயரம் அனைத்தையும் துடைத்துத்தள்ளி விட்டனர். பிறகு என்னைப்பற்றி இயம்புதற்கு யாது உளது? இம்மாயப்பிரபஞ்சத்தில் காப்பார் அற்று அலைந்து திரிந்த அனாதைக்கு நிகரான நானும் உய்வடையலாயினேன்.''

இப்பாட்டைக் கேட்டதும் பரமஹம்ச தேவர் மீண்டும் சமாதியிலே ஆழ்ந்து மூழ்கினார். அவருடைய நயனங்கள் உள்முகநாட்டத்தில் ஒளிர்ந்து கொண்டிருந்தன. அவருடைய திருமேனியோ அசைவற்று இருந்தது.

இத்தகைய ஆனந்தப் பரவச நிலையிலிருந்து அவர் மீண்டும் இந்நிலவுலக ஞாபகத்தை அடையப் பெறலாயினர். அறையினுள் அவர் சுற்றிப்பார்த்தார். அதன் பிறகு அவர் இயம்பியதாவது: ''என்னைத் தக்ஷிணேசுவர ஆலயத்துக்கு யார் அழைத்துச் செல்வார்கள்?'' தன்னுடன் விளையாடிக்

கொண்டிருந்த சிறுவர்களை விட்டுப் பிரிந்து மனம் குழம்பிக்கிடக்கும் குழந்தை ஒன்றுக்கு நிகராக இந்நிலையில் பரமஹம்சதேவர் தென்பட்டார்.

மாலை நேரம் தாண்டி நள்ளிரவு வந்திருந்தது. எங்கும் ஒரே இருள்மயம். பரமஹம்ச தேவரைத் தக்ஷிணேசுவர ஆலயத்துக்கு இட்டுச் செல்லும் வாடகைவண்டி வந்து நின்றுகொண்டிருந்தது. பக்தர்கள் எல்லாரும் அதைச் சூழ்ந்து நின்றனர். வண்டியில் பரமஹம்சதேவர் ஏறியபொழுது அன்பர்கள் சிலர் அவருடைய கரங்களைத் தாங்கிப் பிடித்து உதவி பண்ணினார்கள். ஏனென்றால் அதீதத்தின்கண் சென்றிருந்த அவருடைய மனது இன்னும் முற்றிலும் இந்நில வுலக வாழ்வுக்குக் கீழே இறங்கி வந்திருந்தன் அறிகுறிகள் தென்படவில்லை. வீதியின்கண் வண்டியும் நகரலாயிற்று. கூடியிருந்த அன்பர்கள் பக்திபூர்வமாக அவ்வண்டியைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

அதன் பிறகு அன்பர்கள் அவரவர் இல்லங்களை நோக்கிக் கலைந்து போயினர். அவ்வேளையில் இனிய தென்றல் அவர்கள் மீது வீசிக்கொண்டிருந்தது. அவர்களுள் ஒரு சிலர் அடங்கிய குரலிலே பாடல் ஒன்றைப் பாடினர். அதன் உட்கருத்தாவது: ''இறைவா, உனது திருமுக விலாசத்தைத் தரிசித்தபின் என் துயரம் பறந்தோடிவிட்டது. உன் மேனியின் மஹிமை என் மனதை அறவே கவர்ந்துகொண்டது.''

1885ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 6ஆம் தேதியன்று நிகழ்ந்த சத்சங்க விவரம் வருமாறு: கல்கத்தாவிலே பாக்பஜார் என்னும் பகுதியிலே திருவாளர் பலராம்போஸின் மாளிகையிலே முன்மண்டபத்திலே வீற்றிருந்துகொண்டு பரமஹம்சதேவர் மகேந்திர நாதரோடு உரையாடுவாராயினர். அன்று நண்பகல் மிகப் புழுக்கமாகவிருந்தது. பிற்பகல் மணி மூன்று ஆன பின்பும் கோடையின் வெப்பம் தணியவில்லை. அன்றைய தினம் பரமஹம்சதேவர் தம்முடைய இளம்சிஷ்யர்கள் சிலரைக் காணுதற்பொருட்டும் தேவேந்திரருடைய இல்லத்துக்கு விஜயம் செய்தல் பொருட்டும் கல்கத்தாவிற்கு வந்திருந்தார்.

மகேந்திரரிடம் பரமஹம்சதேவர் பகர்ந்ததாவது: ''இன்று பிற்பகல் மூன்று மணிக்கு இங்குவருவேனென்று பக்தர்களிடம் வாக்குக்கொடுத்திருந்தேன். அதன்படியே நான் இப்பொழுது இங்கே வந்துள்ளேன். ஆனால் வெப்பம் மட்டும் குறைந்தபாடில்லை.''

மகேந்திரர்: ''ஆம் ஐயனே, புழுக்கம் பொறுக்க முடியாததாயிருக்கிறது. அது தங்களுக்குப் பெரும் சிரமத்தை உண்டு பண்ணியிருக்கும் என்று யூகிக்கிறேன்.''

பக்தர் ஒருவர் பரமஹம்சதேவருக்கு விசிறி வீசிக்கொண்டிருந்தார்.

பரமஹம்ச தேவர்: ''பாபுராமனையும், இளைய நரேந்திரனையும் சந்திக்க நான் இங்கே வந்துள்ளேன். இளைஞன் பூரணனை நீ ஏன் இங்கே அழைத்துவரவில்லை?''

மகேந்திரர்: ''பக்தர்கள் கூடியுள்ள இடத்துக்கு வர அவன் தயங்குகின்றான். பிறர் முன்னிலையில் வைத்துக்கொண்டு தாங்கள் அவனைப் பாராட்டிப் பேசுவதை முன்னிட்டு அவன் அஞ்சுகிறான். மேலும் தாங்கள் அவன்மீது வைத்துள்ள அபிமானத்தைப்பற்றிய செய்தி அவனுடைய உற்றாருக்கு எட்டக்கூடும். தங்களோடு அவன் வைத்திருக்கும் இணக்கத்தை முன்னிட்டு அவனுடைய உற்றார் ஆக்ஷேபம் செய்வார்கள். அத்தகைய சங்கடநிலை வேண்டாம் என்கின்ற எண்ணத்தை முன்னிட்டே அவன் இப்போது இங்கே வரவில்லை.''

பரமஹம்சதேவர்: ''ஆம், அது முற்றிலும் சரி. அத்தகைய நெருக்கடி மேலும் நிகழாவண்ணம் நான் பார்த்துக்கொள்கிறேன். பூரணனுக்குப் பாரமார்த்திக விஷயங்களைப் பற்றி நீ பாடம் நடாத்தி வருவதாக நான் அறிய வருகிறேன். அது மிக நன்று.''

மகேந்திரர்: ''பள்ளிக்கூடப் பாடப்புத்தகம் ஒன்றில் இதே கருத்து ஒன்று அமைந்திருக்கிறது. அதாவது 'உள்ளன்புடன் பரமனை நேசிப்பாயாக. மேலும் உன்னை நீ நேசிப்பது போன்று உன் அயலானையும் நேசிப்பாயாக.' இத்தகைய மேலாம் போதனைகள் பிள்ளைகளின் பெற்றோருக்கும் காப்பாளர்களுக்கும் பிடிக்கவில்லையென்றால் அதற்கு நாம் செய்யக் கிடப்பது யாது?''

எந்நாள் கண்ணி

(தாயுமானவர் இயற்றியது)

**8-4. எட்டுத் திசைக்கீழ்மேல் எங்கும் பெருகிவரும்
வெட்டவெளி விண்ஆற்றில் மெய்தோய்வது
எந்நாளோ.**

விண்ணுறு-அமிர்தப்ரவாகம், பேரின்பப் பேராறு.

கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு ஆகிய நான்கு திசைகளும், இவைகளுக்கிடையே உள்ள நான்கு திசைகளும் சேர்ந்து எட்டுத் திசைகளாகின்றன. இனி, தலைக்கு மேல் இருக்கின்ற வெட்டவெளியும், பாதத்துக்குக் கீழே இருக்கின்ற பூமியும் அதற்குக் கீழிருக்கின்ற வெட்ட்வெளியும் சேர்ந்து திக்குக்கள் பத்து ஆகின்றன. நீக்கமற எங்கும் வியாபித்துள்ள வெட்ட வெளியானது இங்ஙனம் இயம்பப்படுகிறது. மனிதன் படைத்துள்ள மனதின் வாயிலாகவும் இந்திரியங்கள் வாயிலாகவும் இந்த வெட்ட்வெளி அறியப்படும் பொழுது இது ஜடாகாசம் என்னும் பெயர் பெறுகிறது. இதே ஜடாகாசம் பரபோதத்தின் வாயிலாக உணரப்படுகின்றபொழுது இதற்குச் சிதாகாசம் என்னும் பெயர் வந்தமைகிறது. ஆகவே எங்கும் நிறைந்துள்ள ஜடாகாசமும் சிதாகாசமும் தத்துவத்தில் ஒன்றே. ஆத்மசாதகன் படைத்துள்ள ஜீவபோதத்தைப் படிப்படியாகக் கரைக்கின்றபொழுது அந்தச் சாதகனுடைய அனுபவம், நதியொன்று கடலினுள் வந்தடைவதைப் பெரிதும் ஒத்திருக்கிறது. கடலினின்று ஆவியாக மேலே கிளம்பிய நீர் வானவெளியில் வெவ்வேறு வடிவெடுத்து விளங்குகிறது. பிறகு மழையாக நிலவுலகுக்குத் திரும்பி வருகிறது. நிலவுலகிலே அது சிற்றோடை, பேரோடை, சிற்றாறு, பேராறு இங்ஙனமெல்லாம் வடிவெடுத்துத் தான் புறப்பட்ட இடத்துக்கே, அதாவது கடலை நோக்கிப் பாய்கிறது. கடலுக்குப் பக்கத்தில் வந்த பிறகு அந்த நதியில் பொங்குதலும் வடிதலுமாகிய நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. இதற்கு நிகராகப் பரவஸ்துவினின்று ஜீவவியக்தியாக வடிவெடுத்துள்ள ஜீவாத்மா வெவ்வேறு விதங்களில் பரிணமிக்கிறது. கல், புல் நிலையிலிருந்து பரிணமித்துப் படிப்படியாக மேல் நோக்கி வந்து மானுட நிலையை எட்டுகிறது. பிரபஞ்ச வாழ்வைப்பற்றிய அனுபவம் மானுட நிலையில் தெளிவுற அமைகிறது. பல பிறவிகளுக்குப் பிறகு இப்பிரபஞ்ச வாழ்வில் அந்த ஜீவனுக்கு விரக்தி வந்தமைகிறது. பற்றற்ற நிலையே விரக்தி எனப்படுகிறது. விரக்தி ஓங்குதற்கேற்பப் பரநாட்டமும் அதிகரிக்கிறது. அத்தகைய பெரிய நிலையை ஆத்மசாதகன் ஒருவன் அடையுமிடத்துக் கடலை அணுகிய நதியோடு அவன் ஒப்பிடப்படுகிறான். கடலுக்குப் பக்கத்தில் உள்ள நதியில் பொங்குதலும் வடிதலும் மாறி மாறியமைவதுபோன்று பரம்பொருளுக்குப் பக்கத்தில் வந்துள்ளஜீவாத்மனுக்கு அருள்நாட்டம் விதவிதமாக மாறியமைகிறது. இறுதியாகக் கடலினுள் சென்றுள்ள நதியானது நதி என்னும் தன் பெயரை இழந்துவிட்டுக் கடல் என்னும் பெயர் பெறுகிறது. அதே விதத்தில் முற்றிலும் பரிபாகமடைந்துள்ள ஜீவாத்மன் மனம், மேனி முதலிய உபாதிகளைத் துடைத்துத் தள்ளிவிட்டுப் பரத்தில் ஒன்றுபடுகிறான். இக்கோட்பாடு இக்கண்ணியில் அடங்கியிருக்கிறது.

**8-5. சூதானம் என்று சுருதியெல்லாம் ஓலமிடும்
மீதானம் ஆனவெற்பை மேவுநாள் எந்நாளோ.**

சூதானம்—அறிந்துகொள்ளுதற்கு மிக நுண்ணியதாகவும் நுட்பமாகவும் உள்ள பரவெளி.

மீதானம்—முகத்திலே இரண்டு புருவங்களுக்கு இடையிலுள்ள ஞானபீடம்.

வெற்பு-பெரிய மலையைச் சார்ந்திருக்கும் எல்லைப்புறச் சிறிய மலை.

பரம்பொருள் ஆராய்ச்சியில் மேல்நிலைக்குப் போகப் போக அதைப்பற்றிய விளக்கம் ஆத்ம பரிபாகம் அடையாதவர்களுக்கு எளிதில் விளங்காததாம். ஆயினும் மனதை ஒருமுகப்படுத்தி அந்நுண்ணிய பொருளைக் குறித்துத் தியானம் பண்ணுவதற்கேற்ப அந்த நுண்பொருளைப்பற்றிய கோட்பாடு

ஆத்ம சாதகனுக்குப் படிப்படியாக விளங்கு வதாகிறது. இதை முன்னிட்டே 'ஆச்சரியோ வக்தா குசலோ அஸ்ய லப்தா' என்று உப நிஷதம் இந்த நுண்பொருளைப்பற்றி விளம்புகிறது. புகட்டும் பேராசிரியர் வியப் புக்குரிய நுண்ணறிவு படைத்தவர். அவர் புகட்டுகின்ற கருத்தைக் கிரஹிக்கவல்ல திறமை வாய்ந்தவனாக அமைந்திருப்பவன் நல்ல சிஷ்யன் ஆகிறான். இக்கோட்பாடு தாயுமான சுவாமிகளுக்கும் அவருடைய குரு வாகிய மௌனிக்கும் முற்றிலும் பொருந் தும். நிறைஞானியாகிய மௌன முனிவர் தம் சொரூபத்தில் இருந்தது இருந்தபடி விளக்கிக்காட்டினார். பேச்சுக்கு ஆங்கு இட மில்லை. ஆயினும் முற்றிலும் ஆத்ம பரி பாகம் அடைந்திருந்த தலைமாணுக்கராகிய தாயுமான சுவாமிகள் சொல்லின் துணை யின்றியே பொருளை உள்ளவாறு கிரஹித் துக்கொண்டார். எனவே ஆத்ம சாதனத் தில் சாதகன் ஒருவன் முன்னேற்றமடைவ தற்கு ஏற்பத் தத்துவம் தானாகவே அவனு டைய உள்ளத்தில் திகழ்கின்றது என்று வேதங்கள் முரசறைகின்றன.

மீதானம் என்பது ஞானக்கண். அது இரண்டு புருவங்களுக்கு இடையில் அமைந் திருக்கிறது என்பது ஐதிகம். இக்கருத்தை அடிப்படையாகக்கொண்டே கண்கள் மேல் ஒரு கண்ணுடையான் என முக்கண்ணனா கிய சிவனார் போற்றப்படுகிறார். மானுட சரீரத்தை ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொள் வோமானால் இரண்டு வெற்புக்கள் அல்லது சிறு மலைகள் என இரண்டு புருவங்களைப் பற்றிப் பகரலாம். அவைகளுக்கிடையிலே துரியம் என்னும் ஞான சூரியன் பிரகா சித்துக்கொண்டிருக்கிறான். இந்த ஞான சூரியனுக்கு இருப்பிடமாயிருப்பது மீதா னம். பேரறிவுப் பேரானந்தப் பெருநிலையை அதிவிரைவில் அடைய வேண்டும் என்னும் கருத்து இக்கண்ணியில் அடங்கியுள்ளது.

8-6. வெந்துவெடிக் கின்றசிந்தை வெப்புஅகலத் தண்அருளாய்
வந்துபொழி கின்ற மழைகாண்பது எந்நாளோ.

காற்றில் தீப்பற்றிக் கொண்டால் அது சுடர்விட்டு எரிவது மட்டுமன்றிச் சட்புட வென்று ஏராளமான வெடிப்புச் சத்தம் அதனிடத்திருந்து வந்துகொண்டிருக்கும். அஞ்ஞானத்தில் உழல்கின்ற மனதின் பாங்கு அத்தகையது. மானுடனொருவன் எவ்வள வுக்கெவ்வளவு உலகப்பற்றைத் தன் மனத் தகத்து வைத்திருக்கின்றானோ அவ்வளவுக் கவ்வளவு அவனுடைய வையக வாழ்வா னது படாடோபம் மிக நிரம்பப்பெற்றதாக இருக்கும். அத்தகைய மனிதன் அந்தஸ்தில் தனக்கு மிக்காராக இருப்பவர்களோடு உற வாடுகையில் பெயரளவில் தன்னிடத்து அடக்கமும் ஒடுக்கமும் இருப்பன போன்று பாசாங்கு பண்ணுகிறான்; அந்தஸ்தில் தனக்கு நிகராக இருப்பவரோடு தன்னைப் பெருமைப்படுத்திக் கொள்ளுகிறான். இனிக் கீழோரிடத்து அவன் நடந்துகொள்ளும் விதம் தற்பெருமையும் அதிகாரமும் மிக வாய்க்கப்பெற்றதாகவிருக்கும்.

இனி, விவேகத்தின் விளைவாக ஆத்மசாத னத்தில் ஈடுபடுபவனிடம் இத்தகைய சிற்றி யல்புகளெல்லாம் அடிபட்டுப்போம். வீறுப் புக்குப் பதிலாக வினயம் அதிவிரைவில் அவன் உள்ளத்தில் உருவெடுக்கிறது. ஆணவ மும், அகங்காரமும் அதிவிரைவில் மறைந்து பட்டுப்போகின்றன. மேலோர், கீழோர் என்னும் பாகுபாடு அவன் உள்ளத்தினின்று அகலுகிறது. மக்கள் எல்லாரோடும் அன் னவன் தெய்விக இணக்கம் பூணுகிறான்.

காட்டுத் தீயை மனிதனால் அணைக்க முடி யாது. தெய்வாதீனமாகப் பெருமழை பொழியுமாகில் வெந்தணல் அணைந்துபட் டுப்போகிறது. அங்ஙனம் பொழிகின்ற பெரு மழைக்கு நிகர் இறைவனிடத்திருந்து வரு கின்ற இன்னருள். அது சாதாரண மனிதனைச் சான்றோனாகத் திருத்தியமைக்கிறது. இறை வனுடைய அருள் யாண்டும் அனைவருக்கும் சொந்தம். ஆனால் மனபரிபாகம் அடையப் பெற்றவனுக்கே அது நன்கு பயன்படு கிறது. சாதனத்தில் மேலோங்கிவருவதும் இறைவனுடைய அருளைச் சார்ந்திருப்பதும் சேர்ந்தமையப் பெறுபவன் பாக்கியவான். அதிவிரைவில் அன்னவன் அண்ணலுக்குரிய வனாகிறான் என்பது இக்கண்ணியிலுள்ள கருத்தாம்.

ஜாதியைப்பற்றிய உண்மை

(சுவாமி விவேகானந்தர்)

ஜாதிக்கும் சமயத்துக்கும் சம்பந்தமில்லை. சமூகத்தார் ஏற்படுத்திக்கொண்டதே ஜாதியாகும். ஆகையால் ஜாதியினுல் ஏற்படும் கொடுமைகளுக்கு மதத்தைக் குறைகூறிப் பயன் இல்லை. அக்கொடுமைகளுக்கு மக்களைத்தான் குறைகூறவேண்டும். உயர்ந்த தத்துவங்களைப் பார்த்து மலைப்படைந்த மக்களும், சமய சம்பந்தமான சடங்குகளைச் செய்து சலித்துப்போன மக்களும் உலகாயதவர்களுடைய கொள்கைகளில் சேர்ந்து கொண்டார்கள். அப்படிச் சேர்ந்து கொண்டவர்கள் ஜாதியில் உயர்வு, தாழ்வு பற்றிய கருத்துக்களைத் தோற்றுவித்தார்கள். இந்தியாவில் சடங்குகளும், தத்துவமும், உலகாயதமும் தீர்க்க முடியாத பிரச்னைகளாக இன்று வரையிலும் இருந்து வருகின்றன.

ஜாதி தர்மம் சிதைந்து போயிருப்பது நாம் விழ்ச்சி அடைந்திருக்கிறேம் என்பதை மெய்ப்பிக்கிறது. உண்மையான ஜாதி தர்மம் வேறு; நாம் கூறும் ஜாதி வேறு. சாஸ்திரங்களை ஊன்றிப் படித்தால் ஆங்கு ஜாதி தர்மம் விளக்கப்பட்டிருப்பதைக் காணலாம். சாஸ்திரத்தில் விளக்கப்பட்ட ஜாதி தர்மம் நாட்டிலிருந்து மறைந்து போய் விட்டது. உண்மையான ஜாதி தர்மம் மறைந்து போனதால் இந்தியா வீழ்ச்சி அடைந்தது. குலநாசத்தால் உலகம் அழியும் என்று கீதையில் சொல்லப்பட்டிருக்கிறது. தற்காலத்தில் இருந்துவரும் ஜாதி உண்மையான ஜாதி அன்று. தற்பொழுது நடைமுறையிலுள்ள ஜாதி மக்களுடைய முன்னேற்றத்துக்குத் தடையாகவிருக்கிறது. குழந்தை பிறந்ததும் அதனுடைய இயல்பை வைத்துக்கொண்டு அதனுடைய உண்மையான ஜாதியை நிர்ணயிக்கலாம். அக்குழந்தையினுடைய பண்பை வைத்து நிர்ணயிக்கும் ஜாதிதான் உண்மையான ஜாதி. குழந்தையினுடைய இயல்பை அறிந்து அவ்வியல்புக்கு ஏற்ப அது வளர்ச்சி அடைய நாம் வாய்ப்புத் தரவேண்டும். குழந்தைகளின் இயல்புக்கு ஏற்ப அவர்களைப் பிரிப்பது சமத்துவத்துக்கு ஊறு விளைவிக்காது. யாருடைய உரிமையையும் பறிப்பது ஆகாது. தனி உரிமை பெற விரும்புகின்றவர்கள் உண்மையான ஜாதியை உடைத்துத் தள்ளுபவர்களாகிறுர்கள். அப்பேர்ப்பட்டவர்களை உண்டாக்கும் ஜாதி உண்மையான ஜாதி அன்று. அந்த ஜாதியை உடைத்துத் தள்ளி விட்டு நாம் முன்னேறுவோமாக.

பாமர மக்களுக்கும் ஏழைகளுக்கும் சுதந்திரம் அளித்தால் அவர்கள் கெட்டுப்போய் விடுவார்கள் என்று சொல்பவர்கள் இருக்கிறுர்கள். இவ்வாறு கூறுகின்றவர்கள் சமுதாய நலனில் கருத்துச் செலுத்தியவர்கள் அல்லர். அத்தகையவர்கள் சுயநலம் படைத்தவர்கள் ஆவார்கள்.

உயர்ந்த ஜாதி மக்கள் தாழ்ந்த ஜாதியினரைப் பல்லாண்டுகள் அடிமைப்படுத்தி வைத்திருக்கிறுர்கள். உயர்ந்த ஜாதியினர் கீழ்ஜாதியினரை உதைத்துத் துன்புறுத்தியிருககிறுர்கள். தாழ்ந்த ஜாதியினர் தங்களுடைய வலிமையை இழந்து ஏழை நெஞ்சம் படைத்தவர்களாகிவிட்டார்கள். ஏழை மக்கள் கல்வித்துறைக்கும் கோவில் கட்டுவதற்கும்உதவுகின்றுர்கள். அவ்வுதவிக்குப் பதிலாக அவர்களுக்குத் திட்டும் உதையும்தாம் கிடைக்கின்றன. இந்திய நாட்டில் யாராவது கீழ்ஜாதியில் பிறந்துவிட்டால் அவன் முன்னேறுவதற்கு வழியில்லை. கீழ்ஜாதியினர்களாகிய பறையர்களிடம் இந்துக்கள் அனுதாபத்துடன் நடந்துகொள்ளாததால் ஆயிரக்கணக்கான பறையர்கள் கிறிஸ்துவர்களாக மாறிக்கொண்டு இருக்கின்றனர். பொருளுக்காகவோ, உணவுக்காகவோ இந்துக்கள் கிறிஸ்து மதத்திற்கு மாறவில்லை. இந்துக்களிடமிருந்து அனுதாபம் கிடைக்காததனுல் கீழ் ஜாதியினர் கிறிஸ்துவர்களாக மாறிக்கொண்டு இருக்கிறுர்கள். இந்துக்கள் ஒவ்வொருவரும் இதை நன்கு உணர வேண்டும். ஜாதிப்பிரிவினையை மறந்து ஒற்றுமையுடன் செயல்பட்வேண்டும்.

சுவாமி விவேகானந்தரின் கடிதம்

(சுவாமி விவேகானந்தர் அமெரிக்காவில் வெற்றியடைந்த செய்தியை அறிந்த சென்னை இந்துக்கள் விவேகானந்தருக்கு அளித்த பாராட்டுரைக்கு அவர் எழுதிய பதில் கடிதம்)

[330 ஆம் பக்கத் தொடர்ச்சி]

இந்து சமுதாயத்திலுள்ள குறைபாடுகளை என்னைப் போன்று மற்ற யாரும் அறிந்திருக்க முடியாது. பல நூற்றாண்டுகளாக இந்தியாவுக்குத் துரதிருஷ்டவசமாகப் பல கொடுமைகள் நிகழ்ந்திருக்கின்றன. அவற்றின் விளைவாக ஏற்பட்ட தீமைகளைப் பற்றியும் நான் நன்கு அறிந்திருக்கின்றேன். அந்நியர்கள் இந்தியாவுக்கு உதவி புரியும் நோக்கத்துடன் வருவார்களானால் அவ்வந்நியர்களுக்குத் தெய்வம் துணைபுரிவாராக.

இந்தியாவிலிருக்கும் வெளிநாட்டு நண்பர்களே, உங்களிடம் அடிமையாகவிருக்கும் நாட்டு மக்களைத் தூஷணை செய்து உங்கள் நாட்டின் ஒழுக்க உயர்வை அடிமைநாட்டில் புகுத்துவதுதான் உங்களுடைய நோக்கம் என்றால் நான் உங்களுக்கு வெளிப்படையாக ஓர் உண்மையை இயம்புகின்றேன். உலகத்திலேயே ஒழுக்கத்தில் உயர்ந்தவன் இந்து ஆவான். ஆகையால் உங்கள் நாட்டு ஒழுக்கத்தை இந்து நாட்டின் ஒழுக்கத்தோடு சீர்தூக்குவது நியாயம் அன்று.

இந்தியாவில் சமயம் யாரையும் சிறைப்படுத்தி வைக்கவில்லை. ஒவ்வொரு மனிதனும் தனக்கு விருப்பமான தெய்வத்தைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். ஒவ்வொரு மனிதனும் தன்விருப்பம் போல் எந்த மதப் பிரிவிலும் சேர்ந்துகொள்ளலாம். ஒவ்வொரு மனிதனும் தனக்கேற்ற குருவைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளலாம். இத்தகைய சுதந்திரம் இந்து மதத்தில் நிலவிவருகிறது. இந்தியாவில் சமயம் வளர்ச்சி அடைந்தது போன்று வேறு எங்கும் வளர்ச்சி அடையவில்லை. வளர்ச்சிக்குச் சுதந்திரம் அவசியம். சமயததில் வேறுபாடுகளுக்கு இடமளித்த இந்துக்கள் சமுதாயத்தில் உறுதியான கட்டுப்பாட்டை விதித்தார்கள். அதனால் இந்து சமுதாயம் நிலைகுலையாத சமுதாயமாயிற்று. ஆனால் மேனாடுகளில் சமுதாயத்தில் வேண்டியவாறு மாறுபாடுகளுக்கு இடம் தந்தார்கள். சமயத்தில் கட்டுத்திட்டத்தை வைத்தார்கள். உண்மையை உறுதிப்படுத்துதல் என்பது ஐரோப்பிய நாட்டுச் சமயங்களில் அன்றும் இன்றும் வெறும் கொள்கையளவில்தான் இருந்து வருகிறது. உண்மையை நோக்கி முன்னேறுபவனுக்கு மேனாட்டுச் சமயம் எத்தகைய அனுகூலமும் செய்வதில்லை. உண்மையை நோக்கி முன்னேற விரும்புபவன் பெரிய போராட்டம் செய்தாகவேண்டும். மேனாட்டில் அற்புதமான சமுதாய அமைப்பு இருக்கின்றது. ஆனால் அவர்களுடைய சமயம் மிக மட்டமான லோகாயதக் கருத்துக்கு அப்பால் செல்வதில்லை.

இன்று மேனாடு தன்னுடைய தேவைகளைப் பூர்த்தி செய்வதில் விழிப்படைந்து கொண்டிருக்கிறது. மனிதனுடைய நிஜசொருபத்தைப் பற்றியதும், ஆன்மீகத்தைப் பற்றியதுமான கருத்துக்கள் வெறும் சொல்லளவில்தான்மேனாட்டுமுற்போக்கான சமய விற்பன்னர்களிடம் இருந்து வருகின்றன. சம்ஸ்கிருதத்தில் தத்துவ சாஸ்திரம் படிக்கின்ற மாணாக்கனுக்குச் சீர்திருத்தம் எங்கிருந்து வருகிறது என்பது தெரியும். ஆனால் எப்பொழுது வரும் என்பது தெரியாது. இந்தியாவில் புதுச்சூழ்நிலைகள் சமுதாய அமைப்பிலே புதிய மாறுதல்களை வேண்டி நிற்கின்றன. கடந்த எழுபத்தைந்தாண்டுகளாக இந்தியா முழுவதிலும் சீர்திருத்தக்காரர்களும் சீர்திருத்தச் சங்கங்களும் தோன்றிக் கொண்டேஇருக்கின்றன. ஆனால் ஒவ்வொன்றும் தோல்வி அடைந்தே வந்துள்ளது. அவர்களுக்கு இரகசியம் இன்னும் தெரியவில்லை. அவர்கள் அறிந்துகொள்ளவேண்டிய பெரிய படிப்பினையை இன்னும் அறிந்துகொள்ளாதவர்களாகவிருக்கிறார்கள். தீர விசாரியாது சமுதாயத்திலுள்ள கேடுகளுக்குச் சமயத்தைக் காரணமாகக் காட்டுகின்றனர். அவர்களுடைய செயலை ஒரு கதை விளக்குகின்றது. ஒரு மனிதனுடைய நெற்றியில்

கொசு ஒன்று உட்கார்ந்திருந்தது. அந்தக் கொசுவைக் கொல்ல விரும்பிய நண்பன் அதைப் பலமாக அடித்தான். அதன் விளைவாகக் கொசுவோடு அந்த மனிதனையும் கொன்றுவிட்டான். அங்ஙனம் சமயச்சீர் திருத்தக்காரர்கள் நடந்துகொள்கின்றனர். சமயத்திலுள்ள கேடுகளைக் களைவதாகச் சொல்லிக்கொண்டு அவர்கள் சமயத்தையே அழித்துவிட முயல்கின்றனர். ஆனால் இந்தியாவிலுள்ள சீர்திருத்தக்காரர்கள் அசைக்க முடியாத பாறையின்மீது மோதித் தங்களைத் தாங்களே நசுக்கிக்கொண்டார்கள். தவறான வழியில் சென்று தங்களுடைய போராட்டத்தில் தோல்வி அடைந்தவர்களுக்குப்பெருமை உண்டாகட்டும். அவர்களுடைய சீர்திருத்தத்தின் உத்வேகம் தூங்கிக்கொண்டிருந்த நம் சமுதாயத்தை எழுப்பிவிடுவதற்கு அவசியமாகவிருந்தது. ஆனால் அவர்களுடைய சீர்திருத்தங்கள் ஆக்கமுறையில் இல்லாது அழிவுமுறையில் இருந்தமையால் அவைகள் தோல்வி அடைந்தன.

நாம் அவர்களை ஆசீர்வதிப்போம். அவர்களுடைய அனுபவம் நமக்குப் பயனுடையதாக அமையட்டும். பரிணாமம் முழுவதும் உள்ளிருந்துதான் வெளிவருகிறது. அவ்யக்த நிலைக்குச்சென்றது எதுவோ அதுதான் வியக்த நிலைக்கு வருகிறது என்னும் உண்மையை அவர்கள் அறியாதவர்களாக இருக்கிறார்கள். விதை நிலையில் மரம் தோன்றா நிலையில் இருக்கிறது. சூழ்நிலையைப் பயன்படுத்தி விதையிலிருந்து மரம் வளர்ச்சி அடைகிறது. இவ்வுண்மையை அவர்கள் அறியாதவர்களாயிருக்கிறார்கள். இந்து இனம் அடியோடு அழிந்துபோய்ப் புதிய இனம் இந்த நாட்டைத் தன் வசப்படுத்தும் வரையில் கீழ்நாடுகளோ, மேல்நாடுகளோ இந்தியாவை மாற்ற முடியாது. இந்தியா அழியும் வரை அது ஐரோப்பியமயம் ஆகி விடாது.

இந்தியா எப்பொழுதாவது அழிந்துவிடுமா? ஒழுக்கத்துக்கும், உயர்வுக்கும் ஆன்மீகத்துக்கும் தாயகமாகத் திகழ்பவள் இந்தியத் தாயாவாள். இந்த நாட்டில்தான் ஞானிகள் வாழ்ந்திருக்கின்றார்கள். தெய்விக மனிதர்கள் இன்றும் இந்நாட்டில் வாழ்ந்து வருகின்றார்கள். இந்த நாட்டில் வாழ்கின்ற ஞானிகளுக்கு நிகரானவர்களை வேறு நாட்டில் காணமுடியாது. பழத்தின் தரத்தைக்கொண்டு மரத்தின் தரத்தை அறிந்துகொள்ளலாம் என்பது கோட்பாடு. நன்றாகப் பழுத்த பழத்தைப் பறித்து அது எத்தகையது என்பதை அறிந்துகொண்டு மரத்தைப் பற்றிய முழுவிவரத்தையும் அறிந்துகொள்ளலாம். இந்தியாவிலுள்ள தெய்விக மனிதர்கள் இந்து மதம் எத்தகையது என்பதை உணர்த்துகின்றார்கள். ஆயிரக்கணக்கான வருடங்களாக இந்து மதம் புயல்காற்றுப்போன்ற எதிர்ப்புச் சக்தியைத் தாங்கிக்கொண்டு சாசுவத இளமையுடனும் குன்றாத பலத்துடனும் இருக்கின்றது என்பதை இந்தத் தெய்விக மனிதர்கள் விளக்குகின்றார்கள்.

இந்தியா அழியுமா? இந்தியா அழியுமானால் உலகிலுள்ள ஆன்மீகம் அழிந்துபோகும்; சிறந்த ஒழுக்கம் அழிந்துபோகும்; எல்லாச் சமயங்களிடத்தும் காட்டும் இதயபூர்வமான இனிய தன்மை அழிந்துவிடும்; உயர்ந்த லக்ஷியம் அழிந்துபோகும். இவைகளெல்லாம் இருக்கவேண்டிய இடத்தில் காமமும், சுகபோகமும் புகுந்துவிடும். பணம் புரோகிதர் வேலையைச் செய்யும். பித்தலாட்டம், பலாத்காரம், போட்டி முதலியவைகள் கிரியைகளாக வடிவெடுத்துவிடும். மனிதன் அவைகளுக்குப் பலியாகிக்கொண்டிருப்பான். இந்நிலை எப்பொழுதும் ஏற்படாது. சகிப்புத் தன்மையானது ஆதிக்கச் செயலைவிடப் பன்மடங்கு பலமுடையது. அன்பானது வெறுப்பைவிடப் பன்மடங்கு சக்தி வாய்ந்தது. ஆனால் அவ்வுண்மை எல்லார்க்கும் எளிதில் விளங்குவதில்லை. பண்பாடடைந்தவர்களுக்குத்தான் அது விளங்குகிறது. இப்பொழுது ஏற்பட்டுள்ள இந்து மத மறுமலர்ச்சி தேசிய உணர்ச்சியினால் தூண்டப்பட்டது என்று எண்ணுபவர்கள் ஒரு மயக்கத்தில் இருப்பவர்களாகின்றார்கள். இன்றைய உலகில் சமுதாய நிலை எப்படி உள்ளதென்று சற்று ஆராய்ந்து பார்ப்பது நல்லது.

(தொடரும்)

ஆத்மசொரூப விளக்கம்

(ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள் 1976 ஆம் ஆண்டில் சேலம் அந்தர்யோகத்தில் நிகழ்த்திய சொற்பொழிவு)

ஒரு மந்திரத்தை நாம் சரியாக ஆராய்ச்சி செய்தால் நாம் ஆத்ம தத்துவத்தைக் கிரகிக்க வல்லவர் ஆகின்றோம். உபநிஷத் மந்திரங்கள் ஆத்ம தத்துவத்தை விதவிதமான பாங்குகளில் விளக்குகின்றன. ஆத்ம தத்துவம் எளிதில் விளங்குவதன்று. எனவே உபநிஷத் மந்திரங்கள் வெவ்வேறு பாங்குகளில் அதை விளக்கி இருக்கின்றன. ஆத்மசாதகனுக்கு எந்த முறை பிடிபடுகிறதோ அந்த முறையையே அவன் அடிப்படைக் கோட்பாடாக வைத்துக்கொண்டு மேற்கொண்டு விசாரித்துப் பார்க்கவேண்டும். அப்படி விசாரித்துப் பார்த்துத் தத்துவத்தை அறிந்து கொள்வதற்கு ஆத்ம தத்துவத்தைப்பற்றிய விதவிதமான விளக்கம் துணை புரிகின்றது.

ஆத்ம தத்துவத்தை விளக்கும் ஓர் உபநிஷத் மந்திரத்தை இப்பொழுது ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொள்வோம்.

यथादर्शे तथात्मनि यथा स्वप्ने तथा पितृलोके ।
यथाप्सु परीव ददृशे तथा गन्धर्वलोके छायातपयोरिव
ब्रह्मलोके ॥

யதாதர்சே ததாத்மனி யதா ஸ்வப்னே ததா பித்ரு
லோகே।
யதாப்ஸு பரீவ தத்ருசே ததா கந்தர்வலோகே
சாயாதபயோ ரிவ ப்ரஹ்மலோகே।

நாம் வெவ்வேறு லோகங்கள் இருப்பதாகப் புராணங்களில் படிக்கின்றோம். இந்த மந்திரம் அந்த லோகங்களில் நாம் ஆத்மாவை எங்ஙனம் தரிசிக்கின்றோம் என்பதை விளக்குகின்றது. நாம் நிலைக்கண்ணாடியின் முன் நின்று நம் முகத்தை அதில் காண்கின்றோம். நிலைக்கண்ணாடி நேராகவும் ஒழுங்காகவும் அழுக்குப்படியாததாகவும் இருக்குமானால் நம்முடைய சரீரத்தை உள்ளபடி காட்டும். அங்ஙனம் மாசுபடியாது உள்ள அந்தக்கரணம் ஆத்ம சொரூபத்தைக் காட்டித்தருகிறது. அந்தக்கரணம் சுத்தியடையாதிருக்கும்போது ஆத்ம சொரூபத்தை நாம் காண முடிவதில்லை. நாம் சொரூபத்தில்தான் இருக்கின்றோம். அந்தக்கரணம் நம் சொரூபத்தை மறைத்துக் கொண்டிருக்கின்றது. மனம் கூத்தாடும்போது சிதறடைந்து போகின்றது. மனம் அமைதியுற்றிருக்கும் போது அது இருந்தும் இல்லாத நிலையில் இருக்கின்றது.

ஆத்மசாதகன் தன்னிடத்தே தன் ஆத்ம சொரூபத்தைக் காண வல்லவன் ஆகின்றான். தூயகண்ணாடி சரீரத்தின் பிம்பத்தை உள்ளபடி விளக்கிக் காட்டுவதுபோன்று மனம் அமைதியுற்றிருக்கும்போது அது சொரூபத்தை உள்ளபடி விளக்கிக் காட்டுகின்றது. பல லோகங்கள் இருக்கின்றன என்று சொல்லப்படுகின்றது. அவைகளுள் பிதுர்லோகம் ஒன்றாகும். பிதுர்லோகத்தில் மனிதன் தன்னை எப்படிக் காண்கின்றான் என்பதை 'யதா ஸ்வப்னே ததா பித்ருலோகே' என்று உபநிஷத் மந்திரம் பேசுகிறது. நாம் சொப்பனத்தில் நம்மையும் புற உலகையும் மக்களையும் காண்பதுபோன்று பிதுர் லோகத்தில் நம்முடைய ஆத்ம சொரூபத்தைக் காண்கின்றோம். ஜாக்கிரதாவஸ்தையில் நம்மைத் தெளிவுபடக் காண்பது போன்று சொப்பனத்தில் நம்மை நாம் காணமுடிவதில்லை. நாம் நாள்தோறும் சொப்பனம் கண்டு வருகின்றோம். நாம் நம்முடைய சொப்பனத்தில் உயிரோடு இருப்பவர்களையும் இறந்தவர்களையும் காண்கின்றோம். சொப்பனத்தில் வருகின்ற காட்சி, மனதினுடைய விருத்தியே ஆகும். இறந்தவர்களோ, உயிரோடு இருப்பவர்களோ சொப்பனத்தில் வருவதில்லை. நாம் நம்முடைய மனதின் விருத்தியைத் தான் சொப்பனத்தில் காண்கின்றோம். சொப்பனத்தில் இருக்கின்ற மன நிலை ஜாக்கிரதாவஸ்தையில் இருக்கும் மன நிலையைவிட மங்கிய மனநிலையாகும். நாம் நம்முடைய சொப்பனத்தை ஆராய்ந்து பார்த்தால் சொப்பனத்தில் வருகின்றவர்களை ஜாக்கிரதாவஸ்தையில் பார்ப்பது போன்று தெளிவாகப் பார்க்க முடிவதில்லை.

தெளிந்த நீரில் நாம் நம்முடைய சரீரத்தின் பிம்பத்தைக் காணலாம். தெளிந்த

நீரில் காண்கின்ற பிம்பம் சுத்தமான நிலைக் கண்ணாடியில் காண்கின்ற பிம்பத்தைவிட் மங்கலாக இருக்கின்றது. நாம் நம்முடைய பிம்பத்தை நீரில் காண்பதுபோன்று கந்தர்வலோகத்தில் நம்மை நாம் காண்கின்றோம். மனிதன் சூரிய வெளிச்சத்தில் நிற்கின்றான் என்று வைத்துக்கொள்வோம். அவனுடைய நிழல் சுவரில் விழுகிறது. ஒரு விலங்கினுடைய நிழலும் சுவரில் விழுகிறது. பறவையினுடைய நிழலும் சுவரில் விழுகிறது. நிழலின் அமைப்பிலிருந்து மனிதன், விலங்கு, பறவை என்று பாகுபடுத்தலாம். நிழல் வெளிச்ச மயமாக இருக்கிறது. ஆனால் அது கடைத்தரமான வெளிச்சமாகும். நம்மை நிழலில் காண்பது போன்று சொரூபத்தை ஒரு நிலையில் காண்கின்றோம். இங்ஙனம் பலப் படித்தரங்களில் சொரூபத்தைக் காண்கின்ற ஆற்றல் நம்மிடத்தில் இருக்கின்றது.

ஜீவாத்மனுக்கு உரிய பல பெயர்களுள் 'சிதாபாசன்' என்பது ஒரு பெயராகும். 'பிரதிபிம்பிக்கின்ற சித்' என்பது அதற்குப்பொருள். ஜீவாத்மன் அறிவு சொரூபம். அறிவு சொரூபம் அந்தக்கரணத்தில் பிரதிபிம்பிக்கின்றது. ஜீவாத்மன் அதைக் கண்டு வருகின்றான். அந்தக்கரணத்தில் பிரதிபிம்பிக்கின்ற ஆத்ம சொரூபத்தைக் காண்கின்ற காட்சி ஸ்ரீரங்கத்தில் கண்ணாடி அறையின் மூலம் விளக்கப்படுகிறது. ஸ்ரீரங்கத்தில் உள்ள கண்ணாடி அறையின் மததியில் தீபம் ஒன்றில் ஸ்ரீரங்கநாதர் வைக்கப்பட்டிருக்கிறார். ரங்கநாதர் பல ரங்கநாதர்களாகக் கண்ணாடி மூலம் பிரதிபிம்பிக்கிறார். அக்கண்ணாடி அறைக்குள் சென்று எங்குத் திரும்பிப் பார்த்தாலும் ஸ்ரீரங்கநாதரைத் தரிசிக்கலாம். இதன் மூலம் தத்துவம் ஒன்று விளக்கப்படுகிறது. பரமாத்மா ஒருவர்தாம் இருக்கிறார். அவர் அனந்தங்கோடி அந்தக்கரணங்களில் அனந்தங்கோடி ஜீவாத்மாக்களாகத் தம்மைப் பிரதிபிம்பித்துக்காட்டிக் கொண்டிருக்கிறார். அந்தக்கரணத்தில் பிரதிபிம்பிக்கும் ஜீவாத்மனுக்கு 'சிதாபாசன்' என்று பெயர். பிரதிபிம்பிக்கும் கருவியின் தரத்திற்கு ஏற்பப் பிரதிபிம்பிக்கப்படுகின்ற ஜீவனின் அமைப்பும் மாறுபடுகின்றது. நீண்ட கண்ணாடியில் முகத்தைப் பார்த்தால் முகமும் நீண்டு தென்படும். கண்ணாடியின் அமைப்புக்கு ஏற்ப அதில் பிம்பிக்கின்ற முகத்தின் அமைப்பு மாறும். கண்ணாடியின் பாங்கைப் பிரதிபிம்பிக்கின்ற பொருள் எடுத்துக் கொள்கின்றது. இக்கோட்பாடு ஜீவர்களுக்கும் பொருந்தும். பறவைகள், விலங்குகள், மக்கள், தேவர்கள் என்ற பல படித்தரங்களில் பரமாத்மா ஒருவர் தம்மை விளக்கிக் காட்டிக் கொண்டிருக்கின்றார். அந்தக்கரணத்தின் தரத்திற்கு ஏற்பப் பரமாத்மா அதில் தம்மை விளக்கிக்காட்டுகின்றார். அந்தக்கரணம் சுத்தம் அடைவதற்கு ஏற்பப் பரமாத்மாவின் தரிசனம் தெளிவுபடுகின்றது. சித்தசுத்தி செய்வது சாதனையின் நோக்கமாகும்.

ஓர் அறையைப் பலநாட்கள் பூட்டி வைத்திருப்பதாக வைத்துக்கொள்வோம். நெடுநாளைக்குப் பிறகு அவ்வறையைத் திறந்து அவ்வறையிலுள்ள நிலைக்கண்ணாடியில் நம் முகத்தைப் பார்த்தால் முகம் தெளிவாகத் தென்படாது. கண்ணாடியில் அழுக்குப் படிந்திருக்குமாதலால் அது முகத்தைத் தெளிவாகக் காட்டாது. நாம் கண்ணாடியைத் துணிகொண்டு துடைத்துவிட்டு அதில் முகத்தைப் பார்த்தால் முகத்தின் பிம்பம் உள்ளது உள்ளபடி தென்படும். அழுக்குப் படிந்துள்ள அந்தக்கரணத்தில் ஆத்ம தரிசனம் ஏற்படுவதில்லை. நாம் அந்தக்கரணத்தைச் சுத்தி பண்ணிக்கொண்டே வந்தால் சுத்தம் அடைவதற்கேற்ப ஆத்ம தரிசனம் ஏற்படும். அநதக்கரணம் சுததியடைவதற்கு ஏற்பத்தான் ஆத்மாவைப்பற்றிய தெளிந்த அறிவு உண்டாகிறது. 'யதா தர்சே ததா ஆத்மனி' என்பது உபநிஷதம். ஜீவாத்மா அந்தக்கரண சுத்தி செய்வதைத் தான் சாதனை என்று சொல்லுகின்றோம். நாம் முற்றிலும் அந்தக்கரண சுத்தி செய்துவிட்டால் நமக்குச் சாதனை பூர்த்தியாகின்றது. கண்ணாடி சுத்தமாக இருக்கும் பொழுது அது இருப்பதே தென்படாது. ஆகையினால்தான் சுத்தமான ஜன்னல் கண்

ணுடியில் ஈ பறந்து சென்று மோதுகிறது. கண்ணுடி இருப்பது அந்த ஈக்குத் தெரிவ தில்லை. சுத்தமான கண்ணுடிக்குப் பாத ரசம் பூசிவிட்டால் அது பிரதிபிம்பத்தை உள்ளது உள்ளபடி தெரிவிக்கின்றது. சுத்த மான கண்ணுடிபோன்று நம் உள்ளத்தைச் சுத்தப்படுத்தத் தெரிந்துகொண்டால் தத் துவத்தின் அடிப்படையை நாம் அறிந்து கொண்டவர்களாகின்ருேம்.

'காயமே கோயிலாகக் கடிமனம் அடிமை யாக வாய்மையே தூய்மையாக மனம் மணி லிங்கமாக' என்று ஆன்ருேர் ஒருவர் பகர்ந்துள்ளார். ஈண்டு இரண்டு கோட் பாடுகள் சொல்லப்பட்டிருக்கின்றன. முதல் பகுதியாகிய 'காயமே கோயிலாக' என்று பகர்ந்திருப்பது உடலை நாம் எப்படி வைத்திருக்கவேண்டும் என்பதைச் சுட்டிக் காட்டுகின்றது. நாம் உடலை எப்படிக் கருத வேண்டும் என்பதையும் அது நமக்குப் புகட்டுகிறது. நாம் சரீரத்தைப் போகத் துக்குரிய கருவியாகக் கருதக்கூடாது. பஞ்ச பூதங்களால் ஆகியுள்ள சரீரம் போகத்துக் காக நமக்கு அமைந்ததன்று. நம்முடைய சரீரத்தை இறைவன் குடிகொண்டிருக்கும் ஆலயமாகக் கருதவேண்டும். நாம் சரீ ரத்தை அப்படிக் கருதும்பொழுதுதான் மனப்பான்மை மாறியமைந்து சரீரப்பற்று ஒழிகிறது. நாம் சரீரப்பற்றை ஒழிக்கின்ற அளவு நல்ல ஆத்ம சாதகர்களாகின்ருேம். நாம் தெய்வக் காட்சி பெறுவதற்காகச் சரீ ரத்தைப் பெற்றிருக்கின்ருேம். சரீரத்தை இத்தகைய தூய மனப்பான்மைகொண்டு பார்க்கும்பொழுதுதான் மனதுக்கு உயர்வு வருகின்றது. இப்பொழுதுள்ள மனப் பான்மையை மாற்றியமைக்கும்பொழுது தான் நாம் ஆத்மசாதகர்களாகின்ருேம்.

'கடிமனம் அடிமையாக' என்று சொல்லு மிடத்துக் கட்டிலடங்காத மனதைக் கட்டுப் பாட்டுக்குக் கொண்டு வரவேண்டும் என்பது பொருள். கட்டிலடங்காத மனது அலைந்து திரிகின்றது. அம்மனது எண்ணுத எண் ணங்களையெல்லாம் எண்ணிக்கொண்டிருக் கிறது. அலைகின்ற மனதைப் பண்படாத மனது என்கின்ருேம். அந்தப் பண்படாத அலைகின்ற மனதைச் சாதகன் அடிமைப் படுத்தத் தெரிந்துகொண்டால் சாதகன் சாதனையில் வெற்றியடைகின்ருன். மனிதன் தன் ஜீவிதத்தில் அடைகின்ற வெற்றிகளுள் இது பெரிய வெற்றியாகும். சிவனுர் தம் சொருபத்தில் இப்பாடத்தைப் புகட்டிக் கொண்டிருக்கின்ருர். அவர் தம் இடக்கை யில் மான் ஒன்றை ஏந்தியிருக்கின்ருர். அவர் கையிலுள்ள மான் அவர் முகத்தையே பார்த்த வண்ணம் இருக்கின்றது. ஆனல் வனத்திலுள்ள மான் நினைத்த இடத்துக் குத் துள்ளிக்குதித்து ஓடுகின்றது. வனத்தி லுள்ள அலைகின்ற மானுக்கு நிகராக மனது இருக்கின்றது. மனதைக் குரங்கோடும் ஒப் பிடலாம். கட்டிலடங்கிய மனது சிவனுர் கையிலுள்ள மானுக்கு நிகராகின்றது. சிவ னுர் முகத்தைப் பார்த்தவண்ணம் இருக்கும் மான் அலையாது இருக்கின்றது. அங்ஙனம் தெய்வச் சிந்தனை செய்யும் மனது அலை வதை நிறுத்துகிறது.

ஆத்மசாதகன் மனதைக் கட்டி ஆளத் தெரிந்து கொள்ளும்போதுதான் அவன் நல்ல ஆத்மசாதகன் ஆகின்ருன். கடிமனம் அடிமையாகவும் வாய்மையே தூய்மையாக வும் அமையும் வாழ்க்கை சிறந்த வாழ்க்கை யாகிறது. சத்தியத்தைக் கடைப்பிடிப் பது தவங்களுள் சிறந்த தவமாகும். வாயி லிருந்து வரும் சொல்லும் ஜீவிதமும் முரண் படலாகாது சொல்லுகின்றபடி செயல் அமையவேண்டும். அப்பொழுது வாழ்வு தூய வாழ்வாகத் திருந்தி அமைகின்றது. மணி என்பது பிரகாசித்துக்கொண்டிருப் பதைக் குறிக்கின்றது. மனதின்கண் பிர காசம் ஏற்படுவதற்கு மனம் அடங்குதல் வேண்டும். ஈசுவர சன்னிதானத்தை நாடிச் செல்லும் மனது பிரகாசத்தைப் பெறு கிறது. சாதாரண மனதை அடுப்புக்கரி யோடு ஒப்பிடலாம். அடுப்புக்கரி கறுப்பாக வும் ஜடப்பொருளாகவும் இருக்கிறது. அதைத் தீயோடு இணைத்துவைத்தால் கறுப் பாக இருக்கின்ற அடுப்புக்கரி பிரகாசம் வாய்ந்ததாக மாறுகிறது. அங்ஙனம் தெய் வச் சிந்தனை செய்கின்ற மனது ஆன்மீக ஒளி உடையதாக மாறுகிறது. அப்பிரகாச

மான மனது ஜோதிர் லிங்கம் என அழைக்கப்படுகிறது. நமக்கு அடிமைப்படாது நம்மைப் பாழ்படுத்துகிற மனது நம்முடைய சத்துருவாகும். நம் மனதைச் சரியாகக் கட்டி ஆளத் தெரிந்துகொண்டால் அது ஈசனை அடையப் பயன்படுகிறது. உலகத்தின்பால் நம்மை இழுத்துச் செல்லுகின்ற மனது திருந்தி அமையும்பொழுது பரத்தை அடைய அதுவே நற்கருவியாக அமைகிறது.

'மனமணி லிங்கமாக' என்று சொல்வதில் மனதை இன்ன பாங்கில் பக்குவப்படுத்த வேண்டும் என்பது சொல்லப்படுகின்றது. கயிலாயத்தில் உள்ள மானஸரோவர் மனத்தின் தெளிந்த நிலையை நன்கு விளக்குகின்றது. கயிலாயகிரியின் தென்பகுதியில் நாற்பது மைல் தூரத்தில் ஒரு தடாகம் இருக்கின்றது. அது ஐம்பத்தாறு மைல் சுற்றளவு உள்ளது. பார்ப்பதற்குக் கடல் போன்று அமைந்திருக்கும். இமயமலையின் நாலா பக்கமும் இருக்கின்ற பனிக்கட்டி உருகி அந்நீர் வந்து தேங்கி இருப்பது மானஸரோவர் என்னும் தடாகம் ஆகும். பனிக்கட்டி உருகி வருவதால் அந்நீர் தூசு படியாததாக இருக்கிறது. தூசு படியாத நீர் தேங்கி மானஸரோவர் என்னும் தடாகம் ஏற்பட்டு இருக்கிறது. அகண்ட நீர்ப்பரப்பு நீலநிறம் போன்று தென்படுகிறது. அத்தடாகத்தில் நாற்பதடி ஆழத்துக்குக் கீழ் உள்ள தரை நன்றாகத் தெரிகின்றது. அத்தடாகத்தினுள் கல்லைப் போட்டால் அது தரையில் உள்ள மணலைத் தொடும் வரையிலும் கண்ணுக்குத் தெரிந்துகொண்டிருக்கும். அதிகாலையில் அத்தடாகம் அசையாது வார்த்த சிலை போன்று இருக்கிறது. அப்போது அதனுள் கைலயங்கிரியினுடைய பிம்பம் தலைகீழாகத் தென்படுகின்றது. மானஸரோவர் போன்று நம் மனதைச் சுத்தப்படுத்தினால் ஆங்கு ஈசுவரனுடைய சாந்நித்தியத்தைத் தெளிவாகக் காணலாம். 'சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட அத்தன் எனக்கருளியவாறு ஆர் பெறுவார் அச்சோவே' என மணிவாசகர் அருளி உள்ளார். சித்தத்தில் உள்ள மலம் போய்விட்டால் அது சிவசொரூபமாகிறது. மனம் மலினப்படுகின்றபோது அதில் சிவ சாந்நித்தியம் தென்படாது. மலினப்பட்ட மனதுக்கு அடிமைப்பட்டிருப்பவன் ஜீவன். மலினப்பட்ட மனதை அடிமையாக்கி அதை ஜோதிர் லிங்கமாகச் செய்வது சாதனத்தில் வந்தமைகின்றது. சாதனத்தின் மூலம் மனதை ஜோதிர் லிங்கமாகச் செய்கின்றவன் சிவ சாந்நித்தியத்தில் இருப்பவன் ஆகின்றான். ஜீவ உபாதியை ஒதுக்கித் தள்ளிவிட்டுச் சிவத்தில் ஒன்றுபடுவது சாதனையின் குறிக்கோள்.

ஒருவன் தன் மனதைக் கட்டி ஆளுகின்ற திறமைக்கு ஏற்பச் சாதனத்தில் விரைந்து மேலே செல்லுகின்றான். மனதைக் கட்டி ஆள இயலாதவன் கடைநிலையில் இருக்கின்றான். மனதை ஒருவாறு கட்டி ஆளுகின்றவன் இடைநிலையில் இருக்கின்றான். நிலைக் கண்ணாடியில் பிம்பத்தை உள்ளபடி காண்பது போன்று அந்தக்கரணம் முற்றிலும் சுத்தியடைந்துவிட்டால் அவ்வந்தக்கரணம் இருப்பதும் இல்லாததும் ஒன்றே. பரிபூரணசுத்தியடைந்த மனநிலையைத் 'துரியம்' என்றும் மனதற்ற நிலையைத் 'துரியாதீதம்' என்றும் சொல்லுகின்றோம். துரியமும் துரியாதீதமும் ஒன்றே. துரியம், துரியாதீதம் என்னும் இரு பதங்கள் பிற்காலத்தில் வந்த சாஸ்திரங்களில் தாராளமாகக் கையாளப்படுகின்றன. உபநிஷதத்தில் துரியம் என்னும் பதந்தான் உள்ளது. துரியாதீதம் என்னும் பதம் இல்லை. துரியாதீதம் என்பதைச் சாஸ்திர வியாக்யானக்காரர்கள் நாளடைவில் தாராளமாகக் கையாளத் தொடங்கிவிட்டார்கள்.

துரியம்தான் ஆத்ம சொரூபம். ஆத்மாவுக்கப்பால் ஒன்றும் இல்லை. ஆத்மாதான் முடிந்த நிலை. சுத்தியடைந்த அந்தக்கரணத்தின் மூலம் ஆத்ம சொரூபத்தைக் காணும்பொழுது அது துரியம் எனப்படுகிறது. அந்த மனதையும் அழித்துத் தள்ளிவிடும்பொழுது அந்த மன அதீதநிலை துரியாதீதம் என்று சொல்லப்படுகின்றது. சுத்தமான கண்ணாடியில் பார்ப்பதும் கண்ணாடி இல்லாமல் பார்ப்பதும் ஒன்றே. சுத்த மன

தோடு இருப்பதும் மனதற்ற நிலையில் இருப்பதும் ஒன்றே. அவ்விரண்டிற்கும் வேறுபாடு இல்லை. அந்தக் கண்ணுடியில் மறுபடி அழுக்குச் சேர வாய்ப்பிருக்கிறது. அதே போன்று சுத்த மனது மறுபடியும் மலினப்பட்டுவிடலாம். கண்ணுடி உடைந்துவிட்டால் அழுக்குப்படிந்துவிடும் என்னும் பேச்சுக்கே இடமில்லை. அதே போன்று சுத்த மனதை அழித்துவிட்டால் மீண்டும் மலினப்படும் என்னும் பேச்சுக்கு இடமில்லை. எனவே சுத்தமனதைப் பெற்றுனபிறகு அதைஅழித்துத்தள்ளி விடவேண்டும். சுத்தமான நிலைக் கண்ணுடியில் திரிவுபட்ட காட்சிக்கு இடமில்லை. ஆங்கு உள்ளது உள்ளபடி தென்படுகிறது. கண்ணுடி இல்லாத போது தன்னில் தாளுக இருக்கும் நிலை உள்ளது. தூய மனதில் விகாரப்பட்ட காட்சிக்கு இடமில்லை. மனதற்ற நிலையில் சொரூபம் தன்னில் தாளுக இருக்கிறது. மனதைத் தூயதாக்கும் நிலைக்கு நிகரான செயல் வேறு எதுவும் இல்லை. 'தூய மனதும் ஆத்மாவும் ஒன்று' என்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் பகர்கிருர். சலனமடைந்துகொண்டிருப்பது எதுவோ அது மனது ஆகும். அசையாது தெளிந்திருக்கும் மனது ஆத்ம சொரூபமாகும். அடுப்புக்கரி ஒரு நிலையில் கரியாக இருக்கின்றது. அது நெருப்புடன் சம்பந்தம் வைக்கின்றநிலையில் தீ ஆகின்றது. மனம் ஒரு நிலையில் ஜடமாக இருக்கின்றது. அது பண்பட்டு சிவத்தில் லயமாகும்பொழுது மனம் என்னும் பெயர்போய்ச் சிவமாகிவிடுகின்றது. கூத்தாடும் மனம் படைத்திருப்பவர்கள் ஜீவாத்மாக்கள். மனது ஆத்ம சொரூபத்தில் ஒடுங்கிச்செயலற்ற நிலைக்குப் போகும் போது நாம் பரமாத்மா ஆகின்றேம்.

நதி கடலை அடைகின்ற வரையிலும் ஓடிக்கொண்டே இருக்கவேண்டும். அது கடலை அடைந்தான பிறகு அந்நதிக்கு ஓட்டம் இல்லை. உள்ளத்தில் விருத்திகள் இருக்கின்றன. அவைகள் எண்ணங்களாக வடிவெடுக்கின்றன. அவ்வெண்ணங்கள் உணர்ச்சிகளாகவும், சிந்தனைகளாகவும் வடிவெடுக்கின்றன. இத்தகைய அந்தக்கரணம் மனம் என்னும் பெயர் பெறுகிறது. விருத்திகளும் சிந்தனைகளும் மாய்ந்து உபாதியற்றதாக அந்தக்கரணம் மாறுமாளுல் அது தெளிந்த மனமாகிறது. அப்பொழுது மனம் என்னும் பெயர் போய் அது ஆத்ம சொரூபம் ஆகின்றது. நதி கடலைச்சென்றடைந்ததும் நதி என்னும் பெயரை இழந்துவிட்டுக் கடல் ஆவது போன்று சித்தவிருத்திகள் எல்லாம் ஒழிந்து போய்ச் சொரூபத்தில் இருந்தபடி இருக்கும் போது அது ஆத்ம சொரூபம் ஆகிறது. மனதைப் பண்படுத்தி முற்றிலும் சுத்தமாக்கி விட்டால் சொரூபத்தை உள்ளபடி அறிகின்றேம். அந்நிலையில் ஜீவன் என்னும் வியக்தி போய்ச் சுத்த சைதன்யம், பேரறிவு, பேரானந்தம் என்னும் நிலைதான் உள்ளது. அந்நிலைதான் நாம் அடையவேண்டிய குறிக்கோளாகும்.

பேரானந்தப் பெருநிலையை உபநிஷதம் எடுத்து விளக்குகின்றது. அந்நிலை சாதாரண மக்களுக்கு விளங்குவதற்குப் புராணங்களும் இதிகாசங்களும் துணைபுரிகின்றன. இதிகாசங்களிலும், புராணங்களிலும் அந்நிலை கீழ்நிலைக்கு இறங்கி வந்திருக்கின்றது. பள்ளிக்கூடத்தில் சிறுவர்கள் பார்த்து எழுதுதல் என்னும் பயிற்சி பெறுகிருர்கள். பார்த்து எழுதும் நோட்டில் நல்ல எழுத்து அச்சாகி இருக்கும். பார்த்து எழுதும் பயிற்சி பெறும் மாணுக்கர்கள் நோட்டின் கீழ்வரியிலிருந்து எழுதிக்கொண்டு போகவேண்டும். அதற்குப் பதிலாக மேல் வரியிலிருந்து எழுதுவார்களாளுல் கையெழுத்து மோசமாகிக்கொண்டே வரும். மேலே உள்ள அச்செழுத்தைப் பார்த்தே எப்பொழுதும் எழுதவேண்டும். அதே போன்று லட்சியத்திலேயே எப்பொழுதும் கண்ணுங்கருத்துமாக இருக்கவேண்டும்.

நமக்கு லட்சியமாக இருப்பவர் பரம்பொருள் ஆகின்ருர். ஜீவர்களாக வடிவெடுத்தவர்கள் பரவஸ்து நிலையிலிருந்து கீழே வந்தவர்கள் ஆகிருர்கள். அப்படிக் கீழ்நிலைக்கு வந்துள்ள ஜீவர்களை லட்சிய புருஷர்களாக நாம் வைத்துக்கொள்வோமாளுல் நாம் தரத்தில் கீழே போய்விடுவோம். சிருஷ்டி கர்த்தாவாகிய பிரம்ம தேவனுக்குச் சுயம்பு என்னும் பெயர் ஒன்று உண்டு.

தாமாகத் தோன்றி வந்தவர் என்பது அதன் பொருள். சமுத்திரத்தில் அலை உண்டாவது போன்று பரம்பொருள் என்னும் சமுத்திரத்தில் ஜீவகோடிகள் தோன்றி வந்துள்ளன. சமுத்திரத்தில் தோன்றும் ஒவ்வோர் அலையும் தானாகவே உண்டாயிற்று. யாரும் அதைத் தோற்றுவிக்கவில்லை. ஜீவனும் தன்னைத்தானே தோற்றுவித்துக்கொண்டு அந்தக்கரணத்தோடு தொடர்பு வைத்துத் தன்னை ஒரு தனி வியக்தியாகக் காட்டிக் கொள்கின்றான். ஜீவன் தன்னைத்தானே உண்டுபண்ணிக்கொள்ள எப்படி ஆரம்பித்தான் என்னும் கேள்விக்கு விடைகாணமுடியவில்லை. புத்தர் அதற்கு விடைகாண ஆரம்பித்தார். அவருக்கு ஐந்நூறு பிறவிகள் ஞாபகத்துக்கு வந்தன. அதற்கப்பால் உள்ளது அவருக்கு மங்கிப் போய்விட்டது. அதற்கப்பால் அவர் தேடமுடியவில்லை. எனவே நாம் எங்கேயோ துவக்கியிருக்கின்றோம். நாம் அந்தத் துவக்கத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை. நமக்கு நாள்தோறும் சொப்பனம் உண்டாகின்றது. அந்தச் சொப்பனம் எப்படி, எங்கே ஆரம்பித்தது என்பதைக் கண்டுபிடிக்க முடியவில்லை. சில நிமிடங்களில் அழியப்போகும் சொப்பனத்துக்கு ஆதியைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்றால் பலகோடி பிறவிகளாக வரும் நம் ஜீவிதத்திற்கு ஆதியை எப்படிக் கண்டுபிடிப்பது! ஜாக்கிரதாவஸ்தையில் இருப்பதற்கு நிகராகச் சொப்பனவஸ்தையில் நாம் நமக்கு நாமே ஓர் உலகை உண்டுபண்ணிக்கொள்கின்றோம். நம் சொப்பனத்தில் வருவது நமது மனதின் தோற்றமே தவிர புறத்தில் அதற்கு இருப்பு இல்லை. இல்லாததை மனது இருப்பதாக எண்ணுகின்றது. சொப்பனத்தில் இருந்து விழித்தவுடன் சொப்பனத்தில் கண்டவற்றையெல்லாம் பொய் என்று நாம் ஒதுக்கித் தள்ளுகின்றோம். நாம் காணும் சொப்பனத்தில் ஒரு பிரயோஜனம் இருக்கிறது. நம்முடைய மனதில் எத்தகைய விருத்திகள் புதைந்து கிடக்கின்றன என்பதை அறிந்துகொள்ளுதற்குச் சொப்பனம் துணைபுரிகின்றது. அதற்குமேல் சொப்பனத்தில் பயன் இல்லை.

நாம் பல பிறவிகள் எடுத்திருக்கின்றோம். அப் பிறவிகளின் அனுபவங்களை எல்லாம் ஜாக்கிரதாவஸ்தையில் நாம் தொடர்ந்து அனுபவித்து வருகின்றோம். ஜாக்கிரதத்தையே சொப்பனம் என்று சொல்லலாம். ஏனென்றால் சொப்பன உலகத்துக்குப் போகும்பொழுது ஜாக்கிரதா உலகம் மறைந்துபோகின்றது. ஜாக்கிரதா உலகத்துக்கு வரும்பொழுது சொப்பன உலகம் மறைந்துபோகின்றது. ஒன்று மற்றொன்றை அழித்துத் தள்ளுவதால் எது உண்மை, எது பொய்யென்று நாம் சொல்ல முடியாது. ஒன்றுக்கு இருப்பு இல்லையென்றால் மற்றொன்றுக்கும் இருப்பு இல்லை. ஆகையால் ஜாக்கிரதாவஸ்தையில் அனுபவத்துக்கு வரும் உலகத்தில் மிகைபட்ட வாஞ்சை வைக்கலாகாது. சொப்பனவஸ்தையில் வைக்கப்பட்ட வாஞ்சைகளை எல்லாம் ஜாக்கிரதத்துக்கு வந்தவுடன் மனக் கற்பிதங்கள் என்று நாம் ஒதுக்கித் தள்ளி விடுகின்றோம். அதே போன்று ஜாக்கிரதாவஸ்தையில் ஏற்படும் அனுபவங்களையும் மனத்தினுடைய கூறுகள் என்று அவற்றில் பற்றுவைக்காதிருந்து பழகவேண்டும். புறப் பொருள்களோடு நாம் தொடர்பு வைக்கின்றோம். அப்படித் தொடர்பு வைக்கின்றபொழுது அவை இன்பத்துக்குரியன என்று கருதி மனதில் இன்பநுகர்ச்சியை நாம்வளர்ப்போமானால் அவை பற்றுதலை வளர்க்கின்றன. அவை மனதிலும் பதிந்துவிடுகின்றன. அப்பதிவுகள் பிறகு சந்தர்ப்பம் வாய்க்கும்பொழுதெல்லாம் இன்ப நுகர்ச்சியைத்தந்து நம்மை மயக்குகின்றன. இம்மயக்க நிலைக்கு நாம் ஆளாகாமல் இருந்து பழகவேண்டும். புதிய பற்றுதல் உண்டாகாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். இந்தச் சாதனையை ஜாக்கிரதாவஸ்தையில் செய்தாகவேண்டும். சொப்பனவஸ்தையில் சாதனை எதுவும் செய்ய முடியாது. பிரம்மதேவருடைய விழிப்புநிலைதான் ஜாக்கிரதாவஸ்தையாகும். பிரம்மதேவருடைய அம்சமாக இருக்கின்ற நாம்இந்த உலகைப் புறக்கணிக்க முடியாது. நாம் இவ்வுலகை நம்முடையசாதனத்துக்குப் பயன்படுத்திக்கொள்ளலாம். (தொடரும்)

ஸ்ரீ லலிதா வியாக்கியானம்-170

947. पञ्चप्रेतमञ्चाधिशायिनी பஞ்சப்ரேத மஞ்சாதிசாயினீ—ஐந்து பிரேதங்களாலாகிய பீடத்தில் வீற்றிருப்பவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

லலிதாம்பிகை அமர்ந்திருக்கும் பீடம் பஞ்ச மூர்த்திகளால் அமைக்கப் பெற்றதாகிறது. பிரம்மா, விஷ்ணு, ருத்ரன், ஈசானன் ஆகிய நான்கு மூர்த்திகள் அந்தப் பீடத்தின் நான்கு கால்களாகவும் சதாசிவம் அதற்குரிய பலகையாகவும் அமைந்திருப்பது ஐதிகம். இந்தப் பஞ்சமூர்த்திகளைப் பிரேதங்கள் அல்லது பிணங்கள் எனப் பகர்வதின் பொருள் யாது?

புராண அமைப்பின் கோட்பாடு இந்த நாமத்தில் இடம்பெறுகிறது. சிவபுராணத்தில் சிவன்தான் ஏனைய தேவதைகளுக்கெல்லாம் மேலான மூலமூர்த்தி எனப் பகரப்பட்டிருக்கிறது. அதேவிதத்தில் விஷ்ணு புராணத்தில் மஹாவிஷ்ணு தான் மற்றத் தேவர்களுக்கெல்லாம் மேலானவர் என மொழியப்பட்டிருக்கிறது. ஸ்கந்த புராணத்தில் குமரன் சுவாமிநாதன் எனவும் தகப்பன் சுவாமி எனவும் பாராட்டப்படுகிறான். கணேச புராணத்தில் தேவாதி தேவர்களனைவருக்கும் ஆதி மூலமாயிருப்பது மகா கணபதி என இயம்பப்பட்டிருக்கிறது. இந்த ஐதிகத்துக்கு ஒப்ப ஆதி சக்தியாகிய லலிதாம்பிகைதான் முழுமுதற்பொருள் என்னும் கோட்பாடு வந்துள்ளது. இப்படி அமைந்துள்ள புராணங்களனைத்தையும் இயற்றியவர் வியாசர். அவர் ஏன் இந்த முரண்பாட்டைப் புராணங்களில் வைத்து இயற்றினார் என்பது பெரிய கேள்வி. அதன் உட்பொருளை ஆத்மசாதகர்கள் அறிந்திருப்பது முற்றிலும் அவசியமாகிறது. இந்த மூர்த்திகள் எல்லாரும் உபாசனைக்கு உரியவர்கள் ஆகின்றார்கள். ஆத்ம சாதகன் ஒருவன் தன் இயல்புக்கு ஏற்ப இந்த மூர்த்திகளுள் யாரேனும் ஒருவரைத் தன்னுடைய இஷ்ட தேவதையாக எடுத்துக்கொள்ளலாம். இஷ்ட தேவதையினிடத்து அலாதிப் பற்றுதல் வருவது முற்றிலும் அவசியம்.

பரம்பொருள் ஆராய்ச்சியில் முதல் பாடப் புஸ்தகமாக அமைந்திருப்பது புராணம். ஆத்ம சாதகன் ஒருவன் புராணத்தைப் படிக்கவோ, படிப்பதைக் கேட்கவோ செய்தல் வேண்டும். ஆத்ம சாதனத்தில் அவன் இன்னும் குழந்தைப் பருவத்திலிருக்கிறான். பிறந்து வளர்ந்து வரும் குழந்தை ஒன்றுக்குத் தன் தாய்தான் முதன்முதல் அறிந்துகொள்ளும் மூர்த்தியாக அமைகிறாள். வளர்ந்துவரும் குழந்தைக்குத் தாய்ப்பற்று முற்றிலும் அவசியம். தாய்ப்பற்றை அறியாத அனாதைக் குழந்தைக்கு மேலாம் பண்புகள் வந்து அமைய மாட்டா. ஏனென்றால் தாய்ப்பற்று ஒன்றே ஏனைய பற்றுதல்களுக்கும் பண்புகளுக்கும் மூல காரணமாகிறது. குழந்தை ஒன்று தன் தாய்க்கு நிகரான மாது உலகில் வேறு யாருமில்லை என்னும் மனப்பான்மையைப் பெற்றிருக்குமானால் ஏனையவர்கள் அதைப் பாராட்டவேண்டும். அந்த எண்ணத்துக்கு உற்சாகம் ஊட்டவும் மற்றவர்கள் கடமைப் பட்டிருக்கின்றனர்.

சாதனத்தில் ஆரம்பதசையில் இருக்கும் சாதகன் ஒருவனுக்குத் தன் இஷ்டமூர்த்தியினிடத்து உருவெடுக்கின்ற பக்தியானது சிறு குழந்தை பூணும் தாய்ப்பற்றுதலுக்கு நிகரானது. தன் வழிபடு தெய்வத்திடத்து அன்னவன் வைக்கின்றபற்றுதலைப் பெரியது ஆக்குதல் பொருட்டே ஒவ்வொரு புராணமும் தான் எடுத்துக்கொண்ட மூர்த்தியை மற்றத் தேவர்களுக்கெல்லாம் மேலான மூர்த்தி எனச் சிலாகித்துச் சொல்கிறது. இந்த அடிப்படைக் கோட்பாட்டை அறிந்து கொள்ள வல்லவர்கள் இது விஷயத்தில் புராணங்களில் முரண்பாடு காணமாட்டார்கள்.

லலிதாம்பிகை வீற்றிருக்கும் ஆசனமானது ஏனைய பஞ்சமூர்த்திகளைக்கொண்டு அமைக்கப்பெற்றதாம். அந்தப் பஞ்சமூர்த்திகளைப் பராசக்திக்குப் புறம்பானவர்களாக வைத்துக்கொண்டால் அவர்கள் பிரேதத்துக்கு நிகராகிறார்கள். இக்கோட்பாட்டுக்கு

விளக்கமாக மற்ருேர் உபமானம் எடுத்துக் கொள்வது அவசியமாகிறது. ஒரு கூடத்தினுள் அமைந்துள்ள சில கருவிகள் மின் சக்தியை வைத்துக்கொண்டு இயங்க வல்லவையாம்.

1) மின் விளக்கு எரிகிறது. 2) மின் விசிறி சுழல்கிறது. 3) மின் ஒலிபெருக்கி பேசிக்கொண்டிருக்கிறது. 4) மின் அடுப்பில் தண்ணீர் கொதித்துக்கொண்டிருக்கிறது. 5) மின் ரெப்ரிஜிரேட்டர் என்னும் பெட்டகத்தினுள் மின்சக்தி தனுப்பாயிருந்துகொண்டு செயல்புரிகிறது. இந்த ஐந்துவிதக் கருவிகளுக்கும், மின் சக்தி என்னும் விசை ஓரிடத்திலிருந்தே வந்துகொண்டிருக்கிறது. அங்ஙனம் விசை வராவிட்டால் ஐந்துவிதக் கருவிகளும் செயலற்றுப்போய்ப் பிரேதங்களுக்கு நிகராகின்றன. இதே பாங்கில்தான் ஆத்ம சைதன்யமாக இலங்குகின்ற அன்னை பராசக்தி ஐந்து மூர்த்திகளுடன் ஐந்துவித மகிமைகள் வாய்க்கப் பெற்றவளாக மிளிர்கிருள். உண்மையில் சக்தியைச் சிவத்திடத்திருந்து பிரிக்க முடியாது. பிரிக்க முடியும் என்று கற்பனையாக வைத்துக் கொள்வோமானல் அப்பொழுது சிவம் சவமாகப் போகிறது. ஆதலால்தான் சக்தியற்ற நோயாளி ஒருவன் ‘நான் கிடக்கிறேன் சிவனே’ என்று இயம்புகிருன்.

ஆக, சக்திக்கு உள்ள சிறப்பைச் சாதகன் ஒருவன் அறிந்துகொள்ளவேண்டும் என்னும் நோக்கத்துடன் பஞ்சப்ரேதமஞ்சாதிசாயினீ என்னும் இந்த நாமம் வந்துள்ளது. இதன் உட்பொருளைத் தியானிப்பதற்கேற்ப ஆத்ம சாதகனிடத்துச் சைதன்யம் என்னும் சக்தி ஓங்குகிறது.

948. **பஞ்சமீ** பஞ்சமீ — ஸதா சிவத்தின் சக்தி சொருபமாக இருப்பவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

பஞ்சப்பிரேதங்கள் என்று 947ஆம் நாமத்தில் சொல்லப்பட்ட கோட்பாடு அம்பிகையின் மகிமையைச் சிலாகித்தல் பொருட்டேயாம். ஆதிசக்தியும் முழுமுதற் பொருளாகிய பரம்பொருளும் ஒன்றே. ஒன்று என்னும் இலக்கத்துக்கு நிகர் மூலப்பொருள். அந்த இலக்கத்தைத் தொடர்ந்து வருகிற பூஜ்யங்களுக்கு ஏராளமாக மதிப்பு உண்டு. ஒன்ருகிய மூலப்பொருளே பிரபஞ்சத்தில் அனைத்துமாகயிலங்குகின்றது. அவைகளின் மகிமைக்கு எல்லை கிடையாது. கோட்டானு கோடி எண்ணிக்கைகளனைத்தும் மூலமாகிய ஒன்றைத் தொடர்ந்து வரும் பூஜ்யங்கள் மூலமாக விளக்கப்படுகின்றன. அந்த ஒன்றைச் சார்ந்திருப்பதால் பூஜ்யங்களுக்கு அவ்வளவு பெரிய மதிப்பு வருகிறது. ஒன்று என்கிற இலக்கம் நீக்கப்படுகின்றவிடத்து மதிப்புடன் அதைத் தொடர்ந்து அந்த பூஜ்யங்களனைத்தும் வெறும் பூஜ்யங்களாகப் போகின்றன. தம் அளவில் பூஜ்யங்களுக்கு மதிப்பு ஏதுமில்லை. அங்ஙனம் பிரபஞ்சத்திலுள்ள அனைத்தும் மூலப்பொருளாகிய பரவஸ்துவைச் சார்ந்திருப்பதால் மதிப்பைப் பெறுகின்றன. மூல வஸ்துவைச் சிவம் என்று அழைத்தாலும் சிவா அல்லது சிவை என்று அழைத்தாலும் பொருள் ஒன்றே. இந்தச் சிவனர் திரிலோகக் குடும்பியாக இலங்குகின்றவிடத்து எண்ணிறந்த ஜீவ கோடிகளாகவும் அண்ட கோடிகளாகவும் தம்மை விளக்கிக் கொண்டிருக்கிருர். அப்பொருளை அம்பிகையாகக் கருதினுல் அந்த மகிமைகளனைத்தும் அவளைச் சாருகின்றன. பின்பு அதே பரவஸ்து தன் மகிமைகளைத் தன்னிடத்துச் சுருக்கிக் கொள்ளுமாகில் அந்த வஸ்துவுக்கு அர்த்த நாரீஸ்வரன் அல்லது உமா மஹேஸ்வரன் என்னும் பெயர் வந்தமைகிறது. இத்தனை கோடி உயிர் வகைகளாகவும் அண்டங்களாகவும் தன்னை விளக்கிக்காட்ட வல்லதாயிருக்கிற மூர்த்திக்கு இப்பெயர்கள் வந்தமைந்திருக்கின்றன. இவையாவையும் தன்னகத்து ஒடுக்குகின்றபொழுது சிவனுருக்கு ருத்திரன் என்னும் பெயரும் அம்பிகைக்கு மஹாகாளி என்னும் பெயரும் வந்தமைகின்றன. ருத்திரன் ஏககாலத்தில் அனுக்கிரஹ மூர்த்தியாகவும் நிக்ரஹ மூர்த்தியாகவும் அமைந்திருக்கிருர். மஹாகாளியின் பாங்கும் அத்தகையதேயாம். பரவஸ்து இதற்கு மேல் ஒருபடி போகின்றபொழுது அதனுடைய நான்காவது ஸ்தானம் தக்ஷிணமூர்த்தி

எனப்பெயர்பெறுகிறது. பிரபஞ்ச விளையாட்டுக்களனைத்தும் ஒடுங்கிப்போய்ப் புகட்டுகிற மூர்த்தியாகிய ஆச்சாரியரும் புகட்டப்பெறுகிறவர்களாகிய சிஷ்யர்கள் நால்வர் மட்டும் இங்கே எஞ்சி நிற்கின்றனர். இதே மூர்த்தி அம்பிகையாக இலங்குகின்றவிடத்து அவளுக்குத் துர்க்கை என்னும் நாமம் வந்தமைகிறது. இந்த மூர்த்தியின் ஒப்பு உயர்வு அற்ற மேலாம் நிலை ஐந்தாம் ஸ்தானத்தைப் பெறுகின்றது. ஆதலால்தான் அம்பிகை பஞ்சமீ என்று அழைக்கப்பெறுகிறாள். பஞ்சமீ என்று பகர்ந்தாலும் ஸதாசிவம் என்று பகர்ந்தாலும் பொருள் ஒன்றே. அது எல்லை காணாத பேரறிவுப் பேரானந்தப் பரவெளியாம். இந்நிலையை ஏகதேசம் அறிந்து கொள்ளுதற்கு இயற்கையில் மகாசமுத்திரம் என இயம்பப்பெறுகிற நீர்ப்பரப்பைச் சான்றாக எடுத்துக்கொள்ளலாம். அதன் மேல் பகுதி அலைவீசி விளையாடுவதோடு அம்பிகையின் தோற்றத்தை ஒப்பிடலாம். அதே சமுத்திரத்தின் கீழ்ப் பகுதியோடு ஒப்பிட்டு அவளிடத்துள்ள பஞ்சமீ என்னும் பெருமையை ஒருவாறு கிரஹிக்கலாம். அப்பெருநிலை தோற்றமும், ஒடுக்கமும் அற்றது. அதற்கு ஆதியுமில்லை, அந்தமுமில்லை. போக்கும் வரவும் புணர்வும் அதற்கு இல்லை. அது யாண்டும் தன்மயம். சுத்த சைதன்யம் என்றும் ஏகமாய், அகண்டமாய் இருக்கும் பிரக்ஞானம் எனவும் அதைப் பகரலாம். இதனிடத்து மனதை ஒடுக்குதற்கேற்ப ஆத்ம சாதகன் பரிபூரணத்திற்குப் பக்கத்தில் வருகிறான்.

பஞ்சமீ என்னும் பதம் தந்திர சாஸ்திரத்தில் பஞ்ச மகரம் என்னும் பெயர்பெறுகிறது. தந்த்ரசாஸ்திரப்பிரகாரம் கையாளுகிற சாதனங்களுக்கு வாமாச்சாரம் என்னும் பெயர் வந்துள்ளது. அது வைதிகச் சாதன முறைகளாகிய தக்ஷிணாச்சாரத்தோடு எவ்விதத்திலும் ஒவ்வாதது. கையாளுகிற பூஜா திரவியங்களும் தக்ஷிணாச்சாரத்தில் கையாளுகிற திரவியங்களினின்றுமுற்றிலும் வேறுபட்டவை. ஆயினும் அம்முறையையும் பொருள்களையும் கொண்டுவாமாச்சாரப்படி சாதனங்கள் பண்ணினால் சாதகன் ஒருவன் சித்த புருஷனாவது திண்ணம். ஆதலால் அந்த முறைக்கு ஏதுவாயிருக்கின்ற பண்டங்களுக்குப் பஞ்சமீ என்றோ பஞ்சமகரம் என்றோ பெயர் வந்துள்ளது.

தக்ஷிணாச்சார ஐதிகப் பிரகாரம் அமைந்துள்ள பஞ்சகோசங்களாகவும் பஞ்சப் பிராணன்களாகவும், பஞ்சேந்திரியங்களாகவும், பஞ்சயக்ஞங்களாகவும் அன்னை பராசக்தி தானே அமைந்திருக்கிறாள் என்பது தேற்றம்.

ஸ்ரீ தேவீ மாஹாத்மியம்

या देवी सर्वभूतेषु क्षान्ति रूपेण संस्थिता ।	யா தேவி ஸர்வபூதேஷு க்ஷாந்தி ரூபேண ஸம்ஸ்திதா
नमस्तस्यै नमस्तस्यै नमस्तस्यै नमो नमः ॥	நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம:
या देवी सर्वभूतेषु कान्ति रूपेण संस्थिता ।	யா தேவி ஸர்வபூதேஷு காந்தி ரூபேண ஸம்ஸ்திதா
नमस्तस्यै नमस्तस्यै नमस्तस्यै नमो नमः ॥	நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம:
या देवी सर्वभूतेषु लज्जा रूपेण संस्थिता ।	யா தேவி ஸர்வபூதேஷு லஜ்ஜா ரூபேண ஸம்ஸ்திதா
नमस्तस्यै नमस्तस्यै नमस्तस्यै नमो नमः ॥	நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம:
या देवी सर्वभूतेषु स्मृति रूपेण संस्थिता ।	யா தேவி ஸர்வபூதேஷு ஸ்ம்ருதி ரூபேண ஸம்ஸ்திதா
नमस्तस्यै नमस्तस्यै नमस्तस्यै नमो नमः ॥	நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம:
या देवी सर्वभूतेषु लक्ष्मी रूपेण संस्थिता ।	யா தேவி ஸர்வபூதேஷு லக்ஷ்மீ ரூபேண ஸம்ஸ்திதா
नमस्तस्यै नमस्तस्यै नमस्तस्यै नमो नमः ॥	நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம:

பொறுமை, காந்தி, வெட்கம், ஞாபகம், செல்வம் ஆகிய வடிவங்களாக எந்த தேவி எல்லா உயிர்களிடத்தும் உறைகின்றாளோ அவளுக்கு நமஸ்காரம், நமஸ்காரம், நமஸ்காரம்.

ஸத் ஸம்பாஷணை

கேள்வி: (327) ***ஒரு காரியம் நிறைவேற வேண்டுமெனப் பிரார்த்தனை பண்ணுகிறோம். காரியம் நிறைவேறுகிறது. ஆயினும் பல சோதனைகள் வருகின்றன. ஏன் சோதனைகள் வருகின்றன?***

உயிர்களனைத்தும் அவரவர் ஆசைகளை நிறைவேற்றுதல் பொருட்டு இவ்வுலகினுள் வந்துள்ளார்கள். பெரும்பாலும் சற்று முன்னது பின்னதாக எல்லாருடைய ஆசைகளும் நிறைவேறப் பெறுகின்றன. அதன் விளைவாகப் புதிய ஆசைகளும் உள்ளத்தில் வடிவெடுத்து வருகின்றன. ஆசைகள் நிறைவேறப் பெறுவதாலேயே எல்லார்க்கும் வாழ்வில் பற்றுதல் மிக உண்டாகிறது. ஆசைகளை நிறைவேற்றுதற்கேற்ற தகுதியுடையவர்களுக்கு வெற்றி விரைவில் கிடைக்கிறது. தகுதியற்றவர்களுக்குத் தகுதியாகும் பரியந்தம் ஆசைகள் நிறைவேறப் பெறமாட்டா. படிப்படியாகத் தகுதியடைந்து வருகின்றவர் காரியம் நிறைவேறப்பெறுவதும் படிப்படியாகவேயாம்.

அப்படிப் படிப்படியாகப் பயன் பெறுவதைச் சோதனை என்கிறோம். சிறு குழந்தைகள் உட்காரவும் எழுந்துநிற்கவும் நடக்கவும் முயலுகின்றன. ஆனால் அந்த முயற்சியில் அவைகள் அடையும் வெற்றி விதவிதமானது. அதற்குக் காரணம் அந்தந்தக் குழந்தை படைத்துள்ள தகுதியேயாம்.

எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்

என்பது மறைமொழி. இக்கோட்பாடு வாழ்க்கையில் எல்லாப் படித்தரங்களிலும் எல்லார்க்கும் பொதுவானதே.

இமயமலையில் எவரெஸ்டு சிகரத்தை எட்டச் சில கூட்டங்கள் சில ஆண்டுகளாக முயன்று வந்தன. ஆறாவதோ ஏழாவதோ கூட்டந்தான் இறுதியில் அம்முயற்சியில் வெற்றி கண்டது. ஏனைய கூட்டங்கள் அடைந்த தோல்விக்குக் காரணம் யாது என்று ஆராய்ச்சி செய்யப்பட்டது. முதல் கூட்டம் செய்த பிழையை இரண்டாவது கூட்டம் திருத்தியமைத்தது. இரண்டாவது கூட்டம் செய்த பிழையை மூன்றாவது கூட்டம் திருத்தியமைத்தது. இங்ஙனம் ஒவ்வொரு தோல்வியும் அடுத்த வெற்றிக்கு முகாமையாயிற்று.

வாழ்வு என்பது இடையறாத முயற்சியாம். முயற்சியில் தோல்வியும் வெற்றியும் மாறி மாறியமைவது இயல்பு. இங்ஙனம் உயிர்களனைத்தும் ஒரே லட்சியத்தை நாடிப் பலப்பல துறைகளில் பலப்பல முறைகளில் முயன்று வருகின்றன. அதன் வாயிலாக அனுபவமும் அறிவும் வளர்கின்றன. நல்ல அறிஞன் நல்லமுறையில் முயன்று உடனுக்குடனே வெற்றி காண்கிறான். ஏனையவர்கள் தோல்வியின் வாயிலாக அனுபவத்தையும் அறிவையும் புதியதாகப் பெற்றுவருகிறார்கள். இறுதியில் எல்லாரும் ஏதேனும் ஒரு பாங்கில் பக்குவப்பட்டு முன்னேற்றமடைவது திண்ணம். இதுவே வாழ்க்கையைப்பற்றிய கோட்பாடாம்.

கேள்வி: (328) ***தீண்டாமை எப்படி வந்தது? அதை எப்படி ஒழிப்பது?***

நோய்வாய்ப்பட்டிருக்கும் ஒருவனுக்குப் பத்தியம் வைக்கப்படுகிறது. இன்னதைப் பருகுவது, இன்னதை அருந்துவது, இன்னதை இன்னின்ன வேளைகளில் செய்வது என்னும் நியதிக்குப் பத்தியம் என்று பெயர். நோய் குணமானதும் பத்தியத்துக்கு அவசியமில்லை.

தீண்டாமை என்பது ஒருவித நோய். அது சமயக் கோட்பாடாக வடிவெடுத்திருப்பது மடமையின் உச்சநிலையாம். ஒரு குடும்பத்திலிருப்பவர்களுள் ஒருவன் வீட்டுச் சாக்கடைகளையும் கழிவறைகளையும் சுத்தம் செய்கிறான். அப்படிச் செய்தவன் நீராடி முடிக்கும் வரையில் மற்றவர்கள் அவனைத் தொட மாட்டார்கள். அது முறைமை.

நம் சமுதாயப் பழக்க வழக்கங்களில் ஒவ்வொரு கூட்டத்துக்கும் தனித்தொழில் என்னும் நியதியை இடைக்காலத்தில் அமைத்துக்கொண்டார்கள். தோட்டி வேலை செய்கின்றவர்களைத் தொடக்கூடாது என்னும் சுகாதாரக்கட்டுப்பாடும் அதைத்தொடர்ந்து

வந்தது. நாளடைவில் அப்பழக்கம் ஒரு ஜாதிக்கொடுமையாக வடிவெடுத்தது. இது நம் சமுதாயம் செய்துள்ள பிழைகளில் பெரும் பிழையாம். எப்படியோ காஷ்மீரத்திலிருந்து கன்னியாகுமரி பரியந்தம் எல்லா மாகாணங்களிலும் சற்று ஏறத்தாழ இப்பிழை புகுந்திருக்கிறது. தீண்டாமைக் கொடுமை தெற்கே வர வர அதிகமாயிருப்பதைக் காணலாம். அதன் உச்சநிலையைக் கேரளம் கையாண்டு வருகிறது. தீண்டத் தகாதவன், அணுகத் தகாதவன், காணத் தகாதவன் இப்படியெல்லாம் இப்பொல்லாத நோய் இந்த மாகாணத்தில் வடிவெடுத்திருக்கிறது.

ஆனால் நாளடைவில் புறவுலகோடு வைத்துள்ள தொடர்பின் வாயிலாகவும். ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர், மகாத்மா காந்தி போன்ற சான்றோர்களின் முயற்சிகளின் விளைவாகவும் விவேக வளர்ச்சியின் விளைவாகவும் தீண்டாமை என்னும் நோய் நம் நாட்டினின்று மறைந்துபட்டுப் போகிறது. பட்டணங்களில் இந்த நோயை அகற்றுவதற்கு மிக எளிதாயிருக்கிறது. நாட்டுப் புறங்களிலோ இந்நோய் எளிதில் அகலமாட்டேன் என்கிறது. நோய்க்கு இடம் கொடேல் என்னும் கோட்பாட்டின்படி இதை அகற்றி ஒழிக்க நம்மவர்கள் எல்லாரும் கடமைப்பட்டிருக்கிறார்கள். தீண்டாமை என்னும் நோய் முற்றிலும் அகன்று போன பிறகே நம் நாடு பாருக்குள்ளே நல்ல நாடு என்னும் பாராட்டுதலுக்கு உரியதாகும்.

கேள்வி: (329) *தியானமா? மக்கள் சேவையா? எதற்கு முதலிடம்?*

இக்கேள்வியை இன்னொரு விதத்தில் கிளப்புமிடத்து உண்பதா, உறங்குவதா எதற்கு முதலிடம் தருவது என்கின்ற கேள்விக்கு நிகராகிறது இங்கே கிளம்பியுள்ள கேள்வி. உண்கின்ற வேளையில் மனிதன் உண்ணவேண்டும். உறங்குகின்ற வேளையில் அவன் உறங்க வேண்டும். இவ்விரண்டு செயல்களும் நல்வாழ்வுக்கு இன்றியமையாதவைகளாம்.

மனிதன் நாள்தோறும் தியானம் பண்ணவும் கடவுள் வழிபாடு பண்ணவும் கடமைப்பட்டிருக்கிறான். உண்பதின் வாயிலாக உடலை உறுதிப்படுத்துகின்றோம். அதே விதத்தில் கடவுள் வழிபாட்டின் வாயிலாகவும் தியானத்தின் வாயிலாகவும் உள்ளத்தைத் தெளிவுடையதாக்குகின்றோம். மனது அடைகின்ற தெளிவுக்கேற்ப மானுடன் மேலோனாகிறான்.

“ மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன் ”

என்பது மறைமொழி.

மனிதன் உலகிலே தனித்திருந்து வாழ முடியாது. சமுதாயத்தில் ஓர் அங்கத்தினனாக மனிதன் அமைந்திருக்கிறான். அந்த அமைப்பை நிலை நாட்டுதல் பொருட்டும் உறுதிப்படுத்துதல் பொருட்டும் மக்களுக்குப் பணிவிடைபண்ண மனிதன் கடமைப்பட்டிருக்கிறான். அப்பணிவிடையை எவ்வளவுக்கெவ்வளவு ஊக்கத்தோடும், முறையாகவும் மனிதன் நிறைவேற்றுகின்றானோ அதற்கேற்றபடியும் அவன் மனத்தில் தெளிவுடையவனாகின்றான். ஆதலால் தியானமும், மக்கள் பணிவிடையும் ஒன்றை ஒன்று சார்ந்திருந்து மக்கள் முன்னேற்றத்திற்குப் பயன்படுகின்றன.

கேள்வி: (330) *முக்தி மனிதனுக்கு மட்டுமே இயலுமா?*

முக்தி என்பதன் பொருள் பிறவிப் பெருங்கடலைத் தாண்டுதலாம். முக்தி அடைந்தவன் பரம்பொருளோடுசேர்ந்தவனாகிறான். யானைக்கு முக்தி என்றும் கரிக்குருவிக்கு முக்தி என்றும் புராணங்கள் பகர்கின்றன. மனிதனுக்கு நல்வாழ்வில் உற்சாகம் ஊட்டுவதற்காகப் புராணங்களில் கதைகளை இங்ஙனம் ஆன்றோர்கள் அமைத்திருக்கின்றனர். மக்களில் பெரும்பான்மையோர் உலகப் பற்று மிக வைத்திருக்கின்றனர். பெறுதற்கரிய மானுட ஜன்மத்தின் நோக்கம் மக்கள் எல்லார்க்கும் விளங்குவதில்லை. மானுட ஜன்மத்தை விடக் கீழ்நிலையிலுள்ள பறவைகளும் விலங்குகளும் பரதத்துவத்தையோ, முக்தியையோ அறிந்து கொள்ளமாட்டா. ஆதலால் மக்களுள் பண்பட்ட ஆத்ம சாதகர்களுக்கே முக்தி பெறுவது சாத்தியம்.

ஆத்ம போதம்

(திரு. V. S. நரசிம்மன்)

आविद्यकं शरीरादि दृश्यं बुद्बुदवत्क्षरम् ।
एतद्विलक्षणं विद्यादहं ब्रह्मेति निर्मलम् ॥

आविद्यकं (ஆவித்யகம்) அவித்யைதோற்றுவித்த शरीरादि (சரீராதி) சரீரம்முதலிய அனைத்தும் दृश्यं (த்ருச்யம்) பார்க்கப்படுபவை बुद्बुदवत् (புத்புதவத்) நீர்க்குமிழிகளைப் போல், क्षरम् (க்ஷரம்) அழியும் தன்மை உடையவை. एतत् (ஏதத்) இதற்கு विलक्षणं (விலக்ஷணம்) முற்றிலும் மாறுபட்டதாக निर्मलं (நிர்மலம்) மாசற்ற ब्रह्म अहं इति (ப்ரஹ்ம அஹம் இதி) 'பிரம்மமே நான்' என்று विद्यात् (வித்யாத்) விவேகத்தினால் அறிவாய்.

அஞ்ஞானம் தோற்றுவித்த சரீரம் அனைத்தும் பார்க்கப்படுபவை; நீர்க் குமிழிபோல் நிலையற்றவை. இவற்றிற்கு முற்றிலும் மாறுபட்ட மாசற்ற சொரூபமாகிய பிரம்மமே நான் என்று விவேகத்தால் அறிவாய்.

த்ருக்-த்ருச்ய விவேகம் என்று வேதாந்த சாதனை மார்க்கம் உள்ளது. காணப்படும் பொருள் (த்ருச்யம்) நிலையற்றது; காண்கின்ற சாக்ஷியே (த்ருக்) சைதன்ய வஸ்து. அதுவே சத் பொருள். சரீராதி என்பதின் மூலம் ஸ்தூல சரீரமன்றி, இந்திரியம், மனம், புத்தி, அகங்காரம் ஆகிய அனைத்துமே பார்க்கப்படுபவை; நீர்க்குமிழிபோல் நிலையற்றவை என்று உணர்த்துகின்றார். இவை அநித்தியம். இவற்றையும், இவற்றில் ஏற்படும் மாற்றங்களையும் காணும் சாக்ஷியே நித்தியமானவன். விஷயம்-விஷயி; அஹம்-இதம்; த்ருச்யம்-த்ருக் என்ற மூவகை இருமைகளும் ஒரு தத்துவத்தின் அடிப்படையில் எழுந்தவை.

'அஹம் ப்ரஹ்மேதி வித்யாத்' என்று சிஷ்யனுக்கு உபதேசம் தரப்படுகின்றது. காணப்படும் அனைத்தும் 'இதம்'. அதைக் காணும் 'அஹம்' உண்மையில் பிரம்மமே. இங்ஙனம் அனுஸந்தானம் செய்வதே ஆத்ம சாதனை. இதனையே 'நான் யார்?' என்று ஆத்ம விசாரணை செய்யவேண்டும் என்று ஸ்ரீரமண மஹரிஷி உபதேசிக்கின்றார்.

देहान्यत्वान्न मे जन्म जरा कार्श्यलयादयः ।
शब्दादि विषयैः सङ्गो निरिन्द्रियतया न च ॥

देह अन्यत्वात् (தேஹ அந்யத்வாத்) தேகத்திற்கு வேறுபட்டு இருப்பதால் मे (மே) எனக்கு जन्म (ஜன்ம) பிறவி जरा (ஜரா) மூப்பு कार्श्य (கார்ச்ய) இளைத்தல் लयम् (லயம்) ஒடுங்குதல் आदयः (ஆதய:) ஆகிய மாற்றங்கள் न (ந) இல்லை. निरिन्द्रियतया च (நிரிந்திரியதயா ச) புலன்கள் எதுவும் அற்றவனாக இருப்பதால் शब्दादि (சப்தாதி) ஒலி முதலிய ஐவகை विषयैः (விஷயை:) விஷயங்களுடன் सङ्गः (ஸங்க:) தொடர்பு न (ந) இல்லை.

நான் சரீரத்தினின்று வேறுபட்டவன். எனவே எனக்குப் பிறப்பு, மூப்பு, இளைப்பு, மரணம் ஆகியவை இல்லை. எனக்குப் புலன்கள் கிடையா. ஆகவே ஒலி, ஊறு ஆகிய ஐந்து விஷயப் பொருள்களுடன் எனக்குத் தொடர்பு கிடையாது.

ஜடப்பொருள், சைதன்யம் இரண்டும் அடிப்படையில் வேற்றுமை கொண்டவை. பிறப்பு, இறப்பு, வளர்ச்சி, மாற்றம், நலிவு, மரணம் ஆகிய ஆறு விகாரங்களும் ஜடப் பொருளையே பாதிக்கின்றன. சைதன்ய சொரூபம் நிர்விகாரம்.

ஆத்ம விசாரத்தினால் நித்திய வஸ்துவின் சொரூபத்தை அறிவு பூர்வமாக, அனுபவ வாயிலாக உணரவேண்டும். 'ந இதி-இது அல்ல' என்னும் யுக்தியைக் கையாண்டு அனாத்ம வஸ்துவைத் தள்ளவேண்டும். அனைவருக்கும் இயல்பாகத் தோன்றும் மயக்கம் 'அன்ன மயமாகிய சரீரமே நான்' என்பதேயாகும். எனவே முதற்கண் ஸ்தூல சரீரத்தில் ஆரம்பித்து, அந்தக்கரணம் வரை அனைத்தையும் விலக்கவேண்டும். ஸ்ரீ ரமண மஹரிஷி நான்கு சொற்களைக்கொண்டு வேதாந்தம் அனைத்தையும், சாதன முறை உள்பட விளக்கிக்காண்பித்தார். தேஹம், நாஹம், கோஹம், ஸோஹம் - என்பன அச்சொற்களாம். தேஹம் என்ற சொல் சாதாரணமாகக் காணப்படும் சரீர அபிமானத்தைக் குறிக்கின்றது. பக்குவமடைந்

துள்ள சாதகன் தனது நிஜசொருபம் சரீரம் என்று எண்ணமாட்டான். எனவே 'நாஹம்-நான் சரீரமல்ல' என்று தீர்மானிக்கின்றான். ஆகவே 'கோஹம்-நான் யார்?' என்றகேள்வி எழுகின்றது. தீவிர விசாரத்தால் 'ஸோஹம் -நான் அப்பரம்பொருளே' என்று அறி கின்றான்.

நிர்வாண ஷட்கம் என்று ஆச்சாரியர் ஆறு பாடல்களைப் பாடியுள்ளார். மனம், புத்தி, இந்திரியம், ஸ்தூல சரீரம் என்று அனைத்தையும் பட்டியல் போட்டு இவை 'நான் அல்ல' என்று கூறி, இறுதியில் 'சிதானந்த ரூப சிவோஹம், சிவோஹம்' என்று முடிக்கின்றார். ஆத்ம விசாரத்திற்குத் தன்னை உணர்வதே அடிப்படை. ''நான் என்பது உனக்கு மிகவும் அருகில் உள்ளது. அந்த நான் யார் என்பதைக் கண்டுபிடி. அதுவே செய்ய வேண்டியது'' என்பது மஹரிஷி ரமணர் அளிக்கும் உபதேசம்.

மேலைநாட்டுத் தத்துவ அறிஞர் Descartes (டெகார்டிஸ்) என்பவர் ஒருவகையில் இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டார் எனலாம். "Cogito Ergo sum, I think therefore I am'' என்று அவர் உரைத்தார். 'நான்' என்பது மற்றப் பொருள்களைப்போல் ஒரு விஷயமே. ஏனையவற்றை உணர 'விஷயி' தேவைப் படுவதைப் போல என்னையும் உணரும் வஸ்து எது? இதுவே ஆத்ம விசாரத்தின் அடிப்படை. ஒருவன் எதையும் நம்பாது, ஏற்காது, புறக்கணிக்கலாம். ஆனால் தன்னைத்தானே புறக்கணிக்கமுடியாது. None can doubt the doubter. எனவே தனக்குப் புறம்பாக இருக்கும் பொருள்களை ஆராய்ச்சி செய்வதை விட்டு விட்டு, தனக்கு மிகவும் நெருங்கி உள்ள 'நான்' யார் எனக் காண வேண்டும். தத்துவத்தை உணர நித்திய, அநித்திய வஸ்து விசாரம் அவசியம். அநித்யம், அஸத்தியம்யாவை என ஆராயத்தலைப் படும்போது, ஸ்தூல சரீரத்தினின்று துவங்க வேண்டும். இந்தச் சுலோகம் அந்தச் சாதனை முறையைக் குறிக்கிறது.

अमनस्त्वान्न मे दुःखरागद्वेषभयादयः ।
अप्राणो ह्यमनाः शुभ्र इत्यादि श्रुतिशासनात् ॥

अप्राणो (அப்ராணோ) பிராணன் அல்லாத अमनाः (அமநா:) மனதற்ற शुभ्र (சுப்ர) தூய்மையான इति आदि (இதி ஆதி) என்பது போன்ற श्रुति शासनात् (சுருதி சாஸனாத்) சுருதி மொழியின்படி अमनस्त्वात् (அமநஸ்த்வாத்) மனதிற்கு வேறான சொரூபமாக இருப்பதால், मे (மே) எனக்கு दुःख (து:க) துக்கம் राग (ராக) பற்று द्वेष (த்வேஷ) வெறுப்பு भय (பய) அச்சம் आदयः (ஆதய:) ஆகியவை न (ந) இல்லை.

''நான் மனதினின்று வேறுபட்டவன். எனவே துக்கம், பற்று, வெறுப்பு, பயம் எனக்குக் கிடையா. பிராணன்அற்ற மன மற்ற தூய்மையே வடிவெடுத்தவன். இவ்வாறு சுருதி மொழியும் பொருளே நான்.''

இதற்கு முன்புள்ள சுலோகத்தின் கருத்தையே இதில் காண்கின்றோம். சுக, துக்கம்; விருப்பு, வெறுப்பு; பயம், குதூகலம் ஆகியவை மனதின் குணங்கள். அவற்றை ஒதுக்கி ஆத்மனில் திளைக்கவேண்டும். முதல்வரி எதைத் தள்ளவேண்டும் என்றும், இரண்டாவது வரி எதைக் கொள்ளவேண்டும் என்றும் உணர்த்துகின்றன.

சுருதியின் மொழியை எடுத்தாண்டு ஆத்மாவின் லக்ஷணத்தை ஆச்சாரியர் குறிக்கின்றார். பிரத்யக்ஷம், அனுமானம் ஆகியவற்றால் மட்டுமே நாம் ஆத்ம தத்துவத்தை உணரமுடியாது. இவற்றால் அறிய ஒண்ணாத ஒன்றையே சுருதிப் பிரமாணம் விளக்குகின்றது. சுருதியை, சப்தப் பிரமாணத்தை, வேதத்தைத் தலையானதாக அங்கீகரிப்பது ஹிந்து மதமாகும். ஆஸ்திக மதம் என்பதின் பொருளே 'வேதத்தை ஏற்கும் மதம்' என்பதாம். யுக்தியை முற்றிலும் புறக்கணித்து விட்டார்கள் என்று நாம் முடிவு செய்யக் கூடாது. சாஸ்திரப் பிரமாணத்திற்குப் பெருமதிப்புத் தரும்போது, புலனறிவை நாம் ஒதுக்கவில்லை.'ந ஹி சுருதி சதமபி சீத: அக்நி: அப்ரகாச: இதி ப்ராமாண்யம் பவதி'-நூறு சுருதி மொழிகள் 'நெருப்பு குளிர்ச்சியானது, பிரகாசமற்றது' என்று உரைத்தாலும், அதைப் பிரமாணமாக ஏற்கமாட்டேன். ஏனெனில் 'ப்ரத்யக்ஷ விரோதாத்—நேரடியான புலன் அறிவிற்கு மாறுபட்டு இருப்பதால்'-என்பது சங்கர

பாஷ்யம். ஆகவே புலன் அறிவு ஒரு குறிப்பிட்ட எல்லை வரைதான் செயல்படும். அந்த வரையறையைக் கடக்கச் சுருதி மொழியே பயன்படும். Kant என்ற ஜெர்மன் தத்துவ அறிஞர் இந்த அடிப்படையைக்கொண்டே Phenomenon, Noumenon (வியவகாரம், பாரமார்த்தம்) என்று பிரித்துப் பேசுகின்றார். வெறும் யுக்தி போதாது; 'சுருதியுடன் கூடிய யுக்தியைக் கையாளுங்கள்-ச்ருதி மத தர்கோ அனுஸந்தீயதாம்' என்று சீடர்களுக்கு ஸ்ரீ சங்கரர் அறிவுறுத்துகின்றார். 'ச்ருதியேவ சரண்யா வயம்-நாம் வேதத்தையே அடைக்கலமாகக் கொண்டுள்ளோம்' என்று தெளிவாக உரைத்துள்ளார்.

மேலும் அனுபவத்தைப் பற்றி அறுதியிட்டுக் கூறும்போது, ஞான பரம்பரையை அடிப்படையாகக்கொண்டு பேசுவது நமது மரபு. ஆத்ம ஞான விலாசம் ஒரு குறிப்பிட்ட ஞானிக்குச் சொந்தமானது அன்று. இதன் துவக்கத்தை வேதத்தினின்று காணலாம். வேதமொழிகள் போற்றிப் புகழும் 'ஆன்ம ஞானமே' நம் அனுபவத்தில் தோன்றுவது என்ற உண்மையினுல், நமது ஞானப் பரம்பரையின் பழம் பெருமையைக் காலத்தை வென்று களிநடம் புரியும் சித்திரத்தை நமக்குத் தெளிவாக்குகின்றார்.

உலகைத் திருத்தமுடியுமா ?

ஒரு காலத்தில் பண ஆசைபிடித்த மனிதன் ஒருவன் இருந்தான். அவன் ஒரு மகானிடம் சென்று தான் விரும்புவதையெல்லாம் செய்து முடிப்பதற்கு ஒரு பூதம் வேண்டுமென்று கேட்டான். "உனக்கு ஒரு மந்திரம் உபதேசிக்கிறேன். அம்மந்திரத்தை உச்சரித்து நீ ஒரு பூதத்தைப் பெறலாம். நீ விரும்புவதையெல்லாம் அது நிறைவேற்றி வைக்கும். ஆனுல் நீ அதற்குத் தொடர்ந்து வேலைகொடுத்துக்கொண்டே இருக்க வேண்டும். அப்படி வேலை கொடுக்கத் தவறினுல் அது உன்னை எடுத்து விழுங்கிவிடும்" என்று அம்மகான் அவனுக்கு எச்சரிக்கை செய்தார். "அதற்கு வேலை கொடுப்பது மிகவும் சுலபம். அதன் வாழ்நாள் முழுவதும் செய்வதற்குரிய வேலையை நான் தந்துவிடுகின்றேன்" என்ருன் அம்மனிதன். மகான் பூதத்தைப் பெறுவதற்குரிய மந்திரத்தை உபதேசித்தார். மந்திரத்தைப் பெற்றுக்கொண்டு அம்மனிதன் தன் வீட்டுக்குச் சென்ருன். அம்மந்திரத்தைக் குறிப்பிட்ட எண்ணிக்கை உச்சரித்ததும் பெரிய பூதம் ஒன்று அவன் முன் தோன்றியது. "நான் உன் மந்திரத்துக்கு வசப்பட்டு வந்திருக்கின்றேன். எனக்கு வேலைகொடுக்க நீ தவறினுல் உன்னைக் கொன்றுவிடுவேன்" என்றது அப்பூதம். "ஓர் அரண்மனையைக் கட்டு" என்ருன் அம்மனிதன். உடனே அது கட்டி முடித்துவிட்டது. "பக்கத்திலுள்ள காட்டை அழித்து அதை ஒரு நகரமாகச் செய்" என்ருன். உடனே அது அதைச் செய்துமுடித்துவிட்டது. அம்மனிதன் அதற்குமேல் அப்பூதத்துக்கு வேலை கொடுக்கமுடியவில்லை. அப்பூதம் "வேலைகொடுக்காவிட்டால் உன்னைக்கொன்றுவிடுவேன்" என்றது. உடனே அம்மனிதன் மந்திரத்தைக் கொடுத்த மகானிடம் ஓடித் தஞ்சம் புகுந்தான். "என் உயிரைக் காப்பாற்ற வேண்டும்" என்று வேண்டிக்கொண்டான். அம்மனிதனின் பரிதாபகரமான நிலையை அறிந்த மகான் அவன் கையில் ஒரு வாளைக் கொடுத்து சுருண்ட வாலையுடைய நாயொன்றின் வாலை வெட்டிக்கொண்டு வந்து அப்பூதத்திடம் தந்து அவ்வாலை நிமிர்த்தித் தரும்படி கேட்டுக்கொள் என்ருர். அம்மனிதன் சுருண்ட வாலையுடைய நாயொன்றின் வாலை வெட்டி வந்து அப்பூதத்திடம் தந்து அதை நிமிர்த்தித் தரும்படி கேட்டுக்கொண்டான். அப்பூதம் வாலை நிமிர்த்தியது. பிறகு பூதம் வாலை விட்டதும் அது சுருண்டுகொண்டது. பூதம் எவ்வளவோ முயன்றும் அக்காரியத்தில் வெற்றிபெற முடியவில்லை. தன்னை அதிலிருந்து விடுவித்தால் போதும் என்று அப்பூதம் கேட்டுக்கொண்டது. "நான் உங்கள் இருவரையும் சமாதானப்படுத்துகின்றேன். பூதமே, நீ அம்மனிதனை விட்டுப் போய்விடு. அம்மனிதன் உன்னை இச்சங்கடத்திலிருந்து விடுவித்து விடட்டும்" என்று கூறி இருவரையும் சங்கடத்திலிருந்து அம்மகான் விடுவித்தார். இருவரும் மகிழ்ச்சியடைந்தார்கள். உலகைத் திருத்தியமைப்பது நாய் வாலை நிமிர்த்துவதற்கு நிகராகும். நல்லார்கள் உலகைத் திருத்தியமைக்கப் பல நூற்றுண்டுகள் முயன்றிருக்கின்றுர்கள். அவர்கள் தங்கள் கடமையைச் செய்யும் வரையில் உலகம் நன்ருக இருக்கிறது. அவர்கள் மறைந்ததும் உலகம் பழைய நிலைக்குப் போய்விடுகிறது. உலகத்தின் போக்கு அத்தகையது. உலகைத் திருத்த முடியாது. நம்மை நாமே திருத்தியமைத்துக் கொள்ளவேண்டும்.

ஜயதேவர் சரிதம்

(343 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரசன் ஜயதேவரைத் தேரில் வைத்து அழைத்துக்கொண்டு நாட்டுக்கு வந்தான். வழிமுழுவதும் ஜயதேவரையும் பத்மாவதியையும் மனமாரப் புகழ்ந்துகொண்டே வந்தான். நாட்டுக்குள் நுழைந்ததும் நாடு லட்சுமி கடாட்சம் இல்லாது ஆங்கு அழுகுரல் நிறைந்திருப்பதைக் கண்டான். மக்கள் அரசன் முன் நில்லாமல் தங்கள் தங்கள் வீட்டுக்குள் சென்று மறைந்துகொண்டார்கள். அரசனுக்கு ஒன்றும் புரியவில்லை. நாட்டு மக்கள் குதூகலமாக இல்லாது பாழடைந்த நிலையில் இருப்பதற்குக் காரணம் என்னவாக விருக்கலாம் என்று அரசன் ஜயதேவரைக் கேட்டான். ''உனக்கு ஏற்பட்ட மனக்கலக்கமே எனக்கும் ஏற்பட்டிருக்கிறது. நாட்டில் உத்தமருக்கு யாதோ தீங்கு நேரிட்டிருக்கும்போல் இருக்கிறது. குடிமக்களை வினவி விஷயத்தை அறிந்துவா'' என்றார் ஜயதேவர். அரசன் தேரில் இருந்து இறங்கிக் குடிமக்களை நோக்கி, ''புனிதவான்களே, நம் பட்டணத்தில் நடந்துள்ள தீங்கு யாது? அதை எனக்கு அறிவியுங்கள்'' என்று வற்புறுத்திக் கேட்டான். மக்கள் மௌனமாய் நின்றார்கள். மன்னன் மந்திரிகளை அரண்மனைக்கு அனுப்பிவைத்து விஷயத்தை அறிந்துவரும்படி கூறினன். மந்திரிகள் அரண்மனைக்குப் போய்த் திரும்பிவந்து, ''அரசே! பட்டணத்தில் நடந்துள்ள தீங்கு எது என்பதை ராணியைக் கேட்டுத்தான் தெரிந்துகொள்ளவேண்டும். மற்றவர்கள் யாரும் அச்செய்தியைச்சொல்ல நடுங்குகிறார்கள்'' என்று கூறினர்கள். அரசன் உடனே அரசி இருக்குமிடத்திற்குச் சென்றான். ஆங்கு அவள் அழுது புலம்பிக்கொண்டிருந்தாள். அரசன் தாதிகளை அழைத்து நடந்த விஷயத்தை அவர்களிடம் இருந்து அறிந்து கொண்டான். அரசனுக்குத் துக்கம் மேலிட்டது. ''தாயான பத்மாவதி இறந்துபோய் விட்டார்களாம். தெய்வமே! இந்தப் பழிக்கு நான் என்ன செய்வேன்? நான் எப்படி உயிர் வாழ்வேன்?'' என்று அலறிய வண்ணம் மூர்ச்சை அடைந்து தரையில் வீழ்ந்தான். அவ்வமயம் ஜயதேவரும் அங்கு வந்து சேர்ந்தார். அரசனுடைய மனைவி புலம்பி அழுதுகொண்டிருப்பதையும் அரசன் மூர்ச்சை அடைந்து வீழ்ந்து கிடப்பதையும் கண்டார். ஜயதேவர் அங்குள்ள தாதிமார்களை விசாரித்து விஷயத்தை அறிந்தார்.

அரசனின் தேவியானவள் ஜயதேவருடைய கால்களைப் பிடித்துக்கொண்டு, ''தெய்வமே! நான் அறியாமல் செய்த குற்றத்தைப் பொறுத்துக்கொள்ளவேண்டும். பத்தினித் தெய்வமாகிய பத்மாவதியை எழுப்பி என்னையும் அரசனையும் காப்பாற்றவேண்டும். தங்கள் கருணை இப்பொழுது எங்கள் பால் பொழியவேண்டும்'' என்று அழுதாள். அரசன் மூர்ச்சை தெளிந்தான். தம் மனைவி ஜயதேவரின் கால்களைப் பிடித்துக்கொண்டிருப்பதைப் பார்த்தான். கோபம் பொங்கி எழ மனைவியின் கூந்தலைப் பிடித்து இழுத்து ''பஞ்சமா பாதகி! பத்மாவதியைக் கொன்ற பாவி! கடினச் சித்தமுள்ள நீலி! உன்னைத் துண்டு துண்டாக வெட்டுவேன். பிறகு இத் தாதிகளையும் துண்டு துண்டாக வெட்டிக் கொன்றுவிட்டு நானும் மடிவேன்'' என்று சீறி எழுந்தான். ''ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு என்பதை அரசனே அறியீரோ? பதட்டம் அடையவேண்டாம். சற்றுப் பொறும்'' என்று ஜயதேவர் அரசனைச்சாந்தப் படுத்தினர். அரசனின் மனைவியை நோக்கி, ''அம்மையே, நீங்கள் அழவேண்டாம். நான் இருக்கும்போது உங்களுக்குக் குறை வந்து விடாது. இப்பொழுது பத்மாவதி மடிந்தது தெய்வச்செயல். நீங்கள் அதற்குக் குற்றவாளி அல்லர். மரண காலம் வந்து விட்டால் பிரம்மாதி தேவர்களும் அதைத் தடை செய்ய முடியாது. உங்களை நிந்திப்பதில் பொருளில்லை. பத்மாவதிக்குக் காலம் நெருங்கி விட்டது. எனவே அவள் உடலை விட்டு மறைந்தாள்'' என்று ராணிக்குத் தேறுதல் கூறினர். பிறகு ஜயதேவர் அரசனை நோக்கிப் பகர்ந்ததாவது: ''அரசே!

உன் கோபத்தை ஆற்றிக்கொள். என் வார்த்தையைக் கேள். யாரையும் குறை கூறுதே. பத்மாவதியை அடக்கம் செய்வ தற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்'' என்று கூறினுர். ''சுவாமி! நீங்கள் நன்கு உரைத்திர்கள். பத்மாவதியைக் கொன்ற இவர்களை வெட்டி நெருப்பில் சுட்டு விட்டு என் உயிரையும் விட்டு விடுகிறேன். பிறகு எங்கள் அனைவருக்கும் நீங்கள் ஈமக்கடன் களைச் செய்து விடுங்கள்'' என்று கோபத் தோடு கூறி வாளால் ராணியை வெட்டப் போனுன். ராணி ஜயதேவரிடம் அபயம் கேட்டாள். அரசனைத் தடுக்க ஜயதேவர் முயன்றபொழுது ஜயதேவருக்குக் கைகால் கள் பழையபடி வந்து விட்டன. கைகால் கள் தோன்றியதையும் அறியாமல் எழுந்து போய் அரசனுடைய கையைப் பிடித்துத் தடுத்து நிறுத்தினுர். தன் இஷ்ட தெய்வ மான ஸ்ரீமந் நாராயணனைத் தோத்திரம் செய்தார். ஜயதேவரின் உருக்கமான பிரார்த்தனைக்கு ஸ்ரீமந் நாராயணன் இரங்கி அவருக்குக் காட்சி கொடுத்தார். ''என்னை நீ வருந்தி அழைத்த காரணம் என்ன? உனக்கு என்ன வரம் வேண்டும்?'' என்று ஸ்ரீமந் நாராயணன்ஜயதேவரைக்கேட்டார். ''புருஷோத்தமா! தீனபந்து! தேவரீருடைய காட்சி எனக்குக் கிடைத்திருக்க வேறு வரம் என்ன கேட்பேன்? உம்மை நினைக்குமாறு என் உள்ளத்தைத் தூண்டிய நீங்கள் என் விருப்பத்தையும் அறிவீர்கள்'' என்று பக வானுடைய பாதங்களில் வீழ்ந்தார். ''ஜய தேவரே! உன்னுடைய பக்தியை மெச்சி னேன். உன்னுல் ஆகாத காரியம் ஒன்று மில்லை. பத்மாவதி உயிர்பெற்று எழும்படி செய்யும் மனத்திட்பம் உனக்கு உண்டு. நீ ஆசாபாசங்களைத் துறந்தவன். உன் மன தைச் சோதிக்கவே இந்நிகழ்ச்சி நேர்ந்தது. பத்மாவதி எழுந்திருப்பாள்'' என்று அருள் புரிந்தார். பத்மாவதி நித்திரையிலிருந்து எழுபவள் போல் எழுந்தாள். பதி பக்கத் தில் நின்று கொண்டிருப்பதைப் பார்த் தாள். கைகால்கள் வரப்பெற்றவராய் பிரம்மானந்த முகவிலாசத்துடன் ஜயதேவர் காட்சி கொடுத்தார். பத்மாவதி ஆனந்தம் மேலிட்டவளாய்க் கணவனை வலம் வந்து பணிந்து பகவானையும் வீழ்ந்து வணங்கி ஜயதேவரின் பக்கத்தில் நின்ருள்.

பகவான் நாராயணன் ஜயதேவரையும் பத்மாவதியையும்,கிரவுஞ்சராஜனையும்ஆசீர் வாதம் செய்தார். பகவான் ஜயதேவரை நோக்கிப் பகர்ந்ததாவது: ''ஜயதேவரே! நீ அடைந்த பிரம்ம ஞானம் உன்னிடம் மட் டும் இருப்பது முறையன்று. உலக மக் களுக்கு அது பயன்படவேண்டும். பக்தி மார்க்கத்தையும், முக்தி மார்க்கத்தையும் சேர்த்துச் சில நூல்களை எழுதுவாயாக. அவைகளை மக்களுக்குப் போதிப்பாயாக. அதன் பின் என் திருவடியை வந்து அடை வாயாக'' என்று திருவாய் மலர்ந்தருளி ஸ்ரீமந் நாராயணன் காட்சியில் இருந்து மறைந்தார். ஸ்ரீமந் நாராயணன் காட்சி பெற்று மூவரும் ஆனந்த சாகரத்தில் மூழ்கி ஞர்கள். அரசன் ஜயதேவருடைய உத்திர வுப்படி அரசாங்கக் காரியங்களைச் செம்மை யாகச் செய்துகொண்டிருந்தான். ஜயதேவர் பகவான் அருளிச் செய்தபடி பகவானுடைய மஹிமைகளைப் புகழ்ந்து பாகவதம் பாடி முடித்தார். அதை அரசனிடம் கொண்டு வந்து அரங்கேற்றவேண்டும் என்ருர். அர சன் அதற்கு ஏற்பாடுசெய்தான்.அச்சபைக்கு இறைவன் பிராம்மண வடிவம் தரித்து வந் திருந்தார். அவர் தம்மை அரசனுக்கு அறி முகம் செய்துகொண்டார்: ''அரசனே! நான் கோகுலப் பிருந்தாவனத்திலிருந்து வருகின்றேன். நான் சகல சாஸ்திரங்களையும் அறிந்திருக்கிறேன். சம்ஸ்கிருத இலக்கண மாகிய வியாகரணத்தில் தேர்ச்சி பெற்றுப் பரமேஷ்டி எனப்பட்டம் பெற்றிருக்கிறேன். கல்வியில் எனக்கு நிகரானவர்கள் இருக் கிறுர்களா? என்று தேடிப்பார்த்தேன். உம் பட்டணத்தில் ஜயதேவர் என்னும் மஹா பண்டிதர் இருப்பதாகக் கேள்விப்பட்டு அவ ரைக்காணஇங்கு வந்தேன்.''இங்ஙனம் அவர் அறிமுகம் செய்து கொண்டதைக் கேட்ட ஜயதேவர் எழுந்து அவருடைய திருவடி களில் வீழ்ந்து ''சுவாமி! அடியேன் பண்டி தன் அல்லன். உமது பாத சேவைக்கு வந்த பணியாள்'' என்று பௌவியமாகக் கூறிக்

கொண்டார். அம்மாயப் பிராம்மணன் பகர்ந்ததாவது: ''நீ தானு ஜயதேவர் என்பவன்? நீ தானு பந்தபாசத்தை எல்லாம் அகற்றியவன்? நீ தானு மனைவியை உயிர்ப்பித்தவன்? முக்கால் மூடனை முழு மூடன் கொண்டாடினதைப் போன்று, கல்வி அறிவு இல்லாத இவ்வரசன் உன்னைச்சுவாமி என்றும், பிரம்மஞானி என்றும், பிரசண்ட வித்துவான் என்றும் போற்றிக்கொண்டிருக்கின்றுன். அரசன் போற்றியதனுல் நீ பண்டிதனுகிவிட்டாயா? உன்னுடைய அறிவுத் திறமையை இப்பொழுது நான் பார்த்து விடுகின்றேன்.'' ''சுவாமி! அடியேன் 'ஹரி ஓம்' என்ற மந்திரத்தின் பொருள் தெரியாதவன். வியாகரணம் எதுவும் கற்று அறியாதவன். யானைக்கு இணையான உங்களுடன் பூனைக்கு இணையான நான் பேச வல்லவனே? ஒன்றுமறியாத இவனைக் கிருபை கூர்ந்து தாங்கள் ஆட்கொள்ளவேண்டும்'' என்று கூறி ஜயதேவர் அவர் பாதங்களில் விழ்ந்தார். ''ஜயதேவா! கார்த்திகேயன், பிரம்மாவை எதிர்த்துப் பிரணவத்துக்குப் பொருள்கேட்டார். பிரம்மாவுக்குப் பொருள் தெரியாததால் அவரைச் சிறையில் அடைத்தார். பிறகு தந்தையாகிய சிவபெருமானுக்கு ஓங்காரத்தின் ரகசியத்தை உபதேசித்துத் தகப்பன் சுவாமி என்று பெயர் பெற்றுர். கார்த்திகேயனைப் போன்று என்னை 'ஹரி ஓம்' என்கின்ற மூல மந்திரத்துக்குப் பொருள் கேட்டு என்னை வென்று நீ புகழ் பெற யுக்தி செய்தாயோ? 'ஹரி ஓம்' என்கின்ற மந்திரத்துக்குப் பொருள் தெரிந்து விட்டால் சாஸ்திரங்களை ஓத வேண்டியதன் அவசியம் என்ன? 'ஹரி ஓம்' என்கின்ற மந்திரத்துக்கு அர்த்தம் தெரிந்தவனை யார் வெல்லக்கூடும்? அவரை யார் எதிர்க்க முடியும்? அடே அப்பா! ஆரம்பத்திலேயே உன் பராக்கிரமத்தைக் காட்டாமல் காட்டி விட்டாய். என்னை வாட்டாமல் வாட்டி விட்டாய். இப்படி எத்தனை வித்துவான்களை இப்பட்டணத்துக்கு வராமல் ஓட்டி இருக்கின்றுய்? என்னையும் மூடர்களில் ஒருவனுகச் சேர்த்துவிட்டாய். 'ஹரி ஓம்' என்கின்ற மந்திரத்துக்குப் பொருள் கேட்டு என்னை மாட்டவைத்து விட்டாய். என்னிடத்துக் கோபாக்னியை மூட்டிவிட்டாய்'' என்று ஆர்ப்பரித்தார். ''இதென்ன! வம்படி வழக்காக இருக்கின்றது. 'ஹரி ஓம்' என்ற மந்திரத்தின் பொருளை நான் அறியேன் என்று கூற அதற்கு விபரீதமாக வியாக்கியானம் தந்து விட்டார். என்னென்னமோ வார்த்தைகளைப் பேசுகின்றுர். மௌனம் கலக நாஸ்தி என்று சொல்லுவார்கள். நான் மௌனமாகவே இருந்துவிடுகிறேன். அதுதான் நல்லது'' என்று எண்ணி, சற்று எட்டவிலகிக் கைகளைக் கூப்பிக்கொண்டு பேசாதிருந்தார். ''துஷ்டனைக் கண்டால் தூர விலகு என்பது பழமொழி. என்னை நீ துஷ்டனுகக் கருதித் தூரவிலகிப் போயிருக்கின்றுய். நீ தூரமாய்ப் போனுலும், என்னை நீ வெல்பவனுனுலும் உன்னை நான் சோதனை செய்யாமல் விடமாட்டேன். 'ஹரி ஓம்' என்ற மந்திரத்துக்குப் பொருள் நான் அறியாதவன் என்று நீ நினைக்கின்றுய். நீ ஆச்சரியப்படும்படி நான் பொருள் சொல்லப்போகிறேன். சபையோர்களே! நீங்களும் அதைக் கேளுங்கள்'' என்று கூறினுன். 'ஹரி ஓம்' என்ற மந்திரத்துக்கு அப்பிராம்மணன் தந்த விளக்கமாவது: ''பக்தர்களுடைய பாபங்களை அரிப்பவர் ஹரி என்று சொல்லப்படுகிறுர். அவர் பிரணவ சொரூபியாக இருக்கின்றுர். பிரணவம் என்பது அ, உ, ம என்ற மூன்று அக்ஷரங்களைக் கொண்டதாகும். பூரண பிரம்மஞானிதான் பிரணவத்தின் பொருளை அறிய முடியும். வேதங்கள் பிரம்மம் ஓங்கார வடிவத்தில் இருக்கின்றது என்று முறையிடுகின்றன. பிரணவத்தின் ரகசியம் தெரியாதவர்கள் சகல வேதங்களையும் கற்றிருந்தவர்களானுலும் அவர்கள் ஒன்றும் அறியாதவர்களாவார்கள். பூரண ஞானம் பெற்ற சற்குருவின் கிருபையாலன்றிப் பிரணவத்துக்குப் பொருள் தெரிதல் இயலாது. வேத சாஸ்திரங்களுக்கெல்லாம் ஓங்காரமே ஆதாரமாகவிருக்கின்றது. வேதத்தினுடைய சாரம் பிரணவம்எனலாம். சிருஷ்டிக்கு ஆதாரமாயும், ஆதேயமாயும் பிரணவம் அமைந்திருக்கின்றது. சகல

மந்திரங்களுக்கும் உயிராக மூல அக்ஷரமாக விருப்பது பிரணவமாகும். பிரணவத்தின் உண்மையை அறியாமல் செய்யும் தவம், ஜபம், தியானம், சுவாத்யாயம், வேதாந்த சிரவணம் ஆகியவை சிறந்த பயனை அளிக்கா. எல்லா மந்திரங்களுக்கும் பிரணவமே ஆதாரம். தானும் பிரம்மம், ஜகத்தும் பிரம்மம் என்னும் திடஞானம் எவனுக்கு வந்திருக்கின்றதோ அவனே பிரணவத்தின் பொருளை அறிந்தவனாவான். பிரணவத்தை அறிந்தவனே பிரம்மத்தில் ஏக பாவனையில் இருப்பான். மற்றவர்கள் மாயையில் சிக்குண்டவர்களாகவிருப்பார்கள். பிரணவத்தை அறிந்தவனே மயக்கத்திலிருந்து விடுபடுபவனாகின்றான். பிரணவத்தை அறிந்தவனே பிராம்மணன் என்று அழைக்கப்படுகின்றான். ஓங்காரத்திலுள்ள அகரம் ஜாக்கிரதாவஸ்தை என்றும், பிரம்மதேவன் என்றும் சொல்லப்படும். ஓங்காரத்திலுள்ள உகரம் சொப்பனாவஸ்தை என்றும், விஷ்ணுவென்றும் சொல்லப்படும். ஓங்காரத்திலுள்ள மகரம் சுஷுப்தி அவஸ்தை என்றும், ருத்திரன் என்றும் சொல்லப்படும். ஓங்காரத்தில்தான் பிரபஞ்சம் முழுதும் அடங்கியிருக்கிறது. மும்மூர்த்திகளுக்கும் ஆதாரமாகவிருக்கும் ஓங்காரத்தில் இல்லாத வஸ்து எவ்வுலகத்திலும், எக்காலத்திலும் இல்லை என்றே சொல்லலாம். ஓசைக்கு அப்பாற்பட்ட பிரம்மத்திலிருந்து ஓங்காரம் உண்டாயிற்று. ஓங்காரத்திலிருந்து ஓசையும், சொல்லும், வாக்கும், சுலோகமும், வேதமும் உண்டாயின. ஓங்காரம் சகுணப் பிரம்மமாகவும், நிர்க்குணப் பிரம்மமாகவும் இருக்கின்றது. 'ஓம் நமோ நாராயணாய', 'ஓம் நமசிவாய' என்னும் சகுணப் பிரம்மமான மந்திரங்களுக்கு ஆரம்பத்திலிருப்பது ஓங்காரமேயாம். ஓங்காரத்தை உச்சரிப்பவர் மும்மூர்த்திகளையும், ஆதிசக்தியையும், பரப்பிரம்மத்தையும் நினைத்தவர்களாகின்றார்கள். 'சிவோஹம்' என்னும் அத்வைத மந்திரத்தை வசிஷ்டர் ஸ்ரீராமருக்குப் போதித்தார். அம்மந்திரத்துக்கு ஓம் ஆதாரமாக இருக்கின்றது. ஓங்காரத்தின் ரகசியத்தை விரித்துரைத்தது போதுமா? நான் உரைத்ததற்கு மேல் ஜயதேவரே, நீ விளக்கமுடியுமானால் விளக்கலாம்'' என்றான் வயோதிகப் பிராம்மணன். ''தேவரீர், உங்களுக்கு முன் நான் எம்மாத்திரம்? இதோ அடியேன் கற்ற கல்வி இந்தப்பாகவத வடிவத்திலிருக்கிறது. இந்த நூலை நீங்கள் ஏற்று அங்கீகரிக்கவேண்டும்'' என்று பணிவுடன் நூலை அவர் கையில் தந்தார். அம்மாயப் பிராம்மணன் அந்த நூலை வாசித்துவிட்டுப் பகர்ந்ததாவது: ''இந்த நூல் முன்னோர் செய்தது ஆகும். இதை நீ செய்தது என்று எப்படிக் கூறுகின்றாய்?'' என்று அப்பிராம்மணன் கேட்டான். அரசன் குறுக்கிட்டு, ''சுவாமி, இந்நூலை முன்னோர்கள் இயற்றவில்லை. என் சற்குரு ஜயதேவர் சுவாமிகள்தாம் இந்நூலை இயற்றியுள்ளார்' என்று கூறினான். பிராம்மணன் ஜயதேவருடைய நூலை அவர் கையில் கொடுத்து ''முன்னோர் செய்த நூலை நான் வாசிக்கிறேன்; நீ உன்னுடைய நூலை ஒப்பிட்டுப் பார்த்துக்கொண்டு வா'' என்றார். அப்பிராம்மணன் வாசித்த சுலோகங்கள்தாம் தாம் தற்போது எழுதியுள்ள பாகவதத்தில் வரிசையாக விருப்பதைப் பார்த்து ஒன்றும் தோன்றாதவராக ஆச்சரியத்தில் திளைத்தவராக ஜயதேவர் அசைவற்று நின்றார். பகவத் மஹிமைகளை விளக்கும் சுலோகங்கள் வரும்பொழுது பிராம்மண வடிவத்திலிருந்த பகவான் நர்த்தனம் செய்தார். ஆங்கிருந்த அனைவரும் தங்களை மறந்து பகவானோடு சேர்ந்து ஆனந்தத் தாண்டவம் புரிந்தார்கள். நீண்டநேரம் அனைவரும் ஆனந்தத்தில் மூழ்கியிருந்தனர். மாயப் பிராம்மணன் பகர்ந்ததாவது: ''ஜயதேவரே, நீ செய்த பாகவதத்தை முதல் முதல் நானே வாசித்து அரங்கேற்றச் சித்தம் கொண்டு பிராம்மண வடிவத்தில் வந்தேன். அதை வாசிக்கும் பொழுது என்னை மறந்தேன். உனக்கும் காட்சி தந்தேன்; மகிழ்வடைந்தேன். உன்னுடைய பாகவதத்தில் ஓர் அத்தியாயத்தை வாசிக்கும் பலன் பழைய பாகவதம் முழுவதையும் வாசிக்கும் பலனுக்கு நிகராகும்.'' இங்ஙனம் அருளிப் பகவான் மறைந்தார்.

(தொடரும்)

தியாகச் சுடர் அணைந்தது

(சுவாமி துருவானந்தர்)

நீலத்திரைக் கடல் ஓரத்திலே நின்று நித்தம் தவம் புரியும் குமரி அன்னை கொலு வீற்றுள்ள இடம் கன்னியாகுமரி. அவள் அருட்செல்வன் அண்ணல் விவேகானந்தரின் நினைவாலயம் இன்று அகில உலக மாந்தரையும் தன்பால் ஈர்க்கும் அற்புதக் கலைக் கோயிலாக மிளிர்ந்து கொண்டிருக்கின்றன. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஆழ்கடலில் அனாதைகள் போன்றிருந்த இரட்டைப் பாறைகள் அனைத்துலக மக்களுக்கும் ஆத்ம சாந்தி நல்கும் அருள் கேந்திரத்தைத் தன்னகத்தே இன்று தாங்கிக்கொண்டிருக்கின்றன. பயனற்றுக்கிடந்த பாறைகளில் பார்புகழும் நினைவாலயம் ஒன்றை விவேகானந்த சுவாமிகளுக்காக எழுப்பிய பெருமை திரு ஏகநாத் ரானடே அவர்களையே சாரும். ஹிந்து மதத்தின் பெருமையை உலகறியச் செய்தவர் விவேகானந்த சுவாமிகள். அவ் விவேகானந்த சுவாமிகளுக்கு நினைவுச் சின்னம் எழுப்பி நாடு முழுவதும் பட்டி தொட்டிகளிலெல்லாம் அவர் புகழைப்பரப்பி, கிறிஸ்துவ மதப்பிரசாரத்தை, மத மாற்றத்தை அருணாசலப் பிரதேசம், மேகாலயா போன்ற இமயமலைப் பகுதிகளில் தடுத்தும் ஹிந்து உணர்வை, ஹிந்து சமயக்கல்வியை ஊட்டியும், உன்னதமான இளைஞர்களை உருவாக்கியும் வரும் பெருமை கர்ம வீரர் திரு ஏகநாத் ரானடே அவர்களையே சாரும்.

வேரானது எங்ஙனம் பிறர் கண்ணுக்குப் புலப்படாது மண்ணிற்குள் புதைந்திருந்து மரத்தைப் பாதுகாக்கிறதோ அங்ஙனம் சான்றோர்கள் தங்களை உலகுக்குக் காட்டிக் கொள்ளாது பெரிய பெரிய காரியங்களைச் செய்து விட்டுப் பிரியாவிடை பெற்றுச் சென்றுவிடுகின்றனர். விவேகானந்தப் பாறை நினைவுச் சின்னம் அமைத்தவர், விவேகானந்த கேந்திரத்தின் அரும் பெரும் தலைவர், யுவபாரதி, பிரம்மவாதின், விவேகானந்த கேந்திர பத்திரிகா ஆகிய தேசிய உணர்வைத் தூண்டுகிற, ஹிந்து மதத்தின் பெருமையைப் பேசி வருகிற ஆங்கிலப்பத்திரிகைகளுக்குத் தலைமைப் பத்திராதிபராகவிருந்து மிகச் சிறப்பான முறையில் வெளியிட்டு அனைத்து ஹிந்து அபிமானிகளின் உள்ளத்தில் இடம் பெற்றவர், கர்ம வீரர் ஏகநாத் ரானடே ஆவார். அவர் சென்ற ஆகஸ்டு மாதம் 22ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை மதியம் 2-45 மணிக்குத் திடீரென்று ஏற்பட்ட மாரடைப்பால் காலமானார் என்ற சோகச் செய்தி கேட்டுக் குமுறிய உள்ளங்கள் கோடிக்கணக்கானவைகள். தனக்கெனவாழாது பிறர் நலனுக்காக வாழ்ந்த அந்தக் கர்ம யோகியினுடைய வரலாறு எதிர்கால இளம் தலைமுறையினர்க்கு என்றைக்கும் வழிகாட்டியாக இருக்கும் என்று இங்குத் தருகிறோம்.

வீரத்தின் விளை நிலமாகிய மஹாராஷ்டிர மாநிலத்திலுள்ள அமராவதி மாவட்டத்தில் பம்பாய்க்கும், நாகபுரிக்கும் இடையில் உள்ளது திம்தாலா என்னும் சிற்றூர். அங்கு 1914 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19 ஆம் தேதி திரு ஏகநாத் ரானடே அவர்கள் பிறந்தார். அவருடைய தந்தையார் அவ்வூர் ரயில்வே ஸ்டேஷனில் ஸ்டேஷன் மாஸ்டராகப் பணியாற்றியவர். இளமையிலேயே ஆதரவு அற்று நின்ற ரானடே அவர்கள் தம் மூத்த சகோதரரின் உதவியால் நாகபுரியில் கல்வி கற்றார். தத்துவத்துறையில் M.A. பட்டமும், சட்டப்படிப்பிலும் தேர்ச்சியும் பெற்றார். இப்போது நாடு முழுவதும் பரவியுள்ள R.S.S. இயக்கத்தைத் தோற்றுவித்த அமரா டாக்டர் ஹெட்கேவார் அவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். இப்போதைய R S S தலைவராகிய பரம பூஜனீய ஸ்ரீ பாலாசாகிப் தேவரஸ் அவர்களும் திரு ஏகநாத் ரானடே அவர்களும் பள்ளித் தோழர்கள். டாக்டர்ஜீயால் உருவாக்கப்பட்டவர்கள். சிறுவயதிலேயே திரு ரானடே அவர்கள் சிறந்த புத்திசாலித்தனமும், கடுமையாக உழைக்கும் சுபாவமும் படைத்தவராகவிருந்தார். இளம் வயதிலேயே சிறப்பாகப் பேசக்கூடிய ஆற்றலை அவர் வளர்த்திருந்தார். பட்டப் படிப்புப் பூர்த்தியான பிறகு வயிறுவளர்க்க

அவர் உத்தியோகம் தேடிப் போகவில்லை. சிறு வயதிலேயே R. S. S. இயக்கத்தில் பயிற்சி பெற்றிருந்ததால் ஒழுக்கம், உழைப்பு, உண்மை, நேர்மை, சமநோக்கு முதலிய நல்ல பண்புகளை உடையவராகத் திகழ்ந்தார். சிறுவனாக இருந்தபொழுது நாகபுரியில் உள்ள ராமகிருஷ்ண மடத்துக்கு அடிக்கடி போய் வந்தார். அங்குள்ள துறவிகளோடு இணக்கம் கொண்டிருந்தார்.

பறவைகளால் கொத்தப்படாத கனிகளே பகவானுக்குப் படைக்கத் தகுதி படைத்தவைகள். அதுபோன்று உலக ஆசை என்ற கறைபடாத இளைஞர்களே தேச சேவை செய்யவும், தெய்வ தரிசனம் பெறவும் தகுதிபடைத்தவர்கள் என்றார் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர். அந்தக் கோட்பாட்டுக்கு ஏற்ப உலக ஆசை என்ற கறைபடாதிருக்க மணம் புரியாது நைஷ்டிக பிரம்மச்சாரியாய் வாழ்ந்து R. S. S. இயக்கத்திற்குத் தம் உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணம் பண்ணினார் திரு ரானடே அவர்கள். ஸ்ரீ ராமனுக்கு ஆஞ்சனேயன் அமைந்து ராம சேவையிலீடுபட்டது போன்று விவேகானந்த சுவாமிகளின் சிறந்த கருவியாகத் தம்மை எண்ணி, அவரையே சார்ந்து அவரிடம் தம்மை முற்றிலும் ஒப்படைத்தார். யார் ஒருவர் தம்மை முற்றிலும் ஈசனிடத்தில் ஒப்படைத்து சுயநலமற்று அகங்கார மமகாரமின்றிச் செயல்படுகிறாரோ, அவரைக் கருவியாக வைத்துக்கொண்டு ஈசன் பெரிய பெரிய காரியங்களை நிறைவேற்றிக் காட்டுகிறான்.

1963ஆம் ஆண்டு விவேகானந்தரின் நூற்றாண்டு விழா மிகச் சிறப்பாக உலக முழுதும் கொண்டாடப்பெற்றது. அந்த மாபெரும் தேசபக்த துறவிக்குத் தம் அன்புக்காணிக்கையாக ஒரு நூலைச் சமர்ப்பித்தார். அந்த நூல்தான் "Rousing call to Hindu Nation" அதாவது "ஹிந்து ராஷ்டிரத்திற்கு ஓர் அறைகூவல்" என்பது. 1963ல் வெளியிடப்பட்ட அந்த நூல் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு "எழுமின் விழிமின்" என்ற தலைப்பில் வெளிவந்துள்ளது. விவேகானந்தரின் நூற்றாண்டை முன்னிட்டு ஆங்காங்கே நினைவுச் சின்னங்கள் எழுப்புவது, ஞாபகார்த்த மண்டபங்கள் கட்டுவது போன்ற எத்தனையோ திட்டங்கள் உருவாகும் நிலையிலிருந்தபொழுது, கன்னியாகுமரியில் மூன்று கடல்கள் சேரும் இடத்தில் துறவி வேந்தனுக்கு நினைவுச் சின்னம் அமைக்கக் கமிட்டி ஒன்று உருவாக்கப்பட்டது. அந்தக் கமிட்டிக்குத் தலைமை வகித்து நடத்த, சரியான முறையில் நிர்வகிக்கத் திறமையான தலைவர் ஒருவர் தேவைப்பட்டார். குருஜீயின் ஆலோசனையின் பேரில் திரு ஏகநாத் ரானடே அவர்கள் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

கன்னியாகுமரி விவேகானந்த பாறையின்மீது ஒரு கோடி இருபத்தைந்து லட்சம் ரூபாய்செலவில் மாபெரும்நினைவாலயத்தை நிர்மாணித்தபெருமை திரு ஏகநாத்ரானடே அவர்களையே சாரும். இரவு பகல் என்று பாராது அயராது உழைத்து எண்ணியதை முடித்தார். இயற்கையின் சீற்றங்களைச் சமாளித்தும், புறச்சமயத்தார் காட்டிய எதிர்ப்பைப் பொருள்படுத்தாமலும் எண்ணியதை முடித்தே தீருவது என்று ஒரே உறுதியாக இருந்ததால் எண்ணியதை எண்ணியபிரகாரம் சாதிக்க அவரால் முடிந்தது.

மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்-செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்பும் கொள்வார்
கருமமே கண்ணாயி னார்.

இங்ஙனம் கூறுகிறது ஒரு பழம் பாடல். அந்தப் பாடலுக்குச் சிறந்த விளக்கமாகத் திகழ்ந்தவர்தாம் மறைந்த ஏகநாத் ரானடே அவர்கள். ஸ்ரீ ரானடே அவர்கள் ஒரு ஸ்திதப்பிரக்ஞன் ஆவார். கீதையில் கண்ணன் ஸ்திதப்ரக்ஞனைப்பற்றிச் சொன்ன கோட்பாடு திரு ரானடே அவர்களுக்கும் பொருந்தும். துன்பத்தில் துடியாத, இன்பத்தில்நாட்டமில்லாத, பற்று, அச்சம், சினமற்ற உறுதியான உள்ளத்தை உடையவன் ஸ்திதப்பிரக்ஞன் என்று சொல்லப்படுகின்றான். அதே கோட்பாடு திரு ரானடே அவர்களுக்கும் பொருந்தும். சாதாரணப் பதவி வந்துவிட்டால் சாதாரண மனிதனுடைய

மனப்பாங்கு நமக்குத் தெற்றெனப் புலப்படுகிறது. அந்தப் பதவியைச் சாதாரண மனிதன் எத்தகைய துஷ்பிரயோகம் பண்ணுகின்ருன் என்பதை நாம் பார்க்கின்ரும். விவேகானந்த கேந்திரத்தின் பொதுச் செயலாளராக, அதன் பின்பு தலைவராக, சர்வதேச விவேகானந்த கேந்திரம் என்பதை உருவாக்கும் ஸ்தாபகராக, கேந்திர வெளியீடுகளான ஆங்கிலப் பத்திரிகைகளுக்கு தலைமைப் பத்திராதிபராக இருந்தபொழுதும் அவர் ஒரு சாதாரண மனிதரைப் போன்று எந்தவித விளம்பரமும் இன்றி எளிய வாழ்க்கை நடத்தியது வியப்பிற்குரியது. ஒருவன் எப்படிப்பட்டவன் என்பதைத் தெரிந்துகொள்வதற்கு அவன் கையில் அதிகாரத்தைக் கொடுத்தால் அவனுடைய உண்மையான இயல்பு முழுமையாகத் தென்படும். ஆனல் திரு ரானடே அவர்கள் கல்லூரிப் படிப்பு முடித்து R.S.S. இயக்கத்தில் ஈடுபட்டது முதல், உடலை உதறிவிட்டுப் போகும்வரை தன்னலமற்ற உழைப்பாளியாகத் திகழ்ந்தார். புறவுலகம் காட்டிய மையல்களில் சிக்காது தம் வாழ்வு அனைத்தையும் நாட்டின் நலனுக்கே அர்ப்பணம் பண்ணிய தியாக மூர்த்தி ஆவார் அவர். உடல்பற்றை உதறி எறிந்தவர் என்பதற்கு அவர் சொன்ன வாசகமே சான்று. நெஞ்சுவலி ஏற்பட்டு அவரை வாட்டியபொழுதும், 'என்வாழ்க்கை முழுவதுமே நான் போராடி வந்தவன். மரணத்தோடு மட்டும் போராடாது விட்டு விடுவேனே?' என்று சிரித்துக்கொண்டே காலனுக்குச் சவால் விடுகின்ற போக்கிலே பேசுவாராம். கன்னியாகுமரிப் பாறையில் விவேகானந்தரின் திருவுருவை நிலைநாட்டி அதைத் தரிசிப்பவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படவேண்டும் என்று திட்டமிட்ட ரானடே அவர்களுக்கு எதிராக ஒரு கூட்டம் இடையூறு செய்தது. அந்தப்பாறையில் ஏசுநாதரின் சீடர் வந்து சென்றதாகப் புதுப் புளுகுகளையெல்லாம் புனைந்து கட்டினர். ஆகவே அந்தப் பாறை அவர்களுக்கே சொந்தம் என்றனர். வந்த எதிர்ப்புக்களையெல்லாம் தைரியமாகச் சமாளித்துப் பொய்யுரை கட்டிய புறமதஸ்தர்களைப் புறமுதுகிட்டு ஓடச் செய்து சுவாமி விவேகானந்தர் சிலையை அங்கே பிரதிஷ்டைசெய்த பெருமை திரு ரானடே அவர்களையே சாரும். அங்குக் கோயில் கட்டுவதற்காகவேண்டி நாட்டிலுள்ள ஒவ்வொரு மனிதனுடைய பங்கும் அதில் இருக்கவேண்டும் என்பதற்காக மிகக் குறைந்தபட்சத் தொகையிலிருந்து வசூலித்து அக்கோயிலை உருவாக்கினர். அதோடு அவருக்கு யார் யாரெல்லாம் எதிரியாகவிருந்து அந்நினைவாலயத்தை எழுப்பவிடாது இடையூறு செய்தார்களோ அவர்களெல்லாரும் காலப் போக்கில் அவருடைய அரும் பெரும்செயலைப் பாராட்டி ஆப்த நண்பர்களாகிவிட்டார்கள். எப்படிப்பட்ட கல் மனம் படைத்தவர்களையும்கனியச்செய்யும் பாங்கு திரு ரானடே அவர்களிடத்தில் இருந்த தனிச் சிறப்பாகும். எத்தகைய உறுதி உடையவர்களையும் நிலைகுலையச் செய்யும்சோதனைகள் அவருக்கு வந்தபொழுது அவைகளைப் புன்முறுவலோடு ஏற்று அவற்றைச் சாதனைக்குப் பயன்படுத்திக் கொண்டார். அவருடைய முறையான வாழ்வுக்கு அடிப்படையாயிருந்தது நாட்குறிப்பு எழுதும் பழக்கமாகும். எங்கிருந்தபொழுதும் எவ்வளவு வேலையிருந்தபொழுதும் அன்றைக்கு நடந்தவைகளை நாட்குறிப்பில் எழுதும் பழக்கத்தை முறையாக வைத்திருந்தார்.

They alone live who live for the welfare of others. The rest are more dead than alive. யார் ஒருவன் பிறர் நலனுக்காக வேண்டி உழைக்கிருனே அவனே வாழ்வாங்கு வாழ்கின்றவன். மற்றவர்கள் உயிரோடு இருந்தும் செத்ததற்கு நிகர் என்ருர் விவேகானந்த சுவாமிகள். அவருடைய கூற்றைத் தம் வாழ்க்கையில் கடைப்பிடித்து மக்களுக்குப் பயன்பட வாழ்ந்து பரமனின் திருவடி எய்தி விட்டார். கடலுக்குள் கலை அழகோடுகூடிய கோயிலமைத்து அதனைக் காண்கின்ற ஜீவர்களிடம் உறங்குகின்ற பரபோதத்தைத் தட்டி எழுப்பிப் பிரபஞ்ச அதீதத்திற்குக் கொண்டு செல்லும் வண்ணமாய் அமைந்துள்ள விவேகானந்தர் முழு உருவச் சிலையும், தியான மண்டபமும் நாம் எங்கோ ஒரு புதிய உலகிற்கு வந்திருக்கி

ரேமா என்னும் உணர்வை ஊட்டுகிற சிற்ப வேலைகளும் நம்மை மெய்ம்மறக்கச் செய்கின்றன. 'எழுமின், விழிமின், கருதிய கருமம் கைகூடும் வரை உழைமின்' என்றார் உலகம் உய்ய வழிகாட்டிய உத்தமர் விவேகானந்தர். அவர் சொன்ன மேற்கண்ட கோட்பாட்டைத் தம் வாழ்நாளில் தாரக மந்திரமாக ஏற்றுப் பிரும்மாண்டமான விவேகானந்தர் கோயிலையும், தொண்டு செய்வதற்கென்றே திட்டமிட்டு படித்த தூய இளைஞர்களையும், யுவதிகளையும் நவீன முறையில் உருவாக்கினார்.

நவீனக் கல்விகற்ற அன்னவர்கள் பழைய கலாசாரத்தை அலசி ஆராய்ந்து புதிய வடிவில் உலகுக்குத் தொண்டு செய்து வருகிறார்கள். அதுவே கட்டுத்திட்டமான ஸ்தாபனமாக உருவாகி விவேகானந்த கேந்திரம் என்ற பெயரில் நாடுமுழுதும் ஆச்சரியப்படத்தக்க முறையில் கல்வி, மருத்துவ சேவை, சமய போதனை, ஆசனப் பயிற்சி கற்றுத்தரல் முதலிய சமுதாயத் தொண்டுகளை உயர்ந்த சேவையாகச் செய்து வருகின்றது. காவிகட்டாத தூயஉள்ளமும், உழைப்பும் உடைய இளைஞர்களும், யுவதிகளும் சேர்ந்த அதி உன்னதமான இயக்கமாக இயங்கி வருகிறது விவேகானந்த கேந்திரம். நல்லவாகள் இருப்பதாலேயே நல்ல திட்டங்கள் உருவாகினறன. நல்ல திட்டங்களை உருவாக்குவதால்தான் ஒரு நாடு சுபிட்சமடைகிறது. ஆக நாடு சுபிட்சமடைய வேண்டுமானால் நலலவர்கள் தொகை பெருகவேண்டும். நல்ல சூழ்நிலையின் மூலம்தான் நல்லவர்களை உருவாக்க முடியும். தன்னலமற்ற தொண்டு செய்யப் படித்த இளைஞர்களை, மகளிரை நன்கு பயிலுவித்து நாட்டு மக்களுக்குப் பணிவிடை செய்ய ஒரு தொண்டர்படையையே உருவாக்கி நாட்டுக்குக் கொடுத்துள்ளார்கள் திரு ரானடே அவர்கள். பாமர மக்களுக்குக் கல்வி, வைத்தியம் கொடுத்து மதம் மாற்றம் பண்ணிப் பாரத நாட்டையே கிறிஸ்தவ நாடாக்கத் துடித்துக்கொண்டிருக்கிறது கிறிஸ்துவ மதம். அத்தகைய சாபக்கேட்டிற்கு ஆளாகாது நம் நாட்டுப் பாமர மக்களுக்குக் கல்வி, வைத்திய உதவி இன்னும் பல வித பணிவிடைகள் செய்து அவர்களைத் தங்களின் சொந்தக்காலில் நிற்கச் செய்து அவர்களை ஆதர்ஷ புருஷர்களாக உருவாக்கிக் கொண்டிருக்கிறது இந்த விவேகானந்த கேந்திரத்தின் தொண்டர்படை. இன்று நம் நாட்டின் வடகிழக்குப் பகுதியில் அருணாசலப்பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள விடிவெள்ளி எதிர்காலத்தில் இந்தியா முழுமையாகப் பரவி ஹிந்து ராஷ்டிரத்தை உருவாக்கி உலகமே பார்த்து வியக்கும்படி செய்யும் காலம் வரத்தான் போகிறது. துறவையும் தொண்டையும் விவேகானந்தர் வற்புறுத்தினார். அத்தகைய திருக்கூட்டத்தையும் உண்டுபண்ணினார். அவருடைய வாரிசாக இருந்து அவர் விட்டுச்சென்ற பணியினை மிகச் சிறப்பாகச் செய்து மக்கள் உள்ளத்தில் அழியா இடம் பெற்றுவிட்டார் திரு ரானடே அவர்கள். அவர் ஒரு காரியத்தை நிறைவேற்றியவுடன் திருப்தியடைந்தவரல்லர். புதுப் புதுத் திட்டங்களை நாட்டின் நன்மைக்காக உருவாக்கிவிடத் துடித்துக்கொண்டிருந்தவர். அவர் இன்று நம்மிடையே இல்லை. அவருடைய பிரிவு நாட்டிற்குப் பெரும் நஷ்டம்ஆகும். திரு. ரானடே அவர்கள் உயிரோடிருந்தபொழுது நாட்டுக்காகச் செயலாற்றினார். இப்பொழுது அவர் உடலைவிட்டுப் பிரிந்துவிட்டார். இனி அவர் தொடங்கிய செயலைக் கேந்திரத் தொண்டர்கள் நிறைவேற்றுவார்களானால் அது அவாகள் திரு. ரானடேவுக்குச் செலுத்தும் அஞ்சலியாகும். ஒற்றுமையுடனும், ஊக்கத்துடனும் கேந்திரத் தொண்டர்கள் திரு ரானடே அவர்கள் விட்டுச் சென்ற தொண்டைத் திறம்படச் செய்வார்களாக. முக்கடலும் குமரித்தாயின் திருவடியில் மோதிக்கொண்டிருக்கும் வரை பாறையில் கம்பீரமாகத் தோற்றமளிக்கும் கோயிலில் உள்ள ஒவ்வொரு சிறு கல்லும் ஏகநாத்ஜீயின் தன்னலமற்ற தியாக வாழ்வைச் சொல்லிக்கொண்டே இருக்கும். கர்மயோகி திரு ஏகநாத் ரானடே அவர்களுக்கு நாம் செலுத்தக்கூடிய சிறந்த அஞ்சலி அவர்கொண்ட உன்னதமான லட்சியத்திற்காக உழைப்பதுதான்.

கயிலைமலை யாத்திரை

(சுவாமி குஹானந்தர்)

[360ஆம் பக்கத் தொடர்ச்சி]

பைதரோகாட்டிலிருந்து 150 கி. மீ. பிரயாணம்செய்து டார்ச்சூலா என்னும் ஊரை மாலை 5-30 மணிக்கு அடைந்தோம். போகும் வழியில் நான்கு மணிக்கு இலேசாக வெய்யில் குறைந்து வானத்தில் மேகம் தெரிந்தது. ஐந்து நிமிஷத்திற்குள் அது கருமேகமாக மாறிற்று. உடனே இடி, மின்னலுடன் சலசல வென்று முத்துக்களைக் கொட்டுவதுபோன்று மழைபெய்தது. மலைகள்மீது பட்டுக் கல்மாரி போல் சாலைமீது ஓடி வந்து விழுவது பார்ப்பதற்கு அரிய காட்சியாக இருந்தது. உடனே தண்ணீராக மாறி ஓடி நதியில் விழுகிறது. பதினைந்து நிமிஷங்கள் பஸ் ஓடவில்லை. பஸ்ஸை நிறுத்தி எல்லாரும் நன்ருக அக்காட்சியை ரசித்தோம். மழை நின்றதும் மலையிலிருந்து அருவிகள் போன்று நீர் கீழே கொட்டியது. பஸ் மிக மெதுவாகச் சென்றது. இமயத்தின் அடிவாரத்தில் மழை வந்தால் நெல்லிக்காய் பருமன் அளவு கல்மாரிதான் முதலில் விழும். அதைக்கண்டு களித்தோம். டார்ச்சூலா என்பது தாலுகா தலைநகரம். காளிகங்கையின் கரையில் பெரிய மைதானத்தில் அழகாக அமைந்துள்ளது. இந்திய ராணுவத்தினர் அவ்வூரைத் தலைமை அலுவலகமாக வைத்துக் கொண்டு அதற்கு மேலே இந்திய எல்லைவரை உள்ள இடங்களுக்குக் குதிரைகளில் ஏற்றி ஆங்காங்கு வேண்டிய சாமான்களை அனுப்பி வைக்கின்கின்றனர். பைதரோகாட்டிலிருந்து பஸ் போக்குவரத்து இந்த ஊருக்கு உண்டு. இதற்கு மேலே உள்ள ஊர்களிலிருந்து தபால்கள் ஆள் மூலம் இங்கு வந்துதான் பஸ்ஸில் அனுப்பப்படுகின்றன. தந்திகளையும் இங்கிருந்து ஆள் மூலம் வெளியூர்களுக்கு அனுப்புகின்றனர். ஆதலால் பெரிய போஸ்டாபீஸ் இங்கு இருக்கின்றது. எதிர்க் கரையில் நேபாளத்தைச் சேர்ந்த பெரிய கிராமம் ஒன்று இருக்கிறது. காளிகங்கைமீது தொங்கும் பாலம் ஒன்று அமைத்துள்ளார்கள். அதன் வழியாக அங்குள்ள மக்கள் இங்கு வந்து போகவும் இங்குள்ளவர்கள் அங்குப் போய் வரவும் வசதியுள்ளது. காளிகங்கை தான் நேபாள ராஜ்யத்திற்கும் இந்தியாவிற்கும் எல்லையாக இருக்கின்றது. சில இடங்களில் காளிகங்கையின் குறுக்கே மக்கள் நடந்து போகக்கூடிய வகையில் பாலம் அமைத்து இருபக்கங்களிலும் வசிப்பவர்கள் சாமான்கள் வாங்கவும் விற்கவும் செய்து வருகின்றனர். நேபாள நாணயங்களை இந்தியக் கடைக்காரர்கள் வாங்கிக் கொள்கின்றனர். இந்திய நாணயத்தையும் நேபாளக் கடைக்காரர்கள் வாங்கிக் கொள்கின்றனர். விவசாயம் நல்ல முறையில் செய்கிருர்கள். பஸ் போக்குவரத்து இருப்பதால் கடைகளில் நமக்கு வேண்டியவைகள் கிடைக்கின்றன. இந்த ஊரை விட்டால் இந்திய எல்லை வரையில் வேறு எங்கும் பெரியகடைகள் இல்லை. இந்த ஊர் மக்களும் ஓரளவு தூய்மையாக இருக்கின்றனர். டார்ச்சூலாவிலேயே தங்குவதற்குக் கூடாரம் தான் போட்டுள்ளார்கள். சப்பாத்தி, உருளைக்கிழங்கு, சாதம், காய்கறி, பால், தயிர் போன்ற உணவுவகைகளைக் கண்ணுல் கூடப்பார்க்க முடிவதில்லை. பருப்பு மட்டும் கிடைக்கிறது. காலைச்சிற்றுண்டி கால் வயிறு தான் சாப்பிட முடிந்தது. பகல் உணவும் இரவு உணவும் அரைவயிறு தான் சாப்பிட முடிந்தது. மேலே போகப் போகப் பசியும் குறைகிறது. வட இந்திய உணவு முறையில் காரம், புளி சேர்க்கமாட்டார்கள். கடுகு எண்ணெயில் சமையல் செய்கிருர்கள். காரம் வேண்டுமென்ருல் சில இடங்களில் பச்சை மிளகாய் ஒன்று தருகிருர்கள். சாம்பார், ரசம், மோர் சாப்பிட்டுப் பழகியவர்களுக்கு இது பெரும்பாடாக இருக்கின்றது. டெல்லியிலேயே இவ்வுணவுப் பிரச்னை ஆரம்பித்து விட்டது. இரண்டாம் நாள் இரவு டார்ச்சூலாவில் இரவு உணவு சாப்பிட்டுவிட்டுத் தங்கி, காலைச் சிற்றுண்டிக்குப் பிறகு எட்டு மணிக்குப் பஸ்ஸில் புறப்பட்

டோம். காலைச் சிற்றுண்டி பாம்பே ரவையில் சிறிது சர்க்கரை சேர்த்துத் தயாரித்து ஹல்வா என்று கொடுத்தார்கள். காளிகங்கைக் கரையில் தங்கியிருந்தோம். ஆனாலும் அந்த ஊரிலும் தண்ணீர்க் கஷ்டம். நதித் தண்ணீர் கலங்கி வேகமாக ஆழத்தில் ஓடுவதால், அதில் தண்ணீர் எடுக்க முடிவதில்லை. காலையில் குளிக்க முடியவில்லை. பல் துலக்கி, முகம் கழுவிக் கொண்டு சிற்றுண்டி என்று கொடுத்ததைச் சிறிதளவு சாப்பிட்டு விட்டுப் புறப்படத் தயாரானோம். அவசியமில்லாத சாமான்களை இங்குக் கொடுத்து வைக்கலாம். திரும்பி வரும்பொழுது எடுத்துக்கொள்ளலாம். நபர் ஒன்றுக்கு 25 கிலோவிற்கு மேல் இருந்தால் அதற்குக் கிலோ ஒன்றுக்கு ரூ. 15 விதம் தரவேண்டும் என்று சொன்னார்கள். இதுவரை சாமான்கள் பஸ்ஸில் வந்தன. இதற்கு மேல் குதிரை அல்லது ஆட்கள் சுமந்து போக வேண்டும். அவரவர் உடைமைகளில் தங்கள் பெயரை எழுதி அங்கு ஒப்படைத்து விட்டு வந்தனர். இங்கிருந்து சாமான்களை எடுத்துச் செல்லக் குதிரைகளையோ, ஆட்களையோ அமர்த்திக் கொள்ள வேண்டும். வேண்டிய குதிரைகளை முன்னரே தவாகாட் என்னும் இடத்திற்கு அனுப்பிவிட்டார்கள். எங்களுடன் மேலும் 10 பேர் வந்தனர். காலை 8 மணிக்குப் பஸ் புறப்பட்டது. காளிகங்கை ஓரத்திலேயே 19 கிலோ மீட்டர் பஸ்சென்றது. வழியில் இரண்டு சிறிய கிராமங்கள் இருந்தன. பஸ் பாதை தவாகாட் என்னும் இடத்தில் முடிகிறது. அங்கு ஒன்பதுமணிக்கு வந்து சேர்ந்தோம். சாமான்களை எல்லாம் இறக்கி எடைபோட்டுக் குதிரைக்கு50 கிலோவும் ஓர் ஆள் தூக்குவதற்கு 25கிலோவும் கொடுத்தார்கள். இரண்டொரு யாத்ரிகர்கள் தவிர எல்லாருக்கும் சாமான்கள் அதிகமாகவே இருந்தன. 5 கிலோ முதல் 30 கிலோவரை அதிகப்படியாக இருந்தவர்களிடம் கிலோ ஒன்றுக்கு ரூபாய் 15 விதம் அங்கேயே வசூல் செய்துகொண்டார்கள். நாலைந்து டீக்கடைகள் மட்டுமே அங்கு உள்ளன. அங்குத் தவளகங்கை என்னும் நதி ஒன்று காளிகங்கையில் கலக்கின்றது. அதைக் கடக்க ஒரு மரப்பாலம் உள்ளது. மூன்றுவது நாள்தான் நடை ஆரம்பமாகிறது. எல்லாரும் உற்சாகத்தோடு ஒருவரை ஒருவர் முந்திக்கொண்டு நடக்க ஆரம்பித்தனர். முதல் நாளே 3500 அடி உயரத்தில் ஆரம்பித்து 9 கிலோ மீட்டர் தூரம் நடந்து 7200 அடி உயரத்தில் உள்ள பங்கு என்னும் ஊருக்குப் போய்ச்சேர்ந்தாக வேண்டும். மாடிப்படி ஏறுவது போன்று பாதை வளைந்து, வளைந்து மேலே செல்கிறது. பாதை நாலைந்து அடி அகலம்தான் உள்ளது. கல்லையும் மண்ணையும்கொண்டு பாதை அமைத்திருந்தனர். அடிக்கடி பெய்யும் மழையினால் மண் அரித்துக்கொண்டு போய்க் கற்கள்மட்டும் நிற்கின்றன. அவைகள் ஒரே மட்டமாக இல்லாது ஒன்று உயரமாகவும் ஒன்று தாழ்வாகவும், மேல் பகுதியில் சில கற்கள் கூரியவையாகவும் இருக்கின்றன. நல்ல உறுதியான பூட்ஸ் இருந்தால்தான் இந்தப் பாதையில் நடந்துபோக முடியும். சில இடங்களில் பாதையின் மேல் பகுதியிலிருந்து நீர் ஊற்றுக்கள் வந்து பாதையை நனைக்கின்றன. குதிரைகள், ஆடுகள் நடந்து சாணம்போட்டு இருப்பதால் பாதை வழுக்கலாகவும் சேறுகவும் இருக்கின்றது. இரண்டு கிலோ மீட்டர் தூரம் ஏறுவதற்குள் உடல் வேர்க்கின்றது; கால் வலிக்கின்றது. காளிநதி 2000 அடிக்குக் கீழ் ஓடுகின்றது. மேலே பார்த்தால் மலை உச்சி கண்ணுக்கெட்டாத உயரத்தில் இருக்கின்றது. எப்போது உச்சியைப்போய் அடையமுடியும் என்ற ஏக்கம் ஒரு பக்கம். பகல் 11 மணி ஆனதால் வெய்யிலினால் தாகம், பசி எல்லாம் மறுபக்கம். பாதை ஓரத்தில் உள்ள நிழல் பார்த்து உட்கார்ந்து கையில் உள்ள பிஸ்கட், திராக்ஷை, முந்திரி போன்றவைகளைச் சாப்பிட்டுத் தண்ணீர் குடித்தபின்தான் நடக்க முடிந்தது. மேலே ஏறுவதற்குப் பெருமூச்சுவிட வேண்டியுள்ளது. மூக்கினால் சுவாசிப்பது போல் வாயையும் திறந்து மூச்சுவிட வேண்டியுள்ளது. அரைமணி நேரத்திற்கு ஒரு தட்வை உட்கார்ந்து சிறிது ஓய்வு எடுக்கவேண்டிவருகிறது. ஒரு கிலோ மீட்டர் தூரம் ஏறுவதற்

குச் சுமார் ஒருமணி நேரம் பிடிக்கிறது. இளைஞர்களாக உள்ளவர்களும், பலமுள்ளவர்களும் அவரவர் சக்திக்கேற்ப முன்னே சென்றனர். வயதானவர்கள், பெண்கள், அதிகம் நடந்து பழக்கமில்லாதவர்கள் சிரமப்பட்டுக்கொண்டு பின் தங்கி நடந்தனர். இமயத்தின் இயற்கையழகும், மந்தமாருதம் போன்று வீசும் இனிமையான குளிர்காற்றும் இடையிடையே உடலின் களைப்பை ஆற்றிக் கண்ணுக்கினிய விருந்தளித்து உற்சாக மூட்டின. வாழ்க்கையில் இன்பமும், துன்பமும் மாறி மாறி வந்துகொண்டு இருக்கும் என்ற தத்துவம் இங்கு நினைவூட்டப்படுகிறது. மேலும் இவைகளை அதிகம் பொருட்படுத்தாமல் மன உறுதியோடு இறைவனை நம்பி முயற்சி செய்கிறவர்கள் விரைவில் குறிக்கோளை அடைய முடியும் என்பதற்கு இந்த யாத்திரை நல்ல உதாரணமாய் இருக்கின்றது. வேகமாக நடந்தவர்கள் ஆறு மணி நேரத்தில் ஒன்பது கி. மீ. தூரத்தைக் கடந்து தங்குமிடத்தைச் சேர்ந்து உண வருந்தி ஓய்வெடுத்தனர். மற்றவர்கள் அவரவர் சக்திக்கேற்ப முன்னும் பின்னுமாக நடந்து வந்துசேர்ந்தனர். பங்கு என்னும் கிராமம் 7500 அடி உயரமுள்ள மலையின் மேலுள்ள சிறிய ஊர். இருபத்தைந்து வீடுகள் அங்கு இருக்கும். சிறியகடை, டீக்கடை, ஓர் ஆரம்பப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி ஆகியவை இருக்கின்றன. சுற்றுப்புறத்தில் ஆறு அல்லது ஏழு கி. மீ. தூரத்திலுள்ள சிற்றூர்களில் உள்ள பிள்ளைகள் அங்குள்ள உயர் நிலைப் பள்ளிக்குப் படிக்க வருகின்றனர். சிறு பிள்ளைகள் மலைப்பாதைகளில் வேகமாக நடந்து பழகி உள்ளனர். அது மலை உச்சியில் உள்ள சிறிய அழகிய கிராமம். அங்கிருந்து பார்த்தால் சுற்றிலும் அழகான மலைச் சிகரங்களில் மரங்கள் நிறைந்து பச்சை மலையாகக் காட்சியளிக்கிறது. இடையில் உள்ள பள்ளங்களில் நீரோடைகளும் அதன் கரைகளில் கோதுமை, உருளைக் கிழங்கு, முட்டைக்கோஸ் போன்ற பயிர் வகைகளும் செழிப்பாக வளர்ந்து பார்ப்பதற்கு இனிய காட்சியாக இருக்கின்றன. அவ்விடத்துக்கு உயரமான இடத்திலிருந்து குழாய் மூலமாகத் தண்ணீர் கொண்டு வருகிறார்கள். முதல்நாளே பெரிய ஏற்றம் ஆனதால் எல்லாருக்கும் கால் வலி. வெந்நீர் வாங்கிக் காலை நீவி நீவி ஊற்றும் வேலையில் எல்லாரும் ஈடுபட்டார்கள். அன்று பகல் உணவைப் பிற்பகல் மூன்று மணிக்குச் சாப்பிட்டுவிட்டு எல்லாரும் ஓய்வெடுத்தோம். இரவில் சிலபேர் சாப்பிடாமலும் ஓய்வெடுத்தனர். 26ஆம் தேதி காலையில் ஆறு மணிக்கு மேல்தான் பலர் எழுந்தனர். காலை ஏழரை மணிக்குள் பல் துலக்கி முகம் கழுவிக்கொள்ள வெந்நீர் கொடுத்தனர். அதன் பிறகு சிற்றுண்டி என்று அவர்கள் கொடுத்ததைக் கொஞ்சம் சாப்பிட்டுவிட்டு நடக்க எல்லாரும் தயாரானோம். அன்று பதினொரு கி. மீ. தூரம் நடந்து சிர்க்கா என்னும் ஊருக்குப் போய்ச் சேரவேண்டும். காலை 8 மணிக்கு எல்லாரும் நடக்க ஆரம்பித்தோம். முதலில் இரண்டு கி. மீ. தூரம் இறக்கம். அது ஓர் ஓடையோடு போய்ச்சேருகிறது. அதன்பிறகு அங்கிருந்து ஒன்பது கி. மீ. தூரம் ஒரே ஏற்றம். எட்டு கி. மீ. தூரம் சென்றதும் சிறிய ஊர் ஒன்று உள்ளது. அங்கிருந்து இரண்டு கி. மீ. தூரத்தில் நாராயண ஆச்ரமம் இருக்கின்றது. அதைப் பார்க்க நாங்கள் நான்குபேர் அங்குச் சென்றோம். சுமார் ஐம்பது ஏக்கர் இடத்தில் நல்ல அழகான ஒரு சிறு குன்றில் இந்த ஆச்ரமம் அமைந்துள்ளது. 1957ஆம் ஆண்டில் கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த சாது ஒருவர் இதை ஏற்படுத்தி அழகான கிருஷ்ணன் கோவில், பிரார்த்தனை மண்டபம், ஐந்நாறு பேர்கள் தங்குவதற்கு வேண்டிய அளவு வசதியான கட்டடங்கள் இவற்றைக் கட்டி அழகான பூந்தோட்டம் முதலியவைகளை அமைத்துள்ளார். ஆச்ரமம் கட்டி முடித்துப் பத்து ஆண்டுகளுக்குள் அவர் காலமாகிவிட்டதால், இப்போது பம்பாயில் உள்ள ஒரு கமிட்டி அதை நிர்வகித்து வருகிறது. நாங்கள் அங்குச் சென்ற போது சுமார் அறுபது வயதுள்ள அம்மையார் அங்குத் தங்கி அதைக் கவனித்து வந்தார். அவர் எங்களை அன்போடு வரவேற்று எல்லா இடங்களை

யும் சுற்றிக்காட்டித் தேநீர் கொடுத்தார். சாதுக்கள் மூன்று நாள் அங்குத் தங்கலாம் என்றும் மற்றவர்கள் அங்குத் தங்கவேண்டு மானல் பம்பாயிலுள்ள கமிட்டியிடம் அனுமதி பெற்றுவரவேண்டும் என்றும் சொன்னர். அந்த அம்மையார் கர்ப்பியாங் என்னும் ஊரைச் சேர்ந்தவர். கல்லூரி ஆசிரியையாகப் பணிசெய்து ஓய்வு பெற்ற பிறகு அங்கிருந்து ஆச்ரமத்தைச் மேற் பார்த்து வருவதாகச் சொன்னர். சமையல், பூஜைக்கு ஒருவரும் இரண்டு மூன்று வேலை ஆட்களும் அங்கு உள்ளனர். நல்ல சூழ்நிலையில் அமைதியான இடமாக இருந் தாலும் அதை உபயோகப்படுத்தத் தக்கவர் இல்லை. அங்கிருந்து சிர்க்காவிற்கு வேறு வழி இருக்கிறது. அந்த வழியாகப் பிற்பகல் 2 மணிக்குத் தங்குமிடத்திற்குப் போய்ச் சேர்ந்தோம். முதல் நாள் கடுமையான சிரமத்திற்குள்ளானதால் இன்று அவ்வளவு கஷ்டம் தோன்றவில்லை. பகல் உணவருந்தி விட்டு எல்லாரும் ஓய்வெடுத்தோம். சிர்க் காவில் தங்குமிடம் ஒரு சிறிய குன்றின்மேல் அமைந்திருந்ததால் சுற்றிலும் கண்ணுக் கினிய காட்சிகள் நிறைந்திருந்தன. ஆங் காங்குச் சிறு கிராமங்கள், பயிர் நிறைந்த பூமிகள், மலைச்சிகரங்கள், சிறு நீரோடைகள் எங்குப் பார்த்தாலும் நல்ல செழுமையான பச்சைப்பசேர் என்ற காட்சிகளைத் தந்து கொண்டிருக்கின்றன. இந்த ஊரிலும் தண் ணீர் வசதி நிறைய உள்ளது. ஊர் சிறி தாக இருக்கின்றது. மக்கள் குளிக்கவும் துவைக்கவும் உடுக்கவும் பழகி உள்ளார்கள். ஆரம்பப்பள்ளி ஒன்று உள்ளது. சிறிய வைத்தியசாலையும் அங்கு உள்ளது. இந்திய எல்லை வரையில் ஒவ்வொரு நாளும் தங்கும் இடம் போய்ச் சேர்ந்ததும், அந்தந்த ஊரில் உள்ள அரசாங்க டாக்டர் வந்து யாத்ரிகர்கள் எல்லாருக்கும் தினந்தோறும் இருதயத் துடிப்பையும், ரத்த அழுத்தத்தை யும் பரிசோதிக்கிருர். சளி, தலைவலி, காய்ச்சல் போன்ற நோய்களுக்கும் மருந்து இலவசமாகக் கொடுக்கின்ருர். டார்ச் சூலாவிலிருந்து இந்திய-திபேத் எல்லைப் பாதுகாப்புக் காவற்படையைச்சேர்ந்த ஆறு பேர் யாத்திரைக் குழுவோடு முன்னர் இரு வரும் மத்தியில் இருவரும் கடைசியில் இருவருமாக இந்திய எல்லை வரை உடன் வந்து வழியனுப்புகின்றனர். அவர் கள் மிக அன்போடு யாத்ரிகர்களுடன் பழகி நடக்க முடியாது சிரமப்படுபவர்களை உற் சாகப்படுத்தி உடன் இருந்து அழைத்து வருகிருர்கள். 26 ஆம் தேதி இரவு சிர்க்கா என்னும் ஊரில் உள்ள பயணிகள் தங்கும் கட்டடத்தில் (T. B.) தங்கி இரவு உணவும் காலை உணவும் அருந்தினேம். வழக்கம் போல் டாக்டர் எல்லாரையும் பரிசோதனை செய்து தேவைப்பட்டவர்களுக்கு வேண்டிய மருந்துகளையும் கொடுத்தார். எங்கள் குழு வில் இருந்த டாக்டர் சுரூர் என்பவர் கர் நாடக மாகாணத்தைச் சேர்ந்தவர். 55வயது உள்ளவர். நிறைய மருந்துகள் கொண்டு வந்திருந்தார். அவரும் யாருக்காவது உடல் நலம் குன்றியிருந்தால் அவர்களிடம் அன் போடுபேசி வேண்டியமருந்துகளைக் கொடுத் தார். உத்திரப்பிரதேசத்தைச் சேர்ந்த அர் ஜுன பிரசாத் வர்மா என்பவர் ஹோமி யோபதி டாக்டர். 35 வயதுள்ள இளைஞர். அவரும் உற்சாகத்தோடு எல்லாரி டமும் நன்கு பழகி வேண்டியவர்களுக்கு அவருடைய வைத்திய உதவியைச் செய்து வந்தார். ஆந்திராவில் இருந்து வந்தி ருந்த மூவரில் ஒருவர் இளைஞர். 32 வயதுள் ளவர். வேகமாக நடப்பவர். இன்னும் இரு வர் தம்பதிகளாக வந்திருந்தனர். முதல் நாளே மிகச் சிரமப்பட்டு நடந்து கடைசி யில் வந்துசேர்ந்தனர். இரண்டாம் நாள் நடையிலும் அதிகச் சிரமப்பட்டு எல் லாருக்கும் கடைசியில்தான் வந்து சேர்ந் தார்கள். 27ஆம் தேதி காலையில் வழக் கம்போல் 6 மணிக்கு எழுந்து பல்துலக்கி முகம் கழுவிக்கொண்டு காலைச் சிற்றுண்டி அருந்தினேம். அன்று 18 கி. மீ. தூரம் மிகக் கடினமான பாதையில் நடந்து ஜிப்பி என்னும் ஊரைப்போய்ச் சேர்ந்தாக வேண் டும். சுமார் 10 மணிநேரம் நடந்து மாலை 5 மணிக்குத்தான் போய்ச் சேரமுடியும் என்று சொல்லி எல்லாருக்கும் உணவு ஒவ்வொரு பொட்டலம் கொடுத்தார்கள். அதனுள்

மூன்று சப்பாத்தியும் மூன்று உருளைக் கிழங்குத் துண்டுகளும் இருந்தன. அதை வாங்கிக்கொண்டு பிஸ்கட், குளுக்கோஸ், உலர்ந்த பழவகைகள் இவற்றையெல்லாம் கொஞ்சம் கையில் எடுத்துக்கொண்டு காலை ஏழரை மணிக்குப் புறப்பட்டோம். 2 கி. மீ. தூரம் சிறுஇறக்கமாகவும், ஏற்றமாகவும் பிறகு சமமான பாதையாகவும் இருந்தது. அதன் பிறகு 4 கிலோ மீட்டர் தூரம் ஏணிப் படியில் ஏறுவது போன்று ஒரே ஏற்றம். நேராக ஏறிக்கொண்டேபோனால் மலையின் உச்சியே தெரிவதில்லை. நன்கு உயர்ந்த மரங்கள் அடர்ந்துள்ள வனத்தின் வழியே ஏறிச்சென்றதால் வெயிலின் கொடுமை இல்லை. பாதிதூரம் ஏறுவதற்குள் நாலைந்து தட்வை உட்கார்ந்து தண்ணீர் குடித்து எதிரே கீழ்நோக்கி வருபவர்களை இன்னும் எவ்வளவு தூரம் இருக்கும்என்றுகேட்டோம். கொஞ்சதூரம் தான், அதிகச் சிரமம் இல்லை. மெதுவாக ஏறிப்போங்கள் என்றுசொன்னார் கள். இப்படி மேலே பார்த்துப்பார்த்து மிகச் சிரமப்பட்டு நான்கு கிலோ மீட்டர் தூரம் ஏறிச் சென்று ரங்காங்டாப் என்னுமிடம் போய்ச்சேர்ந்தோம். அங்குப்பத்து நிமிஷம் உட்கார்ந்து ஓய்வெடுத்து ஏதாவது சாப் பிட்டுத் தண்ணீர் குடித்த பிறகுதான் மேற் கொண்டு நடக்கலாம் எனத் தோன்று கிறது. அந்த மலையின் உச்சியில் ஒரு சிறிய அம்பிகையின் கோவில் இருக்கிறது. அங்குச் சென்று வணங்கிவிட்டுக் கீழே இறங்க ஆரம் பித்தால் மூன்று கி. மீ. தூரம் ஒரே இறக் கம். நேராக இறங்கும் பாதையில் சில இடங்களில் ஊற்றுத் தண்ணீரால் பாதை சேறாகவும் வழுக்கலாகவும் இருக்கிறது. மிகக் கவனமாகக் கால்வைத்து இறங்க வேண்டும். இப்படி இறங்கி இறங்கி ஓர் ஓடைக்கு வந்து சேர்ந்தோம். அதைக் கடக் கச் சிறு மரப்பாலம் ஒன்றுள்ளது. அதைத் தாண்டிச் செல்லும்போது பகல் பதினொரு மணி. எனவே நல்ல வெயில் இருந்தது. டெல்லியை விட்டுப் புறப்பட்ட பிறகு நான்கு நாட்களாக எங்கும் குளிக்க வசதி யில்லாததால் தமிழ்நாட்டைச் சேர்ந்த மூவர்மட்டும் அந்த ஓடையில் குளித் தோம். அங்கிருந்து இரண்டு கி. மீ. தூரம் சமமான பாதையில் நடந்து சென்றால் மால்பா என்னும் சிறியகிராமம் இருக்கிறது. அங்கு இரண்டு டீக்கடைகள் இருக்கின்றன. அதற்குப்பக்கத்தில் ஒரு சிறிய ஓடைவந்து காளிநதியில் கலக்கிறது. அந்த டீக்கடை களில் எல்லாரும் பிஸ்கட், டீ இவைகளை வாங்கிச் சாப்பிட்டுவிட்டு அங்குச் சுமார் ஒரு மணிநேரம் எல்லாரும் உட்கார்ந்தும் படுத் தும் ஓய்வெடுக்கவேண்டியிருந்தது. அதன் பிறகு 9 கி. மீ. தூரம் நடக்கவேண்டும் என்று சொன்னார்கள். அதைக்கேட்டு எல்லாரும் பெருமூச்சு விட்டனர். வழக்கமாக மால்பா என்னும் ஊரில் தங்கி அடுத்த நாள்தான் புத்தி என்னும் ஊருக்குப் போவார்கள். நாங்கள் சென்றபோது முதல்நாள் 9 கிலோ மீட்டர் தூரமுள்ள பங்கு என்னும் ஊரில் தங்கியதால் மால்பா கேம்பை விட்டுவிட்டு 18 கிலோமீட்டர் தூரம் போய்ப் புத்தி என் னும் ஊருக்குப் போயாகவேண்டும் என்று திட்டமிட்டுவிட்டார்கள். வேறு வழியின்றி எல்லாரும் பிற்பகல் 1 மணிக்குமேல் நடந் தோம். மால்பாவிலிருந்து புத்தி வரை உள்ள பாதை 9 கிலோமீட்டர் தூரம். அதில் இரண்டு ஏற்றங்களும், இறக்கங்களும் இருக் கின்றன. மிகுந்த சிரமத்தோடு நடந்தோம். மாலை 5 மணிக்கு மழைத்தூறல் வந்துவிட் டது.குளிர்காற்றில் மழையில் நனைந்தவுடன் நடுக்கம் வந்துவிட்டது.நான்குபேர்இளைஞர் களாக இருந்தவர்கள் மட்டும் மழைக்கு முன் முகாம் போய்ச் சேர்ந்திருந்தார்கள். அவர் கள் நடக்க முடியாதவர்களை அழைத்து வர நான்கு குதிரைக்காரர்களைக் குதிரைகளுடன் அனுப்பி வைத்தனர். ஆந்திரா தம்பதிகள் இருவர், கர்நாடகத்தைச் சேர்ந்த டாக்டர் ஒருவர், சென்னையைச் சேர்ந்தவர் ஒருவர் ஆக நான்கு பேரும் ஒரு மலையின் குகையில் மழைக்கு ஒதுங்கினர். குதிரைகள் வந்ததால் அவர்கள் குதிரையில் முகாமிற்கு வந்து சேர்ந்தனர். பெரும்பாலோர் மாலை 6 மணிக் குப் புத்திபோய்ச்சேர்ந்தனர். புத்தி என் பது 20வீடுகள் கொண்ட சிறிய ஊர். தபால் அலுவலகம் அங்கு இருக்கிறது. பயணியர் மாளிகையும் அங்குள்ளது. தண்ணீர் வசதி

நிறைய உள்ளது. தங்கியிருந்த இடத்தில் நல்ல அழகான பூந்தோட்டம் அமைந்திருந் தது. இந்த இடம் 9,100 அடி உயரத்தில் இருக்கிறது. தூரத்தில் பனி மூடிய சிகரங் கள் தென்படுகின்றன. இரவில் நல்லகுளிர் இருந்தது. (Sleeping bag) தூங்கும் பையின் அருமை அங்குதான் தெரிய வந்தது. வழக் கம் போல் காலை 6 மணிக்கு எழுந்து வெந் நீரில் முகம் கழுவி, பல் துலக்கிக்கொண்டு அவர்கள் கொடுத்த காலைச் சிற்றுண்டியைச் சாப்பிட்டோம். முதல் நாள் 18 கி.மீ. தூரம் நடந்ததாலும் பாதை ஏற்றம், வழுக்கல், குறுகலாக இருந்ததாலும், மழையில் நனைந்த தாலும் எல்லாருக்கும் கால் வலியும், களைப் பும் தீரவில்லை. புத்தியில் குதிரைகள் கிடைக்கும் என்று தெரிந்ததால் பாதிப்பேர் அங்கிருந்து குதிரை வைத்துக்கொண்டு போக ஏற்பாடு செய்யப்பட்டது.

புத்தியில் இருந்து குஞ்சு என்னும் முகாம் 14 கி.மீ. தூரம். சாமான்களை முன்னால் அனுப்பி விட்டு அதன் பிறகு நடந்துசெல்ப வர்கள் முதலிலும் குதிரையில் செல்பவர்கள் கடைசியிலுமாகப் புறப்பட்டுச் சென்றோம். நடந்துசென்றவர்கள் பத்து நிமிஷத்திற் கொருதடவை நின்றும், உட்கார்ந்தும்சிரமப் பட்டுக்கொண்டு வந்தனர். 3 கி.மீ. தூரம் சென்றதும் செங்குத்தான ஏற்றம். அங்குக் குதிரையில் போனவர்களையும் இறக்கி விட்டனர். குதிரைச் சவாரி செய்தவர்களும் சுமார் 2 கி.மீ. தூரம் அந்த ஏற்றத்தில் திண்டாடி ஏற வேண்டி வந்தது. அந்த ஏற்றம் ஏறி முடிந்ததும் ஒரு பெரிய மைதா னம். நல்ல அழகான புல்தரை. இது பச்சைக் கம்பளம் விரித்தது போன்று கண்ணையும், மனத்தையும் ஒருங்கே கவர்கின்ற காட்சியா யிருந்தது. இடையிடையே பல வர்ணப் பூங் கொத்துக்கள் விளங்கின. இதைப் பார்த்துக் கொண்டு எல்லாரும் அரைமணி நேரம் புல் தரையில் படுத்து ஓய்வெடுத்தனர். குதிரை களையெல்லாம் கடிவாளத்தைஅவிழ்த்துமேய விட்டனர். அங்கு மைதானத்தில் ஒருசிறிய சக்திகோவில் இருக்கிறது. அங்குச் சென்று வணங்கிவிட்டு அங்கிருந்து புறப்பட்டுப் பிற்பகல் 1 மணிக்குக் கர்ப்பியாங் என்னும் ஊர்போய்ச் சேர்ந்தோம். இந்த ஊரில் தபாலாபீஸ் உள்ளது. இந்திய எல்லையில் இதுதான் கடைசித் தபால் நிலையம். அரசி னர் ஆயுர்வேத வைத்தியசாலை ஒன்று அங்கு உள்ளது. சுமாரான பலசரக்குக் கடை ஒன்றும் மூன்று டீக்கடைகளும் உள்ளன. கைலாயம் செல்லுகின்றவர் எல்லாரும் இங்குச் சிறிது நேரம் தங்கி டீ சாப்பிட்டு விட்டுத்தான் போகின்றனர். முன் காலத் தில் கைலாய யாத்திரை சென்றவர்கள் இந்த ஊரில் தங்கி வழிகாட்டி, குதிரை, சுமை தூக்க ஆள் எல்லாவற்றிற்கும் வேண்டிய ஏற்பாடுகள் செய்து கொண்டு போவது வழக்கம். இப்பொழுது அந்தஊர் நிலச்சரிவினால் மக்கள் குடியிருக்கத் தகுதி யில்லை என்று அரசாங்கம் அறிவித்திருப் பதால்அந்தஊர் மக்கள் வேறு அக்கம்பக்கங் களிலுள்ள ஊர்களில் குடியேறிக்கொண் டிருக்கின்றனர். கர்ப்பியாங்கிலிருந்து காளி கங்கையின் ஓரத்திலேயே பாதை செல் கிறது. அதில் பல இடங்களில் சிறிய, பெரிய அருவிகள் மலை மேலிருந்து கீழே விழுகின்றன. பாதையில் நடந்து செல்லும் போது சில இடங்களில் பன்னீர் தெளிப் பது போன்று, மழைத்தூறல் விழுகிறது. உடல் முழுவதும் நனைந்துவிடுகிறது. சூரிய ஒளியில் வானவில் தோற்றமும் வெள்ளி முத்துக்கள் போன்ற மழைத்துளிகளும் கண் ணுக்கும் மனதிற்கும் இனிய காட்சியளிக் கின்றன. குஞ்சு என்னும் இடம் காளி நதிக் கரையில் ஒரு பெரிய மைதானமாக அமைந் துள்ளது. அங்கு ராணுவத்தினர் தங்குவ தற்குப் பெரிய ஷெட் ஒன்று இருக்கின்றது. வழக்கம் போல் மதிய உணவு அருந்தி அங்கு ஓய்வெடுத்தோம். இந்த இடத்திற்கு மேல் திபெத் எல்லைவரைக்கும் உள்ள இடங் கள் இந்திய ராணுவத்தினர் பாதுகாப்பில் இருக்கின்றன. இந்திய ராணுவத்தின் அனு மதியில்லாது இதற்கு மேல் போகக்கூடாது. ராணுவத் தலைவனும், டாக்டரும் எங்கள் பாஸ்போர்ட்டையும் உடலையும் பரிசோதனை செய்தனர். அவர்கள் யாத்ரிகர்களிடம் அன்போடும் மரியாதையுடனும் பழகு கிறார்கள்.

(தொடரும்)

குறிப்புகள்

(சுவாமி ஸதானந்தர்)

அருள் ஆட்சி அல்லது ராமராஜ்யம்

அரசியல் மக்களை மயக்குகிறது. அதிகாரம், ராஜபோகம், செல்வாக்கு, பெருமித வாழ்வு ஆகிய ஆடம்பரங்கள் சுயவர்கள் மனதை எப்போதும் ஈர்க்கின்றன. மோஹத்தில் கட்டுப்பட்டு ஆட்சி பீடத்தில் அமரும்போது ஊழல்கள் அதிகமாகின்றன. அரசனும் ராஜாங்க அதிகாரிகளும் சேர்ந்து செய்யும் அக்கிரமங்கள் சமூக நலத்தைப் பாழ்படுத்தும். பிரச்னைகள் ஒன்றன்பின் ஒன்றாகச் சங்கிலிபோல உருவாகும். மக்களைத் திருப்திப்படுத்த ஏதேதோ நன்மை போலச் செய்வார்கள். அவைகள் தீமையையே வளர்க்கும். சுயநலம் மிகக்கொடிய பாபம். அதன் விளைவு துன்பம் பெருகும். உலக ஆசையில் கட்டுப்படாதவர் ஆட்சி வரும்போதுதான் உண்மையில் நலமும் இன்பமும் பெருகும். இராமனும் பரதனும் அயோத்தியை ஆண்டபோது அங்குச் செல்வம், நீதி, நலம், கல்வி, ஒழுக்கம் ஆகிய யாவும் ஒருமித்துச் சிறந்து விளங்கின. நல்ல காரியம், நல்ல ராஜ்ய பரிபாலனம் இவைகளுக்கு ராம ராஜ்யம் என்னும் பெயர் இப்போதும் விளங்கி வருகிறது.

''அன்பா, துறந்தவன் நான் அல்லேன், நீயே துறந்தவன். அகிலமெல்லாம் என்னுடையது. இந்த உயிர்வகைகள் எல்லாம் என் சகோதரர்கள், என் அன்புக்குரியவர்கள் என்று நான் அவர்களைப் பாவிக்கிறேன். நீயோ சிறிய வட்டத்திற்குள் கட்டுப்பட்டவனாய் இது என்வீடு, என்மனைவி மக்கள், என் பூமி என்று குறுகிய எல்லைக்குள் அடைபட்டு விட்டாய். ஆகையால் சகோதரா, துறந்தவன் நீயே'' என்று ராம தீர்த்த சுவாமிகள் சொன்னார். விச்வஜித் யக்ஞம் என்று ஒன்று நம் சாஸ்திரங்களில் விளக்கப்படுகிறது. இந்த யக்ஞத்தைச் செய்தவன் விசுவத்தை, உலகத்தை வென்றவன் ஆகிறான். வென்றவன் என்றால் அலெக்சாண்டர், அசோகன், நெப்போலியன், ஹிட்லர் போன்ற பெருவீரர்களாக இருப்பார்கள் என்று எதிர்பார்க்கிறோம். இது நாள் வரை ஒரு கண்டம் முழுவதையுமோ ஒரு தேசம் முழுவதையுமோ அரசாண்ட பெரிய சக்கரவர்த்தி யாரையும் உலகச் சரித்திரத்தில் காணோம். அகில உலகத்தையும் வென்றவன் யாராக இருக்கக்கூடும்? இன்றைக்குள்ள சினிமா நடிகன் இந்த ஸ்தானத்தில் இருக்கிறான் என்று சொல்லலாமா? முப்பது வருஷங்களுக்கு முன்பு சினிமா உலகில் பிரசித்தி பெற்றிருந்தவனை இன்று நினைப்பாரையே காணோம். இன்று பிரசித்தமாய் இருப்பவனைப்பற்றி அவன் காலத்திற்குப் பிறகு நினைப்பாரே இருக்கமாட்டார்கள். இவர்கள் காலத்தால் அடிபட்டுப் போவார்கள். காலத்தினால், இடத்தினால், காரண காரியத்தினால் அடிபடாமல் என்றும் நிலைத்திருப்பவர்கள் இராமன், கிருஷ்ணன், புத்தர், சங்கரர் போன்ற பெரியோர்கள். இன்றும் அவர்கள் கோடானுகோடி மக்கள் உள்ளத்தில் தெய்வமாக இருந்து வருகிறார்கள். இதுவே விசுவஜித் யக்ஞம். சமீபகாலத்தில் காந்திஜி இந்த விசுவஜித் யக்ஞம் செய்தார் என்று சொல்லலாம். யார் ஒருவன் தான், தனது என்பதை அறவே துறக்கிறானோ அவன் வாழ்வு உலகுக்குப் பொது ஆகிறது. அவனுடைய வாழ்வு தர்மத்தையும் சீலத்தையும் சத்தியத்தையும் உள்ளத்தில் ஆழமாக, அன்புக் கண்ணீர்வடியச்செய்து பதிய வைக்கிறது. மக்கள் மனது அவன் பால் கவர்ந்து இழுக்கப்படுகிறது. கடலில் விழுந்த மழைத்துளி கடல் ஆய்விடுவது போன்று நான், எனது தேய்ந்து போன உத்தமர்கள் கடவுள்மயம் ஆய்விடுகிறார்கள்.

அசோக சக்கரவர்த்தி முதலில் கொடுமையான இரக்கமற்ற போர்வீரனாக இருந்தான். அவன் ராஜ்யம் பெரிதாகிக் கொண்டே வந்தது. கலிங்கப்போர் நிகழ்ந்தது. அதில் அவன் வெகுபாடுபட்டுத்தான் ஜயிக்க முடிந்தது. இரண்டு பக்கங்களிலும் அப்போரில் கடும் உயிர்ச் சேதம். கலிங்கப்

படையில் ஒருவன் கூடப் போர்க்களத்தி லிருந்து மீளவில்லை. அவன் போர்க்களத் தைச் சுற்றிப் பார்த்தான். போர்க்களத்தில் சவங்களுக்கிடையில் ஓர் உயிர் மரணத் தோடு போராடிக் கொண்டிருந்தது. அன் புடன் அங்குச் சென்று உயிருடன் போரா டிக்கொண்டிருந்த போர்வீரன் தலையை மடியில் எடுத்து வைத்துக்கொண்டான். அவன் கண்விழித்துச் சிறிது ஜலம் வேண் டும் என்றான். ஜலம் கொண்டுவந்து தந் தார்கள். ''போர்வீரனே, நீ உயிர்பெற்று வாழவேண்டும் என்று பெரிதும் விரும்பு கிறேன். நீ யார் கையிலிருந்து நீர் வாங் கிப் பருகுகிறாய் என்று அறிந்தால் மகிழ் வாய்'' என்று அன்புடன் சொன்னான் அசோகன். நீங்கள் யார் என்று அறியலாமா என்று அப்போர்வீரன் கேட்டான். அசோ கன் என்று தெரிந்ததும் அவன் தண் ணீர்க் கோப்பையை விட்டெறிந்துவிட் டான். ''எங்கள் தேசத்தைப் பாழ்படுத்திய கொலைவெறியன் நீதானா? எனக்கு உயிர் மேல் பற்று இல்லை. மானம் பெரியது. என் தாய்நாட்டின்மேல், என் வீரப் பரம்பரை யின்மேல், என் நாட்டுப் பண்பின் மேல் களங்கத்தை உண்டுபண்ண மாட்டேன். உனக்கு நல்ல மனம் இருந்தால் எங்கள் தேசத்தை முன்போல் சுதந்திரமாய் வாழ விடு'' என்று சக்தியையெல்லாம் திரட் டிப் பேசிவிட்டு அவன் உயிர் துறந்தான். அசோகனின் மனம் கனத்தது. நெஞ்சு வலித்தது. கண்ணீர் சொரிந்தான். ஒரு போர்வீரனைக் கூட வெற்றிகொள்ள முடி யாத என் வெற்றி ஒரு வெற்றியா? நான் ஒரு சக்கரவர்த்தியா? பேரரசனா? என்று புலம்பினான். இந்தப் போர் நிகழ்ச்சிதான் அவன் மனதை மாற்றியது. அன்றுமுதல் அவன் புத்தரைப் பின்பற்றினான். க்ஷத்திரிய பலம் வெறும் உடல் பலம், மிருக பலம். பிராம்மண பலம் என்பது தெய்வபலம். சீலத்தின், அருளின், அன்பின், இரக்கத்தின், தியாகத்தின் பலம் ஆகும். இதுவே உலகை வெல்லும். இதுவே ஹிந்துக்களின் பாதை. இதுவே ஹிந்து மதம் எனப்படுகிறது. ஆகவே அரசாங்கம் மதத்தைக் கண்ணியப் படுத்தி அதன் வழி ராஜ்யபாரம் பண்ணி னால் அது அருளாட்சியாக மலரும். தசரதன் வசிஷ்டர் வழி நடந்தார். சிவாஜி சமர்த்த ராமதாசர் வழியில் நடந்தார். தமிழ் மூதாட்டி ஔவையின்ஆணைப்படி பல தமிழ் அரசர்கள் ராஜ்ய பாரம் செய்தார்கள். இங்கு ராஜ்யத்துக்கும் செல்வத்துக்கும் இரண்டா வது இடம்தான். மதிப்புக்கும் வணக்கத் துக்கும் உரியவர் சான்றோர், ரிஷிகள், பிராம் மணர்கள் ஆவார்கள். இன்றைய அரசியல் வாதி 'ஆட்டுக்குட்டியும் ஓநாயும்' என்கிற கதையில் வருகிற ஓநாய் போன்றவன். குளத்து மீன்களின் பேரில் பேரிரக்கம் காட் டுவது போல் பேசி அவைகளை ஒட்டுமொத்த மாகக் கொன்று தீர்த்த கொக்குக்கு நிகராவான். கீழ்மையின்பேரில் மக்களுக்கு வெறுப்பு ஏற்படவேண்டும். மக்களே, எந்த ஆட்சி நல்லது என்று தீர்மானியுங்கள். உலக மோகங்களினின்று மனதைத் திருப்பி அருள் வழியில் செலுத்துங்கள். மக்களைச் சன் மார்க்கத்தில் ஈடுபடுத்த அரசியல் துணை நிற்கவேண்டும். நல்ல அரசியல் அமைய மக்கள் மனம் மாறவேண்டும். இரண்டும் ஒன்றை ஒன்று சார்ந்தவை. மக்கள் மன தைப் பொருள் ஆட்சி செய்யக்கூடாது. அருள் அதை ஆட்சி செய்யவேண்டும். அதன் புறத்தோற்றமாக நல்ல அரசியல் அமையும்.

செய்திகள்

நிகழ்பவை:

அக்டோபர் மாதம் 26ஆம் தேதி செவ்வாய்க் கிழமை அன்று இரவு ஸ்ரீ விவேகானந்த வித்யா வன குருகுல மாணவர்கள் குழுக்களாகச் சேர்ந்து சரஸ்வதி பூஜையைச் சிறப்பாகக் கொண்டாடுவார்கள்.

ஸ்ரீ விவேகானந்த வித்யாவன குருகுல மாணவர்கள் நவம்பர் மாதம் 9ஆம் தேதி செவ் வாய்க்கிழமை அன்று மாலை 3 மணிக்கு மேல் தீபாவளி விடுமுறைக்காக அவரவர்கள் ஊருக் குப் புறப்படுவார்கள்.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்

இயற்றிய நூல்கள்

திருவாசகம்	பிரசார விலை ரூ.	23-00
ஸ்ரீமத் பகவத்கீதை 14-ம் பதிப்பு	,, ...	18-00
மஹாபாரதம்	,, ...	7-00
ஸ்ரீ தாயுமானசுவாமி பாடல்கள்	,, ...	6-00
ஸ்ரீ ராமகிருஷ்ணர் உபதேச மஞ்ஜரீ	,, ...	5-50
தினசரி தியானம்	,, ...	4-00
கர்மயோக விளக்கம்	...	10-00
ஞானயோக விளக்கம்	...	8-00
ராஜயோக விளக்கம்	...	8-00
பரமஹம்சரின் பெருமை	...	6-00
ஸ்ரீ விவேகானந்தர் ஜீவிதம்	...	6-00
கடவுளின் வடிவங்கள்	...	6-00
விவேகானந்த விவரணம்	...	4-00
அனுஷ்டான வேதாந்தம்	...	3-00
எதிர்கால இந்தியா	...	3-00
திருக்கயிலாயகிரி யாத்திரை	...	3-00
தேவரகசியம் (முதலிய கதைகள்)	...	2-50
தாயுமானவர் இயற்றிய		
கருணாகரக் கடவுள்	விரிவுரை ...	3-50
பரிபூரணானந்தம்	ஷை ...	3-00
சின்மயானந்த குரு	ஷை ...	3-00
ஆனந்தமானபரம்	ஷை ...	3-00
சுகவாரி	ஷை ...	3-00
மௌனகுரு வணக்கம்	ஷை ...	3-00
எங்குநிறைகின்றபொருள்	ஷை ...	2-50
பரசிவ வணக்கம்	ஷை ...	1-00
கண்ணன் என்னும் கடவுள்	...	2-50
ஹரிச்சந்திரன்	(நாடகம்) ...	2-00
விரதவீரர் பீஷ்மர்	ஷை ...	1-50
விபீஷணன் சரணாகதி	ஷை ...	1-50
பரமஹம்சர் பாமாலை	...	1-50
காயத்ரீ	...	1-50
நன்மக்களைப் பெறுதல்	...	1-50
அமரநாத யாத்திரை	...	1-25
சந்நியாசி	...	1-25
செத்தவர்கள் நம்மோடு பேசுகிறார்களா?	...	1-25
இறைவணக்கம்	...	1-00
குழந்தைகளின் களிக்கூடம்	...	1-00
இராவண தத்துவம்	...	1-00
வாலி மோட்சம்	(நாடகம்) ...	1-00
தவப்புதல்வர்கள்	,, ...	1-00
ஏகலைவ்யனின் குருபக்தி	,, ...	1-00
தானவீரன் கர்ணன்	,, ...	1-00
பார்வதி, லக்ஷ்மி, சரஸ்வதி கர்வபங்கம்	...	1-00
மார்க்கண்டேயன்	(நாடகம்) ...	1-00

பிரஹ்லாதன்	(நாடகம்) ரூ.	1-00
தபோபலன்	(நாடகம்) ...	1-00
இந்துமதமும் கிறிஸ்துவ மதமும்	...	1-00
நோய்க்கு இடம் கொடேல்	...	1-00
*ஆத்ம சக்தி	...	1-00
*ஆலய வழிபாடு	...	0-75
*சக்தி தத்துவம்	...	0-70
*சிவதத்துவம்	...	0-70
*மனிதனது நிஜசொருபம்	...	0-70
தாயுமானவர் ஆலயத்தில் தத்துவ அமைப்பு	...	0-60
நன்னெறிகளும் அருள்வாக்குகளும்	...	0-60
*கணபதி	...	0-60
*முருகக் கடவுள்	...	0-50
*விஷ்ணு தத்துவம்	...	0-50
தெய்வீக மகிமைகள்	...	0-50
கர்மகாண்டம்எது? ஞானகாண்டம்எது?		0-50
வர்ணாச்ரம தர்மம்	...	0-30
அருள் விருந்து 1 to 25 ஒவ்வொன்றும்	...	0-30
விவேகானந்தரின் வீர கர்ஜனை	...	0-30
கந்தர் அநுபூதி	...	0-25
The Bhagavad Gita (11th Imp:)	...	24-00
Tirukkural (with plastic cover)	...	8-00
The Indian National Education	...	8-00
Ramakrishna Lives Vedanta	...	8-00
Facets of Brahman or The Hindu Gods	...	5-00
Daily Divine Digest (DELUXE)	...	4-50
Daily Divine Digest (Ordinary)	...	2-50
Mahabharata	(with plastic cover) ...	6-00
Sri Krishna-The Manifest Divinity	,, ...	6-00
Sri Vishnu Sahasranama Stotram	...	4-00
The Bhagavad Gita (Small Size)	...	4-00
Siva Sahasranama Stotram	...	3-50
Bheeshma The Superman	...	3-50
Hinduism Hosts Christianity	...	3-00
Holy Bible—In the Light of Vedanta	...	1-50
Reminiscences of Master Mahashaya	...	1-50
*Introducing the Gita	...	1-50
The Garland of Paraaparam	...	1-50
*Key to Higher Life	...	1-25
*The Student	...	1-25
TAT TVAM ASI *That Thou Art* IN Tayumana Swami	...	1-00
*The Nursery School	...	1-00
*The School	...	1-00
*The Teacher	...	1-00

தேவையான புத்தகங்களுக்கு உரிய விலையுடன் தபால் கட்டணத்திற்காக கீதை, திருவாசகத்திற்கு ரூ. 5-00ம், மஞ்ஜரீக்கு ரூ. 1-80ம் மஹாபாரதத்திற்கு ரூ. 1-80ம் தினசரி தியானத்திற்கு ரூ 1-40ம் மற்ற வெளியீடுகளுக்கு ரூ. 3-00 முதல் ரூ. 5-00 வரையும் சேர்த்து அனுப்புங்கள். * இப்புத்தகங்கள் ஏனைய பெரியபுத்தகங்களில் அடங்கியுள்ளன.

இதுவரை புதிய திட்டத்தின்கீழ் புதுப்பித்துக்கொள்ளாத

டிபாசிட் சந்தாதாரர்களுக்கு

முக்கிய அறிவிப்பு

கடந்த 1—6—82 முதல் தவிர்க்கமுடியாத சூழ்நிலையில் டிபாசிட் சந்தா தொகையை ரூ. 100-00லிருந்து ரூ. 150-00 ஆக உயர்த்தியுள்ள விவரம் ஆனி, ஆடி, ஆவணி மாத தர்ம சக்கர இதழ்களில் அறிவிப்பு செய்திருந்தோம். பின்னர் புரட்டாசி மாத தர்ம சக்கரத்தில் புதிய திட்டத்தின் அடிப்படையில் சந்தா செலுத்தி புதுப்பித்துக்கொள்ளாத டிபாசிட் சந்தாதாரர்களுக்குமட்டும் உடன் கூடுதல் டிபாசிட் தொகை ரூ. 50-00யும் அனுப்பித் தந்து புதுப்பித்துக்கொள் ளக் கோரி அறிவித்திருந்தோம். அவ்வாறு புதுப்பித்துக்கொள்ள விரும்பாத, இயலாத, சந்தாதாரர்களுக்கு அவர்களது டிபாசிட் தொகை ரூ. 100க்கு 7 ஆண்டு களுக்கு சந்தாவை பதிந்துகொண்டு இதழ் அனுப்பித் தரும் விவரமும் கேட்டிருந் தோம். இவ்வளவு அறிவிப்பிற்குப் பின்னரும் பல அன்பர்கள் இதுவரை பதிலும் எழுதாது மேலும் கூடுதல் டிபாசிட் தொகை ரூ. 50-00யும் அனுப்பித்தராமல் உள்ளனர். ஆதலால் இந்த அறிவிப்பையே இறுதியாகக்கொண்டு 31-10-1982க் குள் கூடுதல் டிபாசிட் தொகை ரூ. 50-00யும் தங்கள் வசமுள்ள பழைய டிபாசிட் ரசீதுகளையும் உடன் அனுப்பித் தந்து பதிந்துகொண்டு தொடர்ந்து இதழைப் பெறக் கோருகிறோம். பழைய ரசீதைத் தேடியும் கிடைக்காத அன்பர்கள் கிடைக் காத விவரத்தை எங்களுக்குத் தெரிவிக்கலாம். இந்த அறிவிப்பு கிடைத்தவுடன் ஆவன செய்யக்கோருகிறோம்.

காரியதரிசி

ஸ்ரீ ராமகிருஷ்ணமடம்-ராமேஸ்வரம்

1981 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12 ஆம் தேதி இம்மடாலயம் துவக்கப் பெற்றது. அன்று முதல் அங்கு மஹேஸ்வர பூஜை முறையில் அன்னம் வழங்குதல் நடைபெற்று வருகிறது. இதில் யாத்ரீகர்களும், உள்ளூர் பள்ளி மாணவர்கள் சிலரும் கலந்துகொள்கின்றனர். இவ்வாண்டு ஜுலை, ஆகஸ்ட் ஆகிய இரண்டு மாதங்களிலும் எல்லா வேளைகளிலும் 3937 பேர் உணவு ஏற்றுக்கொண்டனர். அதற்கான உணவுச் செலவு ரூ. 9 487. உண்டியல் மூலமும் அன்பர்கள் நேரில் தந்ததுமாக ஆகஸ்ட் முடிய வந்த நன்கொடை வரவு ரூ. 2 787. இம்மடாலயத் தைப் புதுப்பிக்கும் வேலை நடைபெற்று வருகிறது. ஆகஸ்ட் மாதம் முடிய இதற்கு ஆகியுள்ள கட்டிடச் செலவு ரூ. 2 08 350.

Edited by SWAMI NITHYANANDA,
Printed & Published by Swami Sankarananda at Tapovanam Printing School, Tirupparaitturai, Tiruchi Dt.